இனி அது ரகசியம் அல்ல!

ஐக்கிய தேசியக் கட்சியின் பிர தித் தலைவர் சஜித் பிரேமதாஸ வுக்கு இதுபோதாத காலம்போலும். கட்சிக்குள் ஜனாதிபதி வேட் பாளர் நியமனம் பெறுவதற்கு ஒரு பிரளயமே ஏற்பட்டது போன்ற ஒரு போராட்டத்தை அவர் முன்னெடுக்க வேண்டியிருந்து. பக்கம் 02 »

பக்கங்கள்: 21

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 06 ஞாயிற்றுக்கிழமை 22.12.2019 கதிர் 47

# ஈழத் தமிழரின் நலன் காக்கும் கடப்பாடு பிரிட்டனுக்கு உண்டு



## பிரதமர் பொறிஸ் ஜோன்சனின் தேர்தல் வெற்றியை பாராட்டி விக்கி எழுதிய கடிதத்தில் வலியுறுத்தல்



யாழ்ப்பாணம், டிசெம்பர்,22

இலங்கையில் பிணக்கைத் தீர்த்து, மனித உரிமை மீறல்கள் இடம்பெறாமல் தடுக்கும் வரலாற்றுக் கடப்பாடும் பொறுப்பும் பிரிட்டனுக்கு உண்டு.

ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டிக் கட்டமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் மனித உரிமைகள் நிலைநாட்டப்படுகின்றமையை உறுதிப்படுத்தி, தமிழர்களின் பாதுகாப்பையும் நலனையும் பேணுவதற்கு இன்னும் காலம் பிந்திவிடவில்லை.

– இப்படி பிரிட்டனின் பொதுத் தேர்தலில் வெற்றியீட்டிய பிரதமர் பொறிஸ் ஜோன்சனுக்குத் தாம் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கட்சியின் ஸ்தாபகரும், செயலாளர் நாயகமுமான நீதியசரர் சி.வீ.விக்னேஸ்வரன். பக்கம் 02 »

## அடுத்த இலக்கு ரிஷாத்? விசாரணை ஆரம்பமாம்!

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் அரச நிதியைத் தவறாக பயன்படுத்திய குற்றச்சாட்டுத் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக பக்கம் 03 »

## ராஜிதவின் ஊடகச் செயலர் வெளிநாட்டுக்குத் தப்பினார்?

### வலை விரித்துத் தேடுகிறதாம் பொலிஸ்



ராஜித சேனாரத்ன சுகாதார அமைச்சராக பதவி வகித்த போது அவரது ஊடகச் செயலாளராகக் கடமையாற்றிய எம்.ஐ.ஜே. பக்கம் 03 »

## மணல் கடத்தல்காரர்களை ஓடஓட விரட்டினர் மக்கள்

### குடத்தனையில் நேற்றுச் சம்பவம்



யாழ்ப்பாணம், டிசெ. 22

வடமராட்சி கிழக்கில் சட்டத்துக்குப் புறம்பாக மணல் அகழ்வில் பக்கம் 03 »

## வடக்கு ஆளுநர் பதவியை சாள்ஸ் இன்னும் பெறுப்பேற்கவில்லையாம்!

'வடக்கு முதல் பெண் ஆளுநராக திருமதி சாள்ஸ் நேற்று நியமனம்' – என்ற தலைப்பில் நேற்றைய காலைக்கதிர் நாளிதழின் முதற் பக்கத்தில் வெளியான செய்தி தவறானது என்பது அறியவந்துள்ளது. பக்கம் 03 »

## அரசுக்குள் சு.கவுக்கு இழிநிலையாம் சீறுகின்றார் அதன் செயலர் தயாசிறி!



கொழும்பு,டிசெ.22

இந்த அரசாங்கத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தற்பொழுது பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருவதாக அக்கட்சியின் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பக்கம் 03 »

## இன முரண்பாட்டை ஏற்படுத்தும் பௌத்த சின்னங்கள் வேண்டாம்!

### விந்தன் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், டிசெ. 22

இன முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையில் சட்டவிரோதமாக பௌத்த சின்னங்கள் வைப்பதை அரசு நிறுத்திக் கொள்ள பக்கம் 03 »

## இடம்பெயர்ந்தோரைச் சொந்த நிலங்களில் குடியமர்த்துமாறு கோட்டாபய பணிப்புரை

### யாழ். வந்த தொண்டமான் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 22

இடம்பெயர்ந்து முகாம்களிலுள்ள மக்களை விரைவாக அவர்களது சொந்த நிலங்களில் குடியமர்த்துமாறு பக்கம் 03 »

## யாழ்.சிறைக்கு முன்பாக வைத்த சர்ச்சைக்குரிய சிலை அகற்றல்!

### பொதுமக்களின் எதிர்ப்பை அடுத்து



யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு முன்பாக வைக்கப் பட்டிருந்த சர்ச்சைக்குரிய சிலைகள்பொதுமக்களின் எதிர்ப்பால் நேற்றுச் சனிக்கிழமை அகற்றப்பட்டன.

பொதுமக் பக்கம் 03 »

## பௌத்த சின்னங்களை நிறுவ அனுமதியோம்!

### மாவை எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 22

யாருக்கும் தெரியாமல் யாழ்ப்பாணம் சிறைச்சாலை நிர்வாகத்தினால் பௌத்த சின்னங்கள் – பௌத்த சிலைகள் – அமைக்க எடுக்கப்பட்ட பக்கம் 03 »

## மணல் கொள்ளைக்கு எதிராக யாழில் இன்று போராட்டங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்ப்பாணக் குடாநாடு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் சட்டத்துக்குப் புறம்பாக மணல் அகழ்வு பக்கம் 03 »


## பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 22

சட்டத்துக்கும் வரலாற்றுக்கும் புறம்பாக யாழ்ப்பாணம் சிறைச்சாலை முன்பாகப் பண்ணை வீதிக்கு அண் பக்கம் 03 »

## சிறைச்சாலை வெளிச்சுவரில் சங்கிலிய மன்னனின் ஓவியம்

### அனுமதி கோருகிறார் சிவாஜிலிங்கம்



யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் முகப்புச் சுவர்களில் ஒரு பக்கத்தில் சங்கமித்தை மாதகலில் வந்து கரையி பக்கம் 02 »

## ஈழத் தமிழரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொன்சர் வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த பிரதமர் பொறிஸ் ஜோன்சனின் தேர்தல் வெற்றியை ஒட்டி அவருக்கு அனுப்பிய வாழ்த்துக் கடிதத்தில் விக்னேஸ்வரன் தெரிவித்த விடயங்களின் சாராம்சம் வருமாறு:-

அண்மைய தேர்தலில் வென்றமைக்கு எமது வாழ்த்துக்கள்.

தங்களின் கொன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த முன்னைய பிரதமர் டேவிட் கமரூன் கடைசியாக இலங்கைக்கு விஜயம் செய்தபோது அவரைச் சந்திக்கும் அதிர்ஷ்டம் கிட்டியது. மிக விரைவில் வடக்கு மாகாணத்துக்கு உங்கள் விஜயமும் இடம்பெறுகின்றமையையும் எதிர்பார்த்து இருக்கின்றோம்.

பிரிட்டனில் வாழும் தமிழர்களின் உயர்ந்த நண்பர் நீங்கள் என்பது நாடறிந்த விடயம். இலங்கையிலும் பிரிட்டனிலும் உள்ள தமிழர்கள் உங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளமையுடன் உங்களிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கின்றனர்.

எங்கள் மக்கள் தங்கள் பாரம்பரிய பூமியில் இடம்பெறும் அரச அடக்குமுறை, இராணுவ ஆக்கிரமிப்பு, சிங்களக் குடியேற்றங்கள் போன்றவற்றாலும் அவற்றின் விளைவுகளினாலும் தொடர்ந்து பாதிக்கப்பட்டு அல்லலுற்று வருகின்றனர்.

இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்த்து, மனித உரிமை மீறல்களுக்கு முடிவு கட்டும் வரலாற்றுப் பொறுப்பு பிரிட்டனுக்கு உண்டு.

பிரிட்டனின் கொலனித்துவ நாடாக்கப்பட்டவற்றுள் இலங்கையும் ஒன்று. 1833இல் இங்கு பிரிட்டனால் மேற்கொள்ளப்பட்ட நிர்வாக மாற்றங்களே இலங்கையில் இனப்பூசல்கள் ஏற்படக் காரணம் என்பது பொதுவாக நம்பப்படுகின்றது.

அந்தக் காலம் வரை தனி நாடாக இருந்த வடக்கும் கிழக்கும், எஞ்சிய சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசத்துடன் இணைக்கப்படாமல் தொடர்ந்து சுயநிர்ணய உரிமையுடன் இருக்க அனுமதிக்கப்பட்டிருக்குமானால் இந்த நாட்டின் இனப்பூசல்களை நாம் தவிர்த்திருக்கலாம்.

ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டிக் கட்டமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் மனித உரிமைகள் நிலைநாட்டப்படுகின்றமையை உறுதிப்படுத்தி, தமிழர்களின் பாதுகாப்பு நலனைப் பேணுவதற்கு இன்னும் காலம் கடந்துவிடவில்லை.

இலங்கைத் தீவில் பொறுப்புக் கூறல், நீதி நடவடிக்கை, மீள் நல்லிணக்கம் ஆகியவற்றைத் தூண்டித் துலங்கச் செய்வதற்கான அவசியத்தை, பிரிட்டனில் உள்ள தமிழ் மக்களுக்குத் தேர்தலுக்கு முன்னரான செய்தியாக நீங்கள் விடுத்தமையை நாம் நினைவு கூரவிரும்புகின்றோம்.

இங்கு இடம்பெற்றவையாகக் கூறப்படும் மனித உரிமைகள் துஷ்பிரயோகம் தொடர்பாக முழு அளவிலான சுயாதீன – சுதந்திர –விசாரணைகளை நடத்துமாறு 2013இல் இலங்கைக்கு விஜயம் செய்த உங்களின் முன்னாள் பிரதமர் டேவிட் கமரூன் இங்கு இலங்கைக்கு அரசை வலியுறுத்தியமையை நான் இச்சமயத்தில் நினைவூட்ட விரும்புகிறேன்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் நீதியரசர் விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்துள்ளார். (உ)

## அருளரின் நினைவுப் பகிர்வு

மறைந்த ஈரோஸ் தலைவர் அருளப்பு அருள்பிரகாசத்தின் நினைவுப் பகிர்வு நிகழ்வு யாழ்ப்பாணம் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்றது.

இதன்போது மறைந்த அருள்பிரகாசம் கடந்த காலங்களில் முன்னெடுத்த செயற்பாடுகள் தொடர்பிலும் தமிழ் மக்களுக்காக அவர் செய்த விடயங்கள் குறித்தும் அங்கு கலந்து கொண்டிருந்தவர்கள் தமது நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அருள் பிரகாசத்தின் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் ஈ.பி.ஆர்.எல். எவ் அமைப்பின் தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், வட மாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா உட்பட பல கட்சிகளின் பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ–07)





## சம்பிக்கவை சிறையில் சந்தித்தார் சபாநாயகர்

விபத்து தொடர்பான வழக்கில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் பாட்லி சம்பிக்க ரணவக்கவை சபாநாயகர் கருஜயசூரிய வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று சந்தித்தார்.

அதேநேரம் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் நேற்று வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு சென்றிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் பாட்லி சம்பிக்க ரணவக்கவை கைது செய்யும் அளவுக்கு அவர் குற்றம் புரியவில்லை எனவும், அவர் ஏற்படுத்தியதாகக் குறிப்பிடப்படும் விபத்தில் காயமடைந்தவர் தற்போது நலமுடன் இருக்கிறார் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிட்டனர்.

இவ்வாறான செயற்பாடுகள் அரசியல் பழிவாங்கல்களுக்காகவே முன்னெடுக்கப்படுகின்றன எனவும், சம்பிக்க ரணவக்கவைச் சிறையில் சென்று நலன் விசாரித்த ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் மேலும் கூறினர். (ஐ)

## சிறைச்சாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றங்குவதைச் சித்திரித்து ஓவியம் வரையப்பட்டது போன்று மற்றைய சுவரில் சங்கிலிய மன்னனின் ஓவியத்தை வரைவதற்கு அனுமதிக்க வேண்டும்.

–இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ்ப்பாணம் சிறைச்சாலை உதவி அத்தியட்சகரிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பில் எழுத்துமூல கோரிக்கையை முன்வைத்தால் சிறைச்சாலைகள் திணைக்களத்திடம் அனுமதி கேட்கப்படும் என்று யாழ்ப்பாணம் சிறைச்சாலை உதவி அத்தியட்சகர் பதிலளித்தார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் முகப்புச் சுவர் ஒன்றில் பௌத்த அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் சங்கமித்தை தோணியின் மூலம் மாதகல் கரையில் வந்திறங்கியதைச் சித்திரித்து ஓவியம் வரையப்பட்டுள்ளது.

அந்த இடத்தில் நேற்றுப் புத்தர் சிலையைத் திறந்து வைக்கவுள்ளதாக தகவல் அறிந்த பொதுமக்களும் மக்கள் பிரதிநிதிகளும் அங்கு கூடி வெளியிட்ட எதிர்ப்பால் அந்தச் சிலை அங்கிருந்து அகற்றப்பட்டது.

இதன்போதே யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் முகப்பு சுவர் ஒன்றில் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த சங்கிலிய மன்னனின் ஓவியத்தை வரைய அனுமதிக்குமாறு எம்.கே.சிவாஜிலிங்கம் கோரினார். (ஐ–07)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவாறு கடைசி நேரத்திலாவது அதனைப் பெற்றுத் தேர்தலில் குதித்தாராயினும் அதில் அவருக்குப் பெரும் தோல்வி.

அதையடுத்து, இப்போது அவரது கட்சி அரசைத் துறந்து, எதிர்க்கட்சிப் பக்கம் வந்து அமர்ந்த போது எதிர்க்கட்சித் தலைவர் பதவியைப் பெறுவதற்கும் அவர் கடும் பிரயத்தனம் – போராட்டம் – செய்யவேண்டியிருந்தது.

நீண்ட இழுபறிக்குப் பின்னர் ஒருவாறு எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு அவரது தரப்பு எம்.பிக்கள் எல்லோரும் இணங்கி, ஆதரித்து, கட்சியின் சார்பில் – நாடாளுமன்றக் குழுவின் சார்பில் – எதிர்க்கட்சித் தலைவராக அவரை நியமிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது. அது குறித்து சபாநாயகருக்கும் அறிவிக்கப்பட்டு விட்டது. அவரும் ஏற்றுக்கொண்டுவிட்டார்.

எனினும் அந்தப் பதவியும் அவருக்குக் கைக்கெட்டியும் வாய்க்கு எட்டாதமை போல நழுவிப்போய் விடலாம் என்று ஒரு தகவல் கூறப்படுகின்றது.

சஜித் பிரேமதாஸ எதிர்க்கட்சித் தலைவராக நியமிப்பதற்கு சபாநாயகர் இணங்கினாலும் கூட அது குறித்து அவர் நாடாளுமன்றத்தில் உத்தியோகபூர்வமாக அறிவித்த பின்னர்தான் அவர் எதிர்க்கட்சித் தலைவராக உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்படுவார்.

ஆனால் தற்போதைய நாடாளுமன்றத்தில் அப்படி சஜித் பிரேமதாஸவை புதிய எதிர்க்கட்சித் தலைவராக சபாநாயகர் கரு ஜயசூரிய அறிவிப்பதற்கு வாய்ப்பின்றியே இந்த நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விடலாம் என்று ஒரு பேச்சு அடிபடுகின்றது. அதுதான் விடயமாகும்.

தற்போது ஜனாதிபதியின் விசேட உத்தரவின் கீழ் நாடாளுமன்றம் இடைநிறுத்தப்பட்டிருக்கின்றது. அது எதிர்வரும் ஜனவரி 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை கூடுகின்றது.

இடைநிறுத்தப்பட்ட பின்னர் புதிதாகக் கூடும் நாடாளுமன்றம் என்பதால் காலை முதல் நிகழ்வில் ஜனாதிபதியின் விசேட அங்குராப்பண உரை இருக்கும். அதுதான் அன்றைய தினம் காலையில் முதல் நிகழ்வு.

வெள்ளிக்கிழமை ஆதலால் அன்றைய தினம் நாடாளுமன்றம் பிற்பகலில் கூடாது. கூடுவதில்லை.

காலையில் ஜனாதிபதியின் அங்குராப்பண உரை முடிந்ததும் தேநீர் ஒன்று கூடலுக்காக ஒத்திவைக்கப்படும் சபை, பிற்பகலுக்கு இடையில் ஒரு தடவை மீண்டும் கூடுமாயின் அப்போது எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸவை சபாநாயகர் உத்தியோகபூர்வமாக அறிவிக்க வாய்ப்பு ஏற்படும்.

அப்படி இல்லையெனின் அடுத்த அமர்வுக்காக நாடாளுமன்றம் கூடும் வரை காத்திருக்கவேண்டும்.

ஆனால் எதிர்வரும் 3ஆம் திகதி ஜனாதிபதியின் உரைக்காக நாடாளுமன்றம் கூடி, அந்த அமர்வு ஒத்திவைக்கப்பட்டதுமே மீண்டும் நாடாளுமன்றத்தை மேலும் இரண்டு மாதங்கள் இடைநிறுத்தும் பிரகடனம் ஒன்றை ஜனாதிபதி விடுப்பார் என்றும்–

அப்படி இரண்டு மாதங்கள் ஒத்திவைக்கப்படும் நாடாளுமன்றம் மீண்டும் மார்ச் 3ஆம் திகதி கூட வேண்டியிருக்கும் சமயத்தில், தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதியின் கைகளுக்கு வந்திருக்கும் என்பதால் அன்றைய தினத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்து, புதிய பொதுத்தேர்தலுக்கு உத்தரவிடும் பிரகடனத்தை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ விடுப்பார் என்றும் –

விடயமறிந்த சில வட்டாரங்கள் தகவல் வெளியிடுகின்றன.

தற்போதைய நாடாளுமன்றத்தில் ராஜபக்ஷக்கள் கூட்டு அரசு அமைத்திருந்தாலும் அதற்குப் போதிய பெரும்பான்மை இல்லை என்பது வெளிப்படையானது.

போதிய பெரும்பான்மை இல்லாத சிறுபான்மை அரசு ஒன்றை வைத்துக் கொண்டு நாடாளுமன்றுக்கு முகம் கொடுத்து மூக்குடைபடுவதை விடுத்து –

தற்போதைய நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான சட்டரீதியான அதிகாரத்தை ஜனாதிபதி பெற்றுக் கொள்ளும் நாள் வரை, ஜனாதிபதிக்கு இருக்கும் நாடாளுமன்றத்தை இடைநிறுத்தும் அதிகாரத்தை தொடர்ந்து பயன்படுத்தி நாடாளுமன்றத்தை முடக்கி, சமாளித்து, நாடாளுமன்ற அமர்வை எதிர்கொள்ளாமலேயே பொதுத்தேர்தலை சந்திக்கலாம் என்பது ஆட்சித் தரப்பின் மேலிடத்தின் திட்டம் எனத் தெரிகின்றது.

அப்படி நிலைமை தொடருமானால் –

ஜனாதிபதியின் அங்குராப்பண உரை தவிர்ந்த ஏனைய எந்த நாடாளுமன்ற அமர்வையும் எதிர்கொள்ளும் வாய்ப்பு இந்த நாடாளுமன்றுக்கு இம்முறை கிட்டாவிடில் –

அடுத்த பொதுத் தேர்தல் முடிந்து, அடுத்த நாடாளுமன்றம் கூடும் வரை சஜித் பிரேமதாஸவுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை உத்தியோகபூர்வமாகப் பெறும் வாய்ப்பு கிட்டவே கிட்டாது என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அப்படி நடக்குமானால், எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமக்கு 'கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலையில்' சஜித் பிரேமதாஸ ஏமாற வேண்டியதுதான்.

★ ★ ★

யாழ்.சிறைச்சாலை முன்னால் பௌத்த சின்னங்களான சிலைகள் வைக்கப்பட்ட விவகாரத்தை ஒட்டி நேற்றுக் காலை அங்கு இடம்பெற்ற களேபரத்துக்கு இடையில் நடந்த ஒரு சம்பவம் பற்றிய தகவல் இது.

சிறைச்சாலைக்கு வெளியே வந்த சிறை அதிகாரிகளுடன் அங்கு திரண்ட தமிழ்ப் பிரமுகர்கள், அரசியல் தலைவர்கள் சற்று சூடான வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.சிறைச்சாலையின் அத்தியட்சகர் தலைமையில் ஒரு சிறிய அதிகாரிகள் குழு வெளியே வந்து ஆட்சேபம் தெரிவித்த உள்ளூர் தலைவர்களுடன் பேச முற்பட்டது.

உள்ளூர்த் தலைவர்களின் சார்பில் நமது 'பயர் பிராண்ட்' அரசியல்வாதி எம்.கே.சிவாஜிலிங்கம் நீட்டி முழக்கினார். சுமார் பத்து நிமிடம் தமக்குத் தெரிந்த சிங்களத்தில் அவர் பொழிந்து தள்ளிய உரையை சிறைச்சாலை அத்தியட்சகர் கேட்டுக் கொண்டிருந்தார்.

சிவாஜிலிங்கத்தின் முழக்கம் ஓய்ந்ததும் தமது பதிலைக் கூறத் தொடங்கினார் சிறைச்சாலை அத்தியட்சகர்.

*"நீங்கள் சொல்வது எல்லாம் சரிதான். இந்தச் சிலை வைக்கும் முடிவை எடுத்தவன் நான் அல்லன். மேலதிகாரிகள்..."* – என்ற சரப்பட தமிழில் அவர் பதிலளிக்கத் தொடங்கியதும் கூடி நின்ற தமிழர்கள் எல்லாம் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்து போனார்கள்.

அப்போதுதான் அவர்கள் அத்தியட்சகரின் சீருடையில் இருந்த அவரின் பெயரைக் கவனித்தனர். அவர் பெயர் என்ன தெரியுமா?

பிரபாகரன். சாட்சாத் 'பிரபாகரன்' என்ற பெயர்தான்.

"சொறி... சொறி... நீங்களும் சிங்களவர்தான் என்று நினைத்து சிங்களத்தில் பேசி விட்டேன். அதற்கு மன்னித்துக்கொள்ளுங்கள்...!" – என்று சிரித்தவாறு கூறிச் சமாளித்தார் சிவாஜிலிங்கம்.

எது, எப்படியோ, ஒரு பிரபாகரனிடம் சிங்களத்தில் பேசும் நிலைமை சிவாஜிக்கு ஏற்பட்டமை ஓர் அபத்தம்தான்.

–மின்னல்–

## அடுத்த இலக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற நவம்பர் மாதம் 16ஆம் திகதி மன்னார் மாவட்டத்திற்கு வாக்காளர்களை அழைத்துச் செல்ல அரச நிதி செலவிடப்பட்டிருப்பதாக கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த விசாரணை நடைபெற்று வருகிறது எனக் கூறப்பட்டது.

## மணல் கடத்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டவர்களை மக்கள் ஒன்று திரண்டு விரட்டினர்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் குடத்தனை வடக்குப் பகுதியில் இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு, குடத்தனை வடக்கில் சட்டத்துக்குப் புறம்பாக அதிகளவு டிப்பர்களில் மணல் கடத்தல்கள் கடந்த ஒரு வாரமாக இடம்பெற்று வந்தது.

பொலிஸாருக்கு அறிவித்து நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில் குடத்தனை மக்கள் நேற்று அங்கு திரண்டனர்.

மணல் அகழ்வில் ஈடுபட்டு டிப்பர் வாகனங்களில் அவற்றைக்வ்கடத்த முற்பட்டவர்களை மக்கள் விரட்டியடித்தனர்.

மணல் கடத்தல்காரர் சவல்களால் மணல் அகழ்வில் ஈடுபட்டபடியால் அங்கிருந்து டிப்பர்களில் தப்பித்தனர்.

மணல் கடத்தல்காரர்கள் அங்கிருந்து தப்பியமையை அடுத்து ஊர்மக்கள் மணல் அகழ்வில் ஏற்பட்ட பள்ளங்களை நிரப்பிவிட்டு அங்கிருந்து சென்றனர்.

இதேவேளை, வடமராட்சி கிழக்கில் மணல் கடத்தலைத் தடுப்பதற்காக இரவு – பகல் எனச் சுழற்சிமுறையில் விழிப்புக் குழுக்களாகச் செயற்பட மக்கள் தீர்மானித்துள்ளனர். (ஐ–07)

## யாழ். சிறைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களால் புத்தர் சிலை எனவும் சிறைச்சாலை அதிகாரிகளால் சங்கமித்தையின் சிலை எனவும் கூறப்பட்ட அந்தச் சிலை பொது மக்களின் கடும் எதிர்ப்பால் சிறைச்சாலைக்குள் எடுத்துச் செல்லப்பட்டது.

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் சிறைச்சாலை கட்டடத் தொகுதி உள்ளது.

அங்கு உதவி சிறைச்சாலை அத்தியட்சகராகக் கடமையாற்றுபவரின் வழிகாட்டலிலேயே இந்தச் சிலை சிறைச்சாலைக்கு முன்பாக வீதியை ஒட்டி அமைக்கப்பட்டது.

இந்தச் சிலை கைதி ஒருவரால் 5 அடி உயரத்தில் அமைக்கப்பட்டது. சிறைச்சாலைக்கு உள்ளே இருந்த இந்தச் சிலை நேற்று முன் தினம் சிறைச்சாலைக்கு வெளியே எடுத்து வரப்பட்டது. அந்தச் சிலையை மூடி துணியால் கட்டடப்பட்டிருந்தது.

முன்னதாக சங்கமித்தை தோணியின் மூலம் மாதகல் கரையில் வந்திறங்கிய காட்சி சிறைச்சாலையின் சிலை வைக்கப்பட்ட இடத்தில் வரையப்பட்டது.

இவ்வாறு சிறைச்சாலைக்கு வெளியே வீதியில் பௌத்த சின்னங்கள் அமைக்கப்படுவதற்கு கடும் எதிர்ரப்பு எழுந்தது. அந்த இடத்தில் நேற்றுக் காலை யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர்களும் பொது மக்களும் கூடினர்.

அவர்களின் எதிர்ப்பால் சர்ச்சைக்குரிய சிலை அந்த இடத்திலிருந்து சிறைச்சாலைக்குள் எடுத்துச் செல்லப்பட்டது. (ஐ–07)

## ராஜிதவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மலித் விஜேநாயக்க நாட்டில் இருந்து தப்பிச் சென்றுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அவரைக்கைதுசெய்வதற்காக பிடியாணை பெற்றுக்கொண்ட குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் பொலிஸ் அதிகாரிகள் குழு கடந்த 14ஆம் திகதி அவரைக் கைது செய்ய அவரது வீட்டை முற்றுகையிட்டபோது அவர் வீட்டில் இருக்கவில்லை.

பொலிஸ் அதிகாரிகள் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக வீட்டை சோதனையிட்டுள்ளமையுடன் மேலதிக விசாரணைகளுக்காக விஜேநாயக்கவின் மடிக்கணனி மற்றும் இலத்திரனியல் உபகரணங்களை எடுத்துச் சென்றுள்ளனர்.

இதன்பின்னர் பொலிஸார் பல முறை விஜேநாயக்கவின் வீட்டைச்சோதனையிட்டுள்ளமையுடன் அவரது பெற்றோரிடமும் விசாரணை நடத்தியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் நடத்தப்பட்ட – சர்ச்சைக்குரிய வெள்ளை வான் சம்பந்தமான – ஊடக சந்திப்பு மற்றும் அது தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரண்டு சாரதிகளிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில் வெளியான தகவல்கள் குறித்து மேலதிக விசாரணைகளை நடத்தவே மலித் விஜேநாயக்கவைக் கைதுசெய்யக் குற்றப் புலனாய்வுத்திணைக்கள அதிகாரிகள் பிடியாணைபெற்றுக்கொண்டுள்ளனர்.

அத்துடன் கொழும்பில் அண்மையில் கடத்தப்பட்டு, அச்சுறுத்தப்பட்டார் எனக் கூறப்படும் சுவிற்ஸர்லாந்து தூதரகத்தின் பெண் அதிகாரி சம்பந்தமான விடயங்களை வெளியிட்டு, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன நடத்திய செய்தியாளர் சந்திப்பு சம்பந்தமான மேலதிக தகவல்களைக் கண்டறிவதற்காக பொலிஸார் மலித் விஜேநாயக்கவைத் தேடி வருகின்றனர் என்றும் கூறப்பட்டது.

மலித் விஜேநாயக்கவிடம் இருந்து பல முக்கிய தகவல்களை வெளிக்கொண்டு வர முடியும் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாகவே அவர் தப்பிச் சென்றுள்ள நாட்டைக் கண்டறிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மலித் விஜேநாயக்க, ராஜித சேனாரத்னவுக்கு எதிரான முக்கிய சாட்சி என்பதால், அவரை எப்படியாவது கைது செய்ய வேண்டும் எனப் பொலிஸாருக்கு மேல் மட்டத்தில் இருந்து உத்தரவிடப்பட்டுள்ளது எனப் பேசப்படுகின்றது.

## மணல் கொள்ளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெறுவதால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படப் போகும் பாதிப்பைத் தடுப்போம் என வலியுறுத்தி இன்று போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் மணல் வளம் மிகவும் சுதந்திரமான முறையில் சூறையாடப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மண் வளத்தை பாதுகாப்போம் எனும் தொனிப் பொருளில் இந்த மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டங்கள் மாவட்டத்தின் அனைத்து இடங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளன.

இன்று காலை 9 மணியளவில் வடமராட்சி கிழக்கில் இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் ஆரம்பமாகி பின்பு தென்மராட்சி, தீவகம் – மண்கும்பான் பகுதிகளிலும் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஐ–07)

## வடக்கு ஆளுநர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி சாள்ஸ்தான் அப்பதவிக்கு நியமிக்கப்படுகின்றார். ஜனாதிபதி கேட்டபாய ராஜபக்ஷ அது குறித்த தீர்மானத்தை எடுத்துவிட்டார். எனினும் அதற்குரிய நியமனக்கடிதம் இன்னும் அவருக்கு வழங்கப்படவில்லை.

சாள்ஸ் அண்மையில்தான் சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

இந்த நியமனம் காரணமாக அவரது மாதாந்த சம்பளமும், அதன் காரணமாக பின்னர் ஓய்வுகால பென்னும் பல்லாயிரம் ரூபாவினால் உயரும் என்று கூறப்படுகின்றது.

செயலாளராகப் புதிதாக நியமனம் பெற்றுள்ள அவரின் முதல் மாதச் சம்பளத்தில் அந்த அதிகரிப்பு வழங்கப்பட்ட பின்னர், அவர் அதிலிருந்து விடுவிக்கப்பட்டு மாகாண ஆளுநர் பதவியை ஏற்றாலும் –

புதிய சம்பளக் கொடுப்பனவு அடிப்படையில் அதன் பின்னர் மாதாந்த வேதனமும், அதன் அடிப்படையில் ஓய்வின் பின்னரான பென்ஷனும் அதிகமாக அவருக்குக் கிட்டும் என்று கூறப்படுகின்றது.

அதனால் சுகாதார அமைச்சின் செயலாளராக அதிகரித்த சம்பளத்தை முதல் மாதம் பெற்றுக் கொண்ட பின்னர், அந்தப் பொறுப்பியிலிருந்து விடுவிக்கப்பட்டு வடக்கு ஆளுநர் பதவியைப் பொறுப்பேற்க அவர் காத்திருக்கின்றார் என்றும் –

சுகாதார அமைச்சின் செயலாளர் என்ற முறையில் முதல் மாதச் சம்பளம் தமது கணக்கில் வரவு வைக்கப்படும் வரை அவர் புதிய ஆளுநர் பதவியை ஏற்காமல் காத்திருக்கின்றார் என்றும் – கூறப்பட்டது.

அவர் சுகாதார அமைச்சின் செயலாளராக நியமனத்தை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவிடம் பெற்றுக்கொண்டபோது எடுக்கப்பட்ட படமே நேற்றைய 'காலைக் கதிர்' நாளிதழில் முன்பக்கத்தில் அவர் ஆளுநர் பதவிக்கான நியமனத்தை ஜனாதிபதியிடமிருந்து பெறுவது போன்ற கருத்துடன் பிரசுரமாகியிருந்தது.

அந்தச் செய்தியினால் சம்பந்தப்பட்டோருக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு எமது மனவருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். (ஆ–ர்)

## பொலிஸில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மையில் பௌத்த சின்னங்களை வெளிப்படுத்தும் வகையில் சிலைகள் அமைக்கப்படுகின்றமையைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் பிரதி முதல்வர் துரைராசா ஈசன் மற்றும் மாநகர சபை உறுப்பினர் நடராசா லோகதயாளன் ஆகியோர் இந்த முறைப்பாட்டை வழங்கியுள்ளனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையின் முகப்புச் சுவர் ஒன்றில் பௌத்த அடையாளத்தை வெளிப்படுத்தும் வகையில் சங்கமித்தை தோணியின் மூலம் மாதகல் கரையில் வந்திறங்கியதைச் சித்திரித்து ஓவியம் வரையப்பட்டுள்ளது.

அந்த இடத்தில் நேற்று பௌத்த சின்னங்களை வெளிப்படுத்தும் சிலைகளை அமைத்துத் திறந்து வைக்கவுள்ளதாகத் தகவல் அறிந்த பொதுமக்களும் மக்கள் பிரதிநிதிகளும் வெளியிட்ட எதிர்ப்பால் அந்தச் சிலைகள் அங்கிருந்து அகற்றப்பட்டன. இந்த நிலையில் அங்கு சிலைகளை அமைப்பதைத் தடுக்கக் கோரி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. (ஐ–07)

## இன முரண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். இல்லையெல் அனைவரையும் அணிதிரட்டி போராட்டங்களை முன்னெடுப்போம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ அமைப்பின் முக்கியஸ்தரும் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான விந்தன் கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக முன்னெடுக்கப்படும் இந்த நடவடிக்கைக்கு எதிராக மாநகர சபை சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ள விந்தன், தமிழ் மக்களின் நலன் சார்ந்த இந்த விடயத்தில் கட்சி பேதங்களின்றி அனைத்து உறுப்பினர்களும் ஒருமித்துச் செயற்படவேண்டுமென்றும் கேட்டுள்ளார்.

யாழ் ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாணம் நகரில் அமைந்துள்ள சிறைச்சாலை திணைக்களத்துக்கு முன்பாக இரவோடு இரவாக பௌத்த சின்னங்கள் கொண்டுவரப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. இது தமிழ் – சிங்கள மக்களிடையே முரண்பாடு ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. இந்தச் சிலையை வைப்பதற்கு எதிராகப் பொது மக்கள், அரசியல்வாதிகள் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தோம். நமது எதிர்ப்பை அடுத்து தற்போது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைத் திணைக்களம் மீண்டும் பௌத்த சின்னங்கள் வைக்க முன் வருமேயானால் அது இனங்களுக்கிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தும். யாழ்ப்பாணம் மாநகரசபையின் எல்லைக்குள்ளேயே யாழ்ப்பாணச் சிறைச்சாலை அமைந்துள்ளது. எனவே யாழ்ப்பாணம் மாநகரசபை இதில் கடுமையான நடவடிக்கை எடுத்து அந்த நிலையைத் தடுத்து நிறுத்த சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யாழ்ப்பாண மாநகரசபையின் எதிர்ப்பையும் மீறிச் சிலை வைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் சபையில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் கட்சி பேதமின்றி அதற்கெதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். தமிழ் மக்கள் நலன் சார்ந்த இந்த விடயங்களில் கட்சி பேதங்களின்றி செயற்படுவது மிக மிக அவசியமானது –என்றார்.

## அரசுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மூன்றாம் நிலையில் வைத்து பார்க்கும் போக்குக்கு நான் எதிர்ப்பைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கட்சியின் செயலாளர் என்ற வகையில் ஏனைய அனைவரை விடவும் கட்சி குறித்து அதிக பொறுப்பு எனக்குண்டு. – என்றும் அவர் கூறியுள்ளார்.

எந்தவொரு சவால் வந்தாலும் அதற்கு முகம்கொடுத்து கட்சியைப் பாதுகாக்கும் நடவடிக்கையை முன்னெடுக்கத் தங்கள் தயாராகவுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த அரசாங்கத்தை வெற்றி பெறச் செய்ய உந்து சக்தியாக செயற்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை இப்போது கீழ் மட்டத்துக்கு இழுத்து வீச இடமளிக்க முடியாது எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஹோமாகம வித்தியாலயத்தில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவற்றைத் தெரிவித்துள்ளார்.

## இடம்பெயர்ந்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கோட்டாபய பணிப்புரை விடுத்துள்ளார். அதற்கமைய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு முகாம்களிலுள்ள மக்கள் விரைவில் சொந்த இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள் எனச் சமுதாய வலுவூட்டல்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அமைச்சர் வலிகாமம் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களை நேரில் சென்று பார்வையிட்டார். இதன்போது அந்த மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் தேவைகள், பிரச்சனைகள் குறித்து கேட்டறிந்தார்.

இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அமைச்சர் தொண்டமான்,

இடம்பெயர்ந்துள்ள மக்களை எவ்வளவு தூரம் விரைவாக மீளக் குடியமர்த்த முடியுமோ அந்தளவு விரைவில் குடியமர்த்துமாறு ஜனாதிபதி என்னிடம் தெரிவித்திருக்கின்றார். அதற்கமைய நிலைமைகளை ஆராய்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தேன். இதன்போது முகாம்களிலுள்ள மக்களுடனும் அரச அதிகாரிளுடனும் சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளேன்.

இங்குள்ள மக்களுக்குச் சொந்தக் காணிகள் இருந்தும் அவை விடுவிக்கப்படாத நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களை குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்போம். அதே நேரத்தில் இன்னும் சிலர் காணிகள் இல்லாமலும் இருக்கின்றனர். ஆகவே காணியில்லாதவர்களுக்கு காணி வழங்கும் அரசின் திட்டத்திற்கமைய காணிகளை வழங்கி இவர்களையும் குடியேற்றுவோம் – என்றார். (ஐ–07)

## பௌத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு முன்பாக பௌத்த சிலைகள் வைப்பதற்குச் சிறைச்சாலை நிர்வாகம் முயன்றபோதும் பொதுமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் மேற்கொண்ட எதிர்ப்பின் காரணமாக அந்தப் பணி இடைநிறுத்தப்பட்டது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்தபோதே நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக் கையில் –

பௌத்த சின்னங்கள் சிறைச்சாலைக்குள் வைக்கவேண்டிய தேவை எழ முடியாது. யாருக்கும் தெரியாமல் சிறைச்சாலை நிர்வாதம் அதனைச் செய்திருந்தால், அது எதிர்க்கப்படவேண்டும் – நிறுத்தப்படவேண்டும்.

சிறைச்சாலைகளுக்கு மட்டுமல்ல, இராணுவ முகாங்கள் இருந்த இடங்களிலும் 30 ஆண்டு காலமாக இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெற்று வந்திருக்கின்றன.

இந்த ஆட்சி மாற்றத்தின் பின் யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலும் பௌத்த சின்னங்கள், பௌத்த சிலை வைப்பதற்கு முயற்சித்ததாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நாம் சிறைச்சாலைகள் ஆணையாளருக்கும் சிறைச்சாலைகளுக்குப் பொறுப்பாகவிருக்கும் நீதி அமைச்சுக்கும் மெது ஆட்சேபணையைத் தெரியப்படுத்துவோம் – என்றார். (ஐ–07)

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## சர்வதேச உடன்பாடுகளை மதிக்கும் அரசின் சீத்துவம்

சீனாவுடன் செய்து கொள்ளப்பட்ட அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்பாட்டை மாற்றியமைக்கத் தாங்கள் விரும்பவில்லை என்று திட்டவட்டமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருக்கின்றார் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

"ஓர் அரசுடன் கையெழுத்திட்ட வணிக உடன்பாடுகள், அடுத்த அரசினால் மதிக்கப்படுவதில்லை, அதனை புதிய அரசு மாற்றிவிடும் என்ற எண்ணத்தை முதலீட்டாளர்களிடம் ஏற்படுத்துவதற்கு நான் விரும்பவில்லை." – என்று தமது முடிவுக்கு அவர் காரணம் வேறு கூறியிருக்கின்றார்.

நல்லது. இந்தக் காரணம் வரவேற்கத்தக்கதுதான். ஆனால் இந்த நிலைப்பாட்டை வெளிநாடுகளுடனான வணிக உடன்பாடுகளில் மட்டும் கடைப்பிடிக்காமல், தான் செய்து கொள்ளும் சகல உடன்பாடுகளிலும் கடைப்பிடித்தால்தான் அவரது அரசு குறித்தும் நாடு குறித்தும் நம்பிக்கை பிறக்கும் என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டும்.

வெறும் வணிக உடன்பாடுகளில் மாத்திரம் அதனைக் கடைப்பிடிப்பதன் மூலம் தமது நாடும் அரசும் கீர்த்தியோ, மகிமையோ பெற்றுவிடும் என அவர் – புதிய ஜனாதிபதி – நம்புவராயின் அது விவேகமற்ற கருத்து என்பதை அவருக்குச் சொல்லி வைக்கிறோம்.

சுதந்திர இலங்கையில் கோலோச்சிய அனைத்துத் தென்னிலங்கை அரசுகளும் உடன்பாடு கண்ட விடயங்களில் உறுதியாக நிற்பவை அல்ல, குத்துக்கரணம் அடிப்பதே அவற்றின் பரவணிப் பழக்கம் என்பதுதான் எல்லோரினதும் அனுபவப் பாடமாக – பட்டறிவாக – உள்ளது.

தமிழரோடு காணப்பட்ட பண்டா – செல்வா ஒப்பந்தமாகட்டும், டட்லி – செல்வா ஒப்பந்தமாகட்டும் எல்லாம் கிழித்தெறியப்பட்டன – தென்னிலங்கை ஆட்சிப் பீடங்களினால்.

ஜெயவர்த்தனா – அமிர்தலிங்கம் பேச்சுகளில் காணப்பட்ட இணக்கமாகட்டும் –

விடுதலைப் புலிகளுடன் காணப்பட்ட ஒஸ்லோ அறிக்கை மூலமான இணக்கமாகட்டும் –

பின்னர் மஹிந்த அரசு – சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடையே நடைபெற்ற 18 சுற்றுப் பேச்சுகளின்போது எட்டப்பட்ட உடன்பாடுகளாகட்டும் –

மைத்திரி – ரணில் அரசுடன் கூட்டமைப்பு நடத்திய பேச்சுகள், நடவடிக்கைகள் மூலமான சமரச முயற்சிகளில் இணக்கம் காணப்பட்ட விவகாரங்களாகட்டும் –

எவையுமே நிறைவேற்றப்படவில்லை. வெறுமனே காலத்தை இழுத்தடித்து, நேரத்தையும், உழைப்பையும் செலவிட்டு வீணாக்கி, இறுதியில் 'இலவு காத்த கிளி' போல ஏமாற்றத்தில் முடிக்கும் விவகாரங்களாகவே அவற்றை தென்னிலங்கை முன்னெடுத்தது என்பது கண்கூடு.

இதற்கிடையில், இனப்பிரச்சினைத் தீர்வுக்காக சர்வதேச பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்ட ஏற்பாடுகளின் போது காணப்பட்ட இணக்கங்களையும் கூட இவ்வாறு ஏமாற்றல் வேலைகளாகவே தென்னிலங்கை அரசுகள் மேற்கொண்டன.

நேரடியாக இந்தியப் பிரதமரின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்பட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் கூறப்பட்ட பல விடயங்கள் இலங்கை சட்ட யாக்கத்துக்குள் கொண்டுவரப்படவில்லை. கொண்டு வரப்படுத்தப்பட்ட பலவும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. பின்னர் அவை மெல்ல, மெல்ல, சட்டவாக்கல் பிரிவுகளில் இருந்து அகற்றப்பட்டு நீக்கப்பட்டன.

இலங்கை – இந்திய ஒப்பந்தமும், அதன் பெறுபேறாகக் கிட்டிய 13ஆவது திருத்தமும் கூட இதே ஏமாற்றுதல் நாடகம் மூலம் முறியடிக்கப்பட்டன என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்.

இப்போது சர்வதேச மட்டத்தில் இன்னொரு உடன்பாட்டு ஏமாற்றுதலுக்குக் கொழும்பு தயாராகிவிட்டது என்பதை இலங்கையின் புதிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாமே கோடி காட்டியிருக்கின்றார்.

2015, 2017, 2019 என்று ஆறு வருட காலமாக இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் எடுத்த அனைத்துத் முடிவுகளையும் உள்ளடக்கிய தீர்மானங்களைத் தானே அனுசரணைப் பணிவகித்து, தானும் சேர்ந்து கொண்டு வந்து நிறைவேற்றிய பின், இப்போது அவற்றை ஒட்டுமொத்தமாக நிராகரிக்கத் தயாராகி விட்டது கோட்டா அரசு.

ஒரு நாடு அல்ல, இரு நாடுகள் அல்ல, ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் அங்கம் வகிக்கும் 48 நாடுகளுடன் இணக்கம் கண்டு, அவை தொடர்பான ஒப்பந்தங்களில் – அதுவும் ஒரு தடவை அல்ல – ஆறு வருட காலத்தில் நான்கு தடவைகள் – கையெழுத்திட்ட இலங்கை, இப்போது அந்த ஒப்பந்தங்களை எல்லாம் மறந்துவிட்டு, அல்லது உதாசீனம் செய்து ஒதுக்கி விட்டு, புதுக்கதை விடத் தயாராகி வருகின்றது.

பழைய அரசு செய்த அந்த ஒப்பந்தங்களை ஏற்க முடியாது, அவை எமது நாட்டுக்கு ஆபத்தானவை என்ற புதிய கண்டுபிடிப்பை அவதானித்துள்ள இலங்கையின் ஜனாதிபதி அந்த ஒப்பந்தங்களில் இருந்து – சர்வதேச மட்டத்தில் காணப்பட்ட உடன்பாட்டில் இருந்து – தங்கள் அரசு வெளியேறுகின்றது என்ற அறிவிப்பைத் தாம் விரைவில் விடுப்பார் எனக் கோடிகாட்டுகின்றார்.

இப்படி சர்வதேசத்தை ஆறு வருடங்கள் இழுத்தடித்து விட்டு இப்போது தீர்மானத்திலிருந்து விலகுகிறோம் என புதிய ஜனாதிபதி அறிவிக்கத் தயாராகின்றார்.

சர்வதேசக் கடப்பாடு கொண்டுள்ள ஒப்பந்தங்களிலிருந்து ஒரு தடைப்பட்சமாக வெளியேறிக் கொண்டு, பிற வணிக உடன்பாட்டை மதித்துச் செயற்படுகிறோம் என்று கூறுவது அர்த்தமற்ற, அபத்த நிலையாகும்.

# மாற்றுத் தலைமை பிரியோசனமற்றது

## சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு



வவுனியா, டிசெ. 22

மாற்றுத்தலைமை என்ற கோசத்தை வைத்தவர்கள் ஆளுக்கொரு கட்சியை தொடங்கிக் கொண்டு இன்று உருக்குலைந்து நிற்கின்றார்கள். இது ஒரு பிரயோசனமற்ற விடயமாகும் எனக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதியின் நகரை தூய்மைப்படுத்தும் திட்டத்தின் கீழ் சுவர்களில் ஓவியம் வரையும் செயற்பாடு ஒரு நல்ல விடயமாகும். எமது தமிழ் பிரதேசங்களில் எமது இளைஞர்கள் ஈடுபாட்டுடன் பங்குபற்றுவது சிறந்த விடயம். ஆனால் எமது கலாசாரத்தைச் சிதைக்கும் வகையில் மாற்றினத்தின் கலாசாரம் உள்நகர்த்தல் நடைபெறுவதாகத் தெரியவருகின்றது. அவ்வாறான செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

இராணுவத்தினர் சம்பந்தமான சித்திரங்கள் கூட சில இடங்களில் வரையப்படுகின்றன. கட்சிகள் சம்பப்பட்ட சித்திரங்கள் வரையப்படுகின்றன. எமது தமிழ் மக்களிடையே கட்சி சார்ந்த ஊடுருவல்களையும் எமது கலாசாரத்தை விலக்கி வேறு கலாசாரத்தை உள்நுழைப்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

மாற்றுத்தலைமை என்ற கோசத்தை வைத்தவர்கள் ஆளுக்கொரு கட்சியைத் தொடங்கி இன்று உருக்குலைந்து நிற்கின்றார்கள். இது ஒரு பிரியோசனமற்ற விடயமாகும். ஏதொவொரு வெளிசக்தி இவர்களை இயக்குவதாகவே சந்தேகப்படுகின்றோம். வேறு பண மூலங்கள் மூலம் இவர்கள் இயக்கப்படுகின்றார்களா என்ற சந்தேகமும் உண்டு..

இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றவர்கள் மீள்குடியேற்றம் என்ற போர்வையில் இங்கு அழைத்து வரப்படுகிறார்கள். நான் அறிந்த வகையில் சுகாதாரத் துறையினர் மலேரியத் தடை சம்பந்தப்பட்ட விடயங்களை மாத்திரமே சீராகச் செய்கின்றார்களே தவிர, அவர்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய விடயங்கள், அடிப்படை வசதிகள், இருப்பிட வசதிகள், காணி வசதிகள் எதுவுமே செய்து கொடுக்கப்படுவது இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒவ்வொரு காலத்திலும் சரியான முறையில் தீர்மானங்களை எடுத்திருந்தது. 2015 இல் ஓர் ஆட்சி மாற்றத்தின் பின் சுதந்திர ஆணைக்குழு 19ஆவது திருத்தின் அடிப்படையில் நிறுவப்பட்டது. அதன் கீழ் ஒரு ஜனநாயகச் சூழல் உருவாகியது. ஆனால் இப்போது வந்த புதிய அரசு 19ஆவது திருத்தத்தை இல்லாது செய்வதாகக் கூறிக்கொண்டு வருகிறது. 19ஆவது திருத்தத்தை இல்லாது செய்வது என்பது ஜனநாயகமற்ற அராஜகச் சூழலை இந்த நாட்டில் உருவாக்கும் என்பது நிச்சயம் – என்றார். (ஐ – 100)

## கட்சியின் பெயரைக் கூறி இளைஞன் மீது தாக்குதல்





வவுனியா, டிசெ. 22

வவுனியா கனகராஜன் குளம் பகுதியில் இளைஞன் மீது கட்சியின் ஆதரவாளர்கள் எனத் தெரிவித்து சிலர் மேற்கொண்ட தாக்குதலில் அவர் படுகாயமடைந்துள்ளார்.

வவுனியா பூந்தோட்டம் பெரியார்குளம் பகுதியைச் சேர்ந்த இந்திரலிங்கம் தீபன் (37வயது) என்பவரே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சி.சி.ரி.வி. கமரா பொருத்தும் பணியை மேற்கொள்வதற்காக கனகராஜன்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட புதிய வீடு ஒன்றுக்கு சென்றபோது, அந்த வீட்டுக்குள் அத்துமீறி உட்பிரவேசித்த கட்சியொன்றின் ஆதரவாளர்கள் தன் மீது தாக்குதல் நடத்தினர் எனப் பொலிஸ் வாக்கு மூலத்தில் இளைஞர் தெரிவித்துள்ளார்.

இந்த இளைஞர் தேர்தல் காலத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் ஊடகச் செயற்பாடுகள் தேர்தல் அறிக்கையிடல் பிரிவில் பணியாற்றி வந்துள்ளார்.

இதன்போது இளைஞனுக்கும் தாக்கிய கட்சியின் ஆதரவாளர்களுக்கு இடையேயும் கருத்து வேறுபாடு நிலவி வந்துள்ளது. இந்நிலையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த கனகராஜன்குளம் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சுற்றுலா விடுதி இடிந்ததில் 3 வெளிநாட்டவர்கள் காயம்



கொழும்பு, டிசெ. 22

பதுளை – எல்ல பகுதியில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்று, இடிந்து விழுந்ததில் அதில் தங்கி இருந்த 3 வெளிநாட்டவர்கள் காயமடைந்து தெம்மோதர பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், மேலதிக சிகிச்சைக்காக பதுளை மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணி அளவில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த மூவரும் ஆஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இடிந்து விழுந்த கட்டடம் குறித்து ஆராய்வதற்காகக் கொழும்பில் இருந்து கட்டட ஆய்வுப் பணிமனையைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று அங்கு செல்லவுள்ளது.

இந்தக் கட்டடத்தின் நிர்மானப் பணிகள் உரிய முறையில் இடம்பெற்றிருக்கவில்லை என்று, அனர்த்த முகாமைத்துவ மையம் சந்தேகம் வெளியிட்டிருக்கிறது. (ஐ)

**நாளை 23.12.2019 – திங்கட்கிழமை**

திதி :துவாதசி பி.ப 2.12 வரை
நட்சத்திரம்: விசாகம் மரண மு.இ 6.29 வரை
இராகுகாலம் : 7.55 – 9.25
சுப நேரம் : 12.25 – 1.55

# பழக்கடை வியாபாரிகளை உடனடியாகக் கைது செய்!

## யாழ்.மாநகர சுகாதாரத் தொழிலாளர்கள் நேற்றுக் காலை பணிப்புறக்கணிப்பில்



யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ்ப்பாணம் மாநகர நவீன சந்தை கட்டடத் தொகுதியில் மலசல கூடக் கட்டணம் அறவீடு செய்ப வரை நகர பழக்கடை வியாபாரிகள் இருவர் தாக்கியமையை அடுத்து அவர்களைக் கைது செய்யக் கோரி மாநகர சுகாதார ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மாநகர நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் உள்ள மலசல கூடங்களைப் பயன்படுத்துவோரிடம் கட்டணம் அறவிடப்படுகின்றது.

மலசல கூடத்தைப் பயன்படுத்திய நகர பழக் கடை வியாபாரி நேற்றுமுன்தினம் தான் இரண்டாவது தடவை பயன்படுத்துவதால் கட்டணம் செலுத்த முடியாது என்று மாநகர ஊழியருடன் தர்க்கத்தில் ஈடுப்பட்டமையுடன், அவரைத் தாக்கியும் உள்ளார்.

அதனையடுத்து சக ஊழியர் ஒருவர் நியாயம் கேட்கச் சென்றபோது மற்றொரு வியாபாரி அவரைத் தாக்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற நிலையில் யாழ்ப்பாணம் மாநகர சுகாதாரத் தொழிலாளிகள் நேற்றுப் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர்.

தாக்குதல் நடத்தியவர்கள் கைது செய்யப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து இந்தப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

தம் மீதான தாக்குதல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற போதும் அதற்கு உரிய நடவடிக்கைகள் யாராலும் எடுக்கப்படவில்லை எனச் சுகாதாரத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்.

சம்பவத்தை அறிந்த கடற்றொழில் மூலவளங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நகருக்கு வந்து ஆராய்ந்த பின்னர், தாக்குதல் நடத்திய வியாபாரிகளைக் கைது செய்யுமாறு பொலிஸ் அதிகாரிகளுக்கு வழிகாட்டல் விடுத்தார். (ஐ - 07)

# வெள்ளத்தில் மூழ்கிய செல்லக்கதிர்காமம்!

கொழும்பு, டிசெ. 22

கடும் மழை காரணமாக மாணிக்க கங்கை பெருக்கெடுத்ததால் செல்லக் கதிர்காம ஆலயம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இலங்கையில் பல பகுதிகளிலும் பெய்து வரும் தொடர் மழையினால் வெள்ளப்பெருக்கு, மண்சரிவு அனர்த்தங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)





## சம்பிக்க ரணவக்க கைது;

# பொலிஸ் ஆணைக்குழுவுக்கு பிரதிச் சபாநாயகர் கடிதம்!

கொழும்பு, டிசெ. 22

நாடாளுமன்ற உறுப்பினர் சம்பிக ரணவக்க கைது செய்யப்பட்ட போது , நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்படும்போது, பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைகள் எதுவும் முறையாகப் பின்பற்றப்படவில்லை என்றும், சம்பவம் தொடர்பான அறிவித்தல் கைது செய்யப்பட்டதற்கு அடுத்த நாளே தனக்கு எழுத்து மூலம் அனுப்பப்பட்டதாகவும் பிரதிச் சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் பிரதிச் சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் கே. டபிள்யூ.ஈ.கரலியத்தவுக்கு நேற்று முன் தினம் கடிதமொன்றை அனுப்பியிருக்கிறார்.

இந்தக் கடித்தின் பிரதிகள் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்கும், பதில் பொலிஸ் மா அதிபருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என சபாநாயகர் அலுவலகம் தெரிவித்திருக்கிறது.

சம்பிக்க ரணவக்க கைது செய்யப்பட்டபோது வழமையாக பின்பற்றப்படுகின்ற நடைமுறை பின்பற்றப்படவில்லை என்று நம்புவதோடு, இது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்குமாறும் பிரதிச் சபாநாயகர் இந்தக் கடிதத்தின் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

# காரைநகரில் ஐஸ் தொழிற்சாலையை உடனடியாக உருவாக்க நடவடிக்கை





யாழ்ப்பாணம், டிசெ. 22

காரைநகரில் ஐஸ் தொழிற்சாலை ஒன்றை உருவாக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் அறிவுறுத்தப்பட்டது.

காரைநகரில் அமைந்துள்ள சீனோர் நிறுவனத்தின் படகு கட்டும் தொழிற்சாலையின் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது .

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட மீனவர் சமாசங்களின் பிரதிநிதிகள் ஐஸ் தொழிற்சாலையின் அவசியத்தை அமைச்சருக்கு வலியுறுத்தியமையை அடுத்து அமைச்சரால் இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

உடனடியாக தினசரி சுமார் ஆயிரம் கிலோ கிராம் ஐஸ் உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ள அமைச்சர், காலப்போக்கில் உற்பத்தி அதிகரிக்கும்வகையில் அடிப்படைத் திட்டம் அமையவேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

அத்துடன், காரைநகர் படகு கட்டும் தொழிற்சாலையின் செயற்பாட்டை மீள ஆரம்பிக்கும் முயற்சியில் நோர்வே தனியார் முதலீட்டாளர்களையும் இணைத்துக் கொள்ளத் தீர்மானித்துள்ள அமைச்சர், நோர்வே முதலீட்டாளர்களுடனும் கடற்படை உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்புக்களுடனும் கலந்துரையாடினார்.

முதலீட்டாளர்களின் பாரிய திட்டத்தை நடைமுறைப்படுத்த கடற்படைத் தளபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறப்படவேண்டிய நிலையில் அவை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை, தற்போதைய வளங்களைப் பயன்படுத்தி படகு திருத்துதல் மற்றும் சிறியளவிலான படகுகளைக் கட்டுதல் போன்ற செயற்பாடுகளை உடனடியாக ஆரம்பிப்பது தொடர்பிலும் துறைசார்ந்தோரினால் ஆலோசிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ராஜிதவின் முன்பிணை மனு: நாளை மீண்டும் விசாரணை!

கொழும்பு, டிசெ.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தன்னைக் கைது செய்ய முன்னர் முன் பிணையில் தன்னை விடுவிக்குமாறு முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன நேற்று முன்தினம் மீண்டும் தாக்கல் செய்த முன் பிணை மனு திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

முன்னதாக, ராஜித சேனாரத்ன கடந்த வியாழக்கிழமை தாக்கல் செய்த முன்பிணை மனுவை, கொழும்பு பிரதான நீதிவான் லங்கா ஜயரத்ன நேற்று முன்தினம் நிராகரித்தார்.

தான் கைது செய்யப்படப்போவது எந்தச் சட்டப் பிரிவின் கீழ், எந்தக் குற்றத்துக்காக என்பதை அந்த மனுவிலோ அல்லது முன்வைக்கப்பட்டுள்ள சத்தியக் கடதாசியிலோ மனுதாரர் தெரிவிக்காத நிலையில், அந்த முன் பிணை கோரிக்கை மனுவை ஆராயப் பெயரிடப் பட்டிருந்தவர்களுக்கு அறிவித்தல் அனுப்ப முன்வைக்கப்பட்டிருந்த கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் மாலை மீள, முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னவினால் கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றில் முன் பிணைக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டது.

முன்னர் முன்வைத்த மனு நிராகரிக்கப்பட்டதையடுத்து, 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க பிணை சட்டத்தின் 21 ஆவது அத்தியாயத்துக்கு அமைவாக, முன்னைய மனுவில் இருந்த பிழைகளைத் திருத்தி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந் நிலையில் திருத்தி மீளத் தாக்கல் செய்யப்பட்டுள்ள முன் பிணை மனு நாளை திங்களன்று ஆராயப்படவுள்ளது. (ஐ)

# வெள்ளத்தில் சிக்கியோர் இராணுத்தினரால் மீட்பு

மட்டக்களப்பு, டிசெ. 22

மட்டக்களப்பு மாவடிப் பிரதேசத்தில் திடீர் வெள்ளப்பெருக்கில் சிக்குண்ட 21 பேரை ஹெலிக்கொப்டர் மூலம் மீட்கும் பணிகளை இராணுவத்தினர் முன்னெடுத்தனர்.

அனர்த்த முகாமைத்துவத் திணைக்களத்தின் கோரிக்கைக்கு அமைய 212 பெல் என்ற இராணுவத்துக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் மூலம் இவர்கள் மீட்கப்பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டது.

இவ்வாறு மீட்கப்பட்டவர்களின் உணவுத் தேவை, முதலுதவிகளை வழங்குதற்கான கடற்படையின் உயிர்பாதுகாப்புக் குழுவொன்று அந்தப் பிரசேத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பேச்சாளர் பிரதீப் கொடிபிலி தெரிவித்தார். (ஐ)

# பயங்கரவாத அமைப்புகள் மீது பாகிஸ்தான் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## இந்தியா - அமெரிக்கா கூட்டறிக்கை விடுத்து வலியுறுத்தல்



வொஷிங்டன்,டிசெ.22

பயங்கரவாதிகள் மீது பாகிஸ்தான் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி இந்தியாவும் அமெரிக்காவும் கூட்டு அறிக்கை வெளியிட்டுள்ளன.

பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் ஆகியோர் அனுமதி வழங்கியதன்பேரில் இரு நாடுகள் இடையேயான முதலாவது பேச்சு டெல்லியில் செப்டம்பர் மாதம் நடைபெற்றது. இதில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோ, பாதுகாப்பு அமைச்சர் மார்க் எஸ்பெர் மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர், பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோர் பங்கேற்றனர்.

அவர்கள் இந்தியா - அமெரிக்கா இடையேயான 2 ஆவது கட்டப் பேச்சுக்களை வொஷிங்டனில் நடத்தினர். இந்தப் பேச்சுக்குப் பின்னர் இரு நாடுகளும் இணைந்து ஓர் கூட்டு அறிக்கை வெளியிட்டன. அதில் கூறியிருப்பவை வருமாறு:-

பாகிஸ்தான் தனது கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இருந்து வெளிநாடுகளுக்கு எதிராக எந்தப் பயங்கரவாத நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை உறுதி செய்யும் வகையில் உடனடியாக, உறுதியான, பின்வாங்காத நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மும்பை, பதான்கோட் உள்ளிட்ட எல்லைதாண்டிய பயங்கரவாதத் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.


அல்கொய்தா, ஐ.எஸ்., லஷ்கர் இ தொய்பா, ஜெய்ஷ் இ முகம்மது, ஹக்கானி நெட்வொர்க், ஹிஜ்புல் முஜாகிதீன், தெரிக் இ தலீபான், நிழல் உலக தாதா தாவூத் இப்ராகிம் குழு உட்பட அனைத்து பயங்கரவாத அமைப்புகள் மீதும் பாகிஸ்தான் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். - இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அமெ. தேசிய அறிவியல் கழகத்தின் தலைவராக சேதுராமன் பஞ்சநாதன் என்ற தமிழர் நியமனம்!

வொஷிங்டன்,டிசெ.22

அமெரிக்க தேசிய அறிவியல் கழகத் தலைவராக இந்திய வம்சாவளித் தமிழர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்க தேசிய அறிவியல் கழகத்தின் புதிய தலைவராக அமெரிக்க வாழ் தமிழரான சேதுராமன் பஞ்சநாதன் நியமிக்கப்பட்டு இருக்கிறார். அதிபர் டிரம்ப் இதற்கானநடவடிக்கையை முன்னெடுத்தார்.



தற்போது பிரான்ஸ் கோர்தவா என்ற பெண் தேசிய அறிவியல் கழகத்தின் தலைவராக இருந்து வருகிறார். அவரது 6 ஆண்டு பதவி காலம் 2020 ஆம் ஆண்டில் முடிவடைகிறது. அந்தப் பொறுப்பைத்தான் சேதுராமன் பஞ்சநாதன் ஏற்க இருக்கிறார். இந்த பொறுப்பு அமெரிக்க செனட் அவையின் உறுப்பினர் பதவிக்கு இணையானது ஆகும்.

58 வயதாகும் சேதுராமன் பஞ்சநாதன் தற்போது அமெரிக்காவின் அரிசோனா மாநில பல்கலைக்கழகத்தில் துணைத்தலைவராகவும், ஆய்வு மற்றும் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளில் முதன்மை அதிகாரியாகவும் இருந்து வருகிறார்.

இவர் 1981 இல் சென்னை பல்கலைக்கழகத்தில் இயற்பியலில் பட்டம் பெற்றார். 1984 இல் பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தில் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப பொறியியலில் பட்டம் பெற்றார். பின்னர் கனடாவில் உள்ள ஒட்டவா பல்கலைக்கழகத்தில் மின் மற்றும் கணினி பொறியியலில் முனைவர் (கலாநிதி) பட்டம்பெற்று இருக்கிறார்.

## எல்லைத் தகராறுக்குத் தீர்வுக்கு இந்தியா - சீனா நேரடிப் பேச்சு



புதுடெல்லி,டிசெ.22

இந்தியா - சீனா இடையேயான எல்லைத் தகராறுக்கு தீர்வு காண்பதற்காக, இரு நாட்டு உயர்நிலைக் குழுக்கள் டெல்லியில் பேச்சு நடத்தி வருகின்றன.

இதற்கானசிறப்புபிரதிநிதிகளின் 21ஆவது கூட்டம் சீன தலைநகர் பெய்ஜிங்கில் நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக 22ஆவது கூட்டம் டெல்லியில் நேற்றுத் தொடங்கி நடைபெற்று வருகிறது.

தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் தலைமையில் இந்திய குழுவும், சீன வெளியுறவு அமைச்சர் வாங் - யி தலைமையில் அந்நாட்டு குழுவும் பேச்சு நடத்தி வருகின்றன.

மாமல்லபுரத்தில் பிரதமர் மோடியும், சீன அதிபர் ஜின்பிங்கும் சந்தித்த பிறகு, எல்லைத் தகராறு தொடர்பாக நடைபெறும் முதல் பேச்சு இது என்பதால் முக்கியத்துவம் பெறுகிறது. இந்தியா - சீனா இடையே 3,488 கிலோ மீற்றர் நீள எல்லைக் கோடு தொடர்பாக சர்ச்சைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியக் குடியுரிமைச் சட்டம் குறித்த மலேசிய பிரதமரின் கருத்து தவறானது

### இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவிப்பு



புதுடெல்லி,டிசெ.22

இந்தியக் குடியுரிமை குறித்து மலேசியப் பிரதமர் மகாதீர் முகமதுவின் கருத்து தவறானது என்று இந்திய வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய மகாதீர் முகமது, குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைச் சுட்டிக்காட்டி மதசார்பற்ற நாடான இந்தியா சில முஸ்லிம்களின் குடியுரிமையைப் பறிக்க நடவடிக்கை எடுத்திருப்பதாகக் கூறினார்.

அவரின் இந்தக் கருத்துக்குப் பதிலளிக்கும் வகையில் இந்திய வெளியுறவு அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதில் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தால் இந்திய குடிமக்கள் யாரும் பாதிக்கப்பட மாட்டார் என்றும், எந்த மதத்தினரின் குடியுரிமையும் பறிக்கப்பட மாட்டாது என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்கள் குறித்து கருத்து தெரிவிக்க வேண்டாமென மலேசியாவை வலியுறுத்துவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிறிஸ்மஸ் தாத்தவாக வந்து காப்பகக் குழந்தைகளுக்கு பரிசு வழங்கிய கொஹ்லி



காப்பகக் குழந்தைகளுக்கு கிறிஸ்துமஸ் தாத்தா வேடத்தில் பரிசுகள் வழங்கிமகிழ்வித்தார் இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் விராட் கோஹ்லி. அவர் அவ்வாறு பரிசுகள் வழங்கிய வீடியோ இணையத்தில் வைரல் ஆகிவருகிறது.

சிவப்பு நிற உடை, வெண் தாடி, மூக்குக்கண்ணாடி ஆகியவற்றை அணிந்து, கிறிஸ்துமஸ் தாத்தா போல உருமாறிய கோஹ்லி, கொல்கத்தாவில் உள்ள குழந்தைகள் காப்பகம் ஒன்றுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தும் விதத்தில் அதிரடியாக விஜயம் செய்தார்.

அவரைப் பார்த்ததும் குழந்தைகள் உற்சாகமாகினர். குழந்தைகளுடன் தனது அன்பைப் பகிர்ந்து கொண்ட கோஹ்லி, அவர்களுக்கு விதவிதமான பரிசு பொருள்களையும் வழங்கி மகிழ்வித்தார்.

## பனிமூட்டத்தால் பெரும் பாதிப்பு



டெல்லிவிமான நிலைய பகுதியில் நிலவிய பனிமூட்டத்தால் வெள்ளியன்று மட்டும் 760 விமானங்களின் வருகை மற்றும் புறப்பாடு என்பன தாமதமடைந்தன. மேலும் 19 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. 5 விமானங்கள் வேறு பகுதிகளுக்கு திருப்பி விடப்பட்டன.

இதேபோல்,டெல்லியில் இருந்து வட இந்தியாவின் பிற பகுதிகளுக்கு 100க்கும் மேற்பட்ட ரயில்கள் 2 மணி நேரத்துக்கும் மேல் தாமதமாக இயக்கப்பட்டன.

வடஇந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் கடும் குளிர் மற்றும் பனிமூட்டம் நிலவுவதால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. ஜம்மு - காஷ்மீர் யூனியன் பிரதேசம் ஸ்ரீநகர் விமான நிலைய பகுதியில் நிலவிய பனிமூட்டத்தால், 12 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

# ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரி. வெளியேறுவதற்கான 'பிரெக்ஸிட்' டுக்கு இங்கிலாந்து நாடாளுமன்றம் அங்கீகாரம்

## நீண்டகால இழுபறி ஒருவாறு சுமுகமாகத் தீரும் அறிகுறி

லண்டன்,டிசெ.22

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து இங்கிலாந்து வெளியேறுவது தொடர்பான 'பிரெக்ஸிட்' பிரேரணை நீண்ட காலை இழுபறிக்குப் பின்னர் ஒருவாறு இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த விடயத்தை ஒப்பேற்ற முடியாமல் நெருக்கடிஙை எதிர் கொண்ட பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜோன்சன் அதனால் பிரிட்டிஷ்நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைத்து நேரத்துடன் பொதுத் தேர்தலுக்கு வழி செய்தார்.

650 இடங்களைகொண்ட இங்கிலாந்து



நாடாளுமன்றத்துக்குத் தேர்தல் நடந்தது. இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்து மற்றும் வடக்கு அயர்லாந்து முழுவதும் உள்ள 650 தொகுதிகளில் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக தொடங்கி நடைபெற்றது.

இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைக்கு 326 இடங்களில் வெற்றி பெற வேண்டியது கட்டாயம் ஆகும். ஆளும் கொன்சர்வேட்டிவ் கட்சி 337 இடங்களில் அதிகபெரும்பான்மையுடன்வெற்றி பெற்றது . இதனைத் தொடர்ந்து இங்கிலாந்துப் பிரதமர் போரிஸ் ஜோன்சன் தனது அரசாங்கம் பிரெக்ஸிட்டைச் செய்வதற்கான சக்திவாய்ந்த புதிய உத்தரவை பெற்றுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் போரிஸ் ஜோன்சன், ஐரோப்பிய கூட்டமைப்பில் இருந்து, இங்கிலாந்து வெளியேறுவது தொடர்பான 'பிரெக்ஸிட்' பிரேரணையை சில திருத்தங்களுடன், நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தாக்கல் செய்தார்.

'ஹவுஸ் ஒவ் கொமன்ஸ்' எனப்படும் கீழ்சபையில் தாக்கல் செய்யப்பட்ட இந்தப் பிரேரணையை ஆதரித்து 358 வாக்குகளும்,எதிர்த்து234 வாக்குகளும்விழுந்தன.

இதனைத் தொடர்ந்து பிரேரணை நிறைவேறியதாக அறிவிக்கப்பட்டது. இந்தப் பிரேரணை 2020 ஆம் ஆண்டு ஜனவரியில், மேல்சபையின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும். இதைத் தொடர்ந்து, 2020 ஜனவரி 31 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து, முறைப்படி இங்கிலாந்து வெளியேறும் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

## கிறிஸ்துமஸ் தீவில் சாலைகளை தாண்டி கூட்டம் கூட்டமாகச் சிவப்பு நண்டுகள்!



ஆஸ்திரேலியாவின் கிறிஸ்துமஸ் தீவில் முட்டையிடும் பருவம் தொடங்கிய நிலையில், நான்கு கோடிக்கும் மேற்பட்ட சிவப்பு நண்டுகள் இடம் பெயர்ந்து சாலைகளைத் தாண்டிக் கூட்டம் கூட்டமாக செல்கின்றன.

ஆண்டுதோறும் டிசம்பர் மாதத்தில் இடம்பெயரும் நிலையில், வன துறையினரால் பல்வேறு பகுதிகளில் சாலைகள் மூடப்பட்டுள்ளன.

இதனால் தீவுப் பூங்காவில் அமைந்துள்ள ரிசார்ட் உரிமையாளர் கிறிஸ் ப்ரே (Chris Bray)என்பவர் தனது ஜீப்பின் சக் கரங்களில் நான்கு crab - sweepers பொருத்தியுள்ளார். அவை சாலையில் நண்டுகளை மெதுவாக விலகி துடைத்துவிட்டப்படி செல்கின்றன. சமீபத்தில் ஆஸ்திரேலியாவின் பூங்காங்களில் இந்த முறை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## முஷாரப் வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி மனநோயாளி என்கின்றது பாக். அரசு

தேசத் துரோக வழக்கில் முன்னாள் அதிபர் முஷாரபிற்கு மரண தண்டனை விதித்த நீதிபதி மனநலம் சரியில்லாதவர் என பாகிஸ்தான் அரசு கூறியுள்ளது.

முஷாரப் தூக்கில் ஏற்றப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்த பெஷாவர் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி வக்கார் அகமது ஷா, தண்டனை நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் முஷாரப் இறந்துவிட்டால், அவரது சடலத்தை சாலையில் இழுத்து வந்து நாடாளுமன்ற வளாகத்தில் 3 நாள்கள் தூக்கில் தொங்கவிட வேண்டும் என்ற கூறியிருந்தமை பரபரப்பை ஏற்படுத்தியது.

தீர்ப்பு வெளியானவுடன் அது குறித்து தமது சட்டக்குழுவினருடன்



பிரதமர் இம்ரான் கான் ஆலோசனை நடத்தினார். அதை அடுத்து, இறந்த பின்னரும் தூக்கிலேற்றத் தீர்ப்பளித்துள்ள நீதிபதி மனநிலை சரியில்லாதவர் என்றும், அவரை மாற்றுமாறும் நீதித்துறை கவுன்ஸிலுக்குப் பாகிஸ்தான் அரசு பரிந்துரைத்துள்ளது.

## புதிதாக விண்வெளிப் படையை உருவாக்கியது அமெரிக்கா!

விமானப்படை, கடற்படை வரிசையில் அமெரிக்கா புதிதாக விண்வெளிப் படையை உருவாக்கியுள்ளது.

அமெரிக்காவில் இராணுவம், மெரைன் கோர்ப்ஸ், கடற்படை, விமானப்படை, கடலோரக் காவல்படை என 5 படைப்பிரிவுகள் உள்ளன. 6 ஆவது படைப் பிரிவாக விண்வெளிப்படையை அமெரிக்காபுதிதாக உருவாக்கியுள்ளது.

இதற்காக, 73 ஆயிரத்து 800 கோடி டொலர்கள் தொகையை ஒதுக்குவதற்கான சட்டத்தில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கையெழுத்திட்டார். புதிய படைப் பிரிவை உருவாக்கியுள்ளதன் மூலம் மிகப்பெரிய சாதனை எட்டப்பட்டுள்ளதாக அப்போது அவர் குறிப்பிட்டார்.

விண்வெளியில் அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளின் நலன்களைப் பாதுகாப்பது விண்வெளிப் படையின் முக்கிய நோக்கமாகும். விண்வெளியானது போர்க்களங்களில் ஒன்றாக மாறியிருப்பதாகவும், அதில் அமெரிக்காவின் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவது விண்வெளிப் படைப் பிரிவின் நோக்கம் என்றும் அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் மார்க் எஸ்பர் தெரிவித்துள்ளார்.

அதிகபட்சமாக 16 ஆயிரம் பேரை மட்டுமே கொண்ட அமெரிக்காவின் மிகச்சிறிய படைப் பிரிவாக இது அமைகிறது. பிற படைகளைப் போல வீரர்களின் எண்ணிக்கையை வைத்து விண்வெளிப் படையை எடைபோடக் கூடாது என்றும், தொழில்நுட்பங்கள் மற்றும் அவற்றின் திறன்களே முக்கியம் என்றும் விமானப்படை செயலர் பார்பரா பேரட் (Barbara Barrett) கூறியுள்ளார்.

அமெரிக்க விண்வெளிப்படை தொடங்கப்பட்டுள்ளமை வரலாற்றுச் சிறப்பு மிக்க தருணம் என்றும், இது அமெரிக்க அதிபர் ட்ரம்பின் தொலை நோக்குப் பார்வைக்கு கிடைத்த வெற்றி என்றும் பார்பரா பேரட் தெரிவித்துள்ளார்.

## பூமியின் காந்த வட துருவம் வேகமாக சைபீரியாவை நோக்கி நகர்ந்து வருவதால் விஞ்ஞானிகள் பெரும் குழப்பக் கட்டத்தில்!

வொஷிங்டன்,டிசெ.22

பூமியின் காந்த வட துருவம் வேகமாக சைபீரியாவை நோக்கி நகர்ந்து வருவதால் விஞ்ஞானிகள் குழப்பத்தில் ஆழ்ந்து உள்ளனர்.

இந்த பூமியில் வட துருவம், தென் துருவம் என இரு துருவங்கள் உண்டு. அதே போல காந்தத்திலும் அதாவது பூமியை சுற்றி இருக்கும் காந்த புலத்திற்கும் இரு துருவங்கள் உண்டு.

வானத்தில் பூமியைச் சுற்றிவரும் பல விண்கலங்கள்மூலம் இவற்றை ஆராய்ந்து வருகின்றனர் விஞ்ஞானிகள். அதன்படி பூமியின் காந்தத் துருவங்கள் வேகமாக நகர்ந்து வருகின்றமை தெரியவந்து உள்ளது.

பூமியின் காந்த மண்டலம்தான் நம்மைச் சூரியனிடமிருந்து வரும் தீய கதிர்களில் இருந்து காத்துவருகிறது. இப்படிக் காந்த மண்டலம் இல்லாவிடில் நமது பூமியும் சந்திரன், செவ்வாய் போல வறண்ட இடங்களாகக் காட்சி தரும். உயிரினங்களே இருக்காது.

பூமியின் ஆழத்தில் திரவ இரும்புகளில் எதிர்பாராத மாற்றங்களால் உருவாகும் காந்தத் துருவம் இயக்கப்படுகிறது.

உலகெங்கிலும் உள்ள அரசு நிறுவனங்கள் – நாசா, பெடரல் ஏவியேன் அட்மினிஸ்ட்ரேன் (எவ்.ஏ.ஏ) மற்றும் அமெரிக்க வன சேவை உட்பட மேப்பிங் முதல் விமான போக்குவரத்துக் கட்டுப்பாடு வரை அன்றாட நடவடிக்கைகளில் இந்தக் காந்தத் துருவங்களைப் பயன்படுத்துகின்றன.


பூமியின் காந்த வடதுருவம் என்பது காந்தப்புலத்தைப் பொறுத்து, புவி மேற்பரப்பில் உள்ள ஒரு புள்ளி. இது காலத்தை பொறுத்தும், புவியியல் மாற்றத்துக்கும் ஏற்பவும் மாறுபடுகிறது. பூமியின் காந்த வட துருவத்தின் அமைவிடம் கடந்த 1831 ஆம் ஆண்டு முதல் கனடாவின் ஆர்டிக் பகுதியில் இருந்து சைபீரியாவை நோக்கி, வேகமாக இடம்பெயர்ந்து வருவதாக புவியியல் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

வட புலம் துல்லியமாக குறிக்கப்பட்டது 1881 ஆம் ஆண்டில் இருந்துதான். ஆனால், அப்போதிருந்தே அது ஆண்டுக்கு 10 கி.மீ. வேகத்தில் இடம் பெயர்ந்து வருவதை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்தனர். சமீபகாலங்களில், ரஷ்யாவின் சைபீரியா நோக்கி ஆண்டுக்கு சராசரியாக 54.7 கி.மீ. வேகத்தில் அது நகர்ந்துள்ளமை விஞ்ஞானிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. பூமியின் காந்தபுலம், குறிப்பாக காந்த வடதுருவத்தை அடிப்படையாக கொண்டே உலகளாவிய போக்குவரத்து கட்டமைப்புகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதனால் திசைகாட்டும் கருவியில் புதிய மாற்றங்கள் வேகவேகமாக செய்யப்பட்டு வருகின்றன.

காந்த வட துருவத்தின் வேகமான இடப்பெயர்ச்சியால், நேட்டோ, அமெரிக்கா, பிரிட்டன் இராணுவங்கள் தங்கள் பயணத் திட்டங்களுக்கான உலக காந்த மாதிரியை குறிப்பிட்ட ஆண்டை விட, ஓராண்டு முன்னதாகவே மாற்றிப் புதுப்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

வரும், 2020 ஆம் ஆண்டுக்கான உலக காந்த மாதிரி தகவல் படி, காந்த வட துருவப் பாதை அடுத்த சில ஆண்டுகளுக்கு ரஷ்யாவில்தான் இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. அதன் வேகம் சற்றே குறைந்து இனி ஆண்டுக்கு சராசரியாக 40 கி.மீ. என இருக்கும் என்று ஆய்வில் தெரியவந்துள்ளது. எனினும், 1831 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை காந்த வடதுருவம் 2,253 கிலோ மீற்றர் தூரம் பயணித்துள்ளது.

பூமியின் தற்போதுள்ள இரு காந்தப் புலன்களும் 7.8 லட்சம் ஆண்டுகளுக்கு முன் தலைகீழாக மாறியவைதான் எனக்



கூறப்படும் நிலையில், தற்போது மீண்டும் அதே போன்றதொரு மாற்றம் வருவதற்கான அறிகுறிகள் தெரிய ஆரம்பித்திருக்கின்றன என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

புவியியல் துருவங்களைப் போலல்லாமல், காந்த துருவங்கள் வடதுருவத்தில் இருந்து தென் துருவத்திற்கும் தென் துருவத்தில் இருந்து வட துருவத்திற்கும் மாறலாம். இது கடந்த காலங்களில் நிகழ்ந்ததாகவும், இந்த நிகழ்வு ஒவ்வொரு சில லட்சக்கணக்கான ஆண்டுகளிலும் நிகழலாம் என்றும் கூறப்படுகிறது. அடுத்த மாற்றம் எப்போது நடக்கும் என்று விஞ்ஞானிகளுக்குத் தெரியாது, அத்தகைய மாறுதல் உடனடியாக நிகழும் என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை.

வட காந்த முனை நோக்கித் திசைகாட்டி ஊசி புள்ளிகள் உள்ளன. தற்போது ஏற்பட்டுள்ள இந்த வடபுல மாற்றத்தால், திசைகாட்டிகளில் மாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது. எனவே கப்பல்கள், விமானங்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் போன்றவற்றில் உள்ள திசைகாட்டிகளை மேம்படுத்த வேண்டும் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

# சம்பந்தனின் சமஷ்டி முழக்கம் தேர்தல் கால ஏமாற்று நாடகம்

## சொல்கிறார் சட்டத்தரணி சுகாஷ்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், டிசெ. 22

சமஷ்டிதான் வேண்டும் என்று வடக்கிலிருந்து சம்பந்தன் ஐயா விடுத்த முழக்கம் தேர்தல் காலக் கோசம் என்பதுடன் மக்களை ஏமாற்றும் நாடகம் என்ற உண்மையை அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டுமெனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் சட்டத்தரணி கே.சுகாஷ் தெரிவித்துள்ளார்.

கொக்குவிலில் அமைந்துள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் தாம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில் இருந்து கூறிய அனைத்தும் நிதர்சனமாகிக் கொண்டு வருகின்றன. 2010 முதல் நாங்கள் வலிறுத்தி வருகின்ற பிரதானமான கோசம் ஈழத்திலே அரங்கேறிய இனப் படுகொலைக்கு முற்று முழுதான சர்வதேச விசாரணை ஒன்று தான் தீர்வைத் தரும் என்பதே. உள்நாட்டில் நடக்கக் கூடிய எந்தவொரு விசாரணையும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு போதும் தீர்வு தராது என்பதையும் நாங்கள் அணித்தரமாக வலியுறுத்தி வந்தோம். அது இன்று நிதர்சனமாகியிருக்கின்றது.

சுவிஸ் தூதரகப் பணியாளர் கடத்தப்பட்ட விவகாரத்திலே பாதிக்கப்பட்டவர் எனச் சொல்லப்படுகின்ற நபர் இன்று சந்தேக நபராகக்கப்பட்டு விளக்கமறியலில் வைக்கப் பட்டிருக்கின்றார். சிறையிலே அடைக்கப்பட்டிருக்கின்றார். சுவிஸ் நாட்டின் வெளிவிவகார ராஜாங்க திணைக்களத்தின் அறிக் கையிலே இலங்கை அரசைக் கடுமையாகச் சாடி சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற நிறுவனங்கள் சரியான முறையிலே தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கின்றது. இதைதான் நாங்கள் அன்று தொட்டு வலியுறுத்தி வருகின்றோம்.

ஆகவே இந்த இடத்தில் சுவிஸ் போன்ற நாடுகளும் சர்வதேசமும் தெளிவாக ஒரு விடயத்தை விளங்கிக் கொள்ள வேண்டும். சர்வதேசச் சட்டத்தின் பாதுகாப்பு மிக்க இராஜதந்திரி என்ற வட்டத்துக்குள் வரக் கூடிய ஒரு தூதரகப் பணியாளரின் விடயத்திலேயே இலங்கை அரசு இந்தளவு மிலேச்சத்தனமாகச் சட்டத்தைக் கையிலே எடுத்துக் கொண்டு செயற்படுகின்றபோது உள்நாட்டு யுத்தம் நடைபெற்று இங்கே பாதிக்கப்பட்ட தரப்பாக இருப்பது தமிழ் மக்கள். குற்றஞ்சாட்டப்பட்ட தரப்பாக இருப்பது இலங்கை அரசு.

ஆகவே இந்த இலங்கை அரசினால் முன்னெடுக்கப் படுகின்ற விசாரணை எந்தளவு தூரம் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீர்வைத் தரும் என்பதைச் சர்வதேச நாடுகளும் சுவிஸ் போன்ற நாடுகளும் தெளிவாக உணருவதற்கான வாய்ப்பாக இந்த விடயம் அமைந்திருக்கின்றது. ஆகவே இனியும் எவருமே இலங்கையின் இனப்படுகொலைக்கு உள்ளகப் பொறிமுறையோ அல்லது கலப்புப் பொறிமுறையையோ வலியுறுத்துவதை நிறுத்த வேண்டும்.

ஆகவே நாங்கள் இந்தப் பொறுப்புக் கூறல் பொறிமுறையை சரியான திசையில் முன்னெடுக்கவேண்டுமாக இருந்தால் வெறுமனே ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக்குள் மாத்திரம் எங்களுடைய இனப்படுகொலை விடயத்தை முடக்காது அதையும் தாண்டி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்த வேண்டும். அல்லது இனப் படுகொலையை விசாரிப்பதற்காக ஒரு விசேட தீர்ப்பாயம் ஒன்றை அமைக்க வேண்டும்.

இந்த இரண்டு பொறிமுறையில் ஏதாவது ஒரு பொறிமுறை ஸ்தாபிக்கப்பட்டால் மாத்திரம்தான் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கும். மீண்டும் சொல்லுகின்றோம் சர்வதேச குற்றவியில் நீதிமன்றத்திற்கு எங்களுடைய விடயம் பாரப்படுத்தப்பட வேண்டும். அல்லது இந்த விடயத்தை ஆராய்வதற்காக விசேட தீர்ப்பாயம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இந்த இரண்டில் ஒன்று மட்டும்தான் ஈழத் தமிழ் மக்களுடைய பாதிக்கப்பட்ட தரப்பிற்கு ஒரு தீர்வைத் தரும் என்பது எங்கள் ஆணித்தரமான செய்தி .

இந்தத் தூதரகப் பணியாளர் கடத்தப்பட்ட விவகாரம் ஓய்வதற்கிடையில் யாழ் குடாநாட்டைச் சேர்ந்த தமிழ்க் குடிமகன் ஒருவர் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் விசாரணைக்காக அழைக்கப்பட்டு விசாரணைக்காகச் சென்று இன்றுவரை வீடு திரும்பவில்லை. இதையடுத்து அவரது மனைவி வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைச் செய்திருக்கின்றார். ஆகவே மீண்டும் கடத்தல்களும் காணாமற்போதல்களும் வெள்ளை வான்களும் வருமா என்ற ஓர் அச்சமான சூழ்நிலைக்கு எமது மக்கள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

தமிழரசுக் கட்சியினுடைய 70 ஆவது மாநாடு நடைபெற்று முடிந்திருக்கின்றது. வழமை போல தமிழரசுக் கட்சியினர் உரிமைக் கோசங்கள் முழங்கியிருக்கின்றார்கள். புரட்சிகள் வெடிக்கும் என்று முழங்கியிருக்கின்றார்கள். ஆனால் உண்மை என்ன என்பதை நாங்கள் தொடர்ச்சியாக மக்களுக்குச் சொல்லி வருகின்றோம்.

சமஷ்டி தான் வேண்டும் என்று சம்பந்தர் ஐயா வடக்கிலிருந்து முழக்கம் எழுப்பியிருக்கின்றார். அதே நேரத்தில் சமஷ்டியை ஒருபோதும் வழங்கமாட்டோம் என்று கோட்டாபாய தெற்கில் இருந்து முழக்கமிடுகின்றார். இதைத் தான் சொல்லுவார்கள் தேர்தல் நாடகமென்று.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒக்ரோபர் குழப்பத்தின்போது 52 நாள்கள் அந்த ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகச் சிங்கள பௌத்த பேரினவாதிகளுக்கிடையே அதாவது ரணிலுக்கும் மஹிந்த ராஜபக்ஷவுக்குமிடையே ஓர் அதிகாரப் போட்டி நடந்தது.

அந்த அதிகாரப் போட்டியின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை மஹிந்த சந்தித்தார். நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இடைக்கால வரைவின் அடிப்படையில் ஓர் அரசியல் யாப்பை உருவாக்கி அதன் அடிப்படையில் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வுத் திட்டத்தை வழங்குவதாக அதில் மஹிந்த கூற அதை சம்பந்தன் ஐயா ஏற்று அங்கீகரித்தார் என்பது நாடறிந்த உலகறிந்த விடயம்.

அந்த இடைக்கால அறிக்கை வரைவில் இருக்கின்ற விடயங்கள் முழுமையாக ஒற்றையாட்சி என்பது ஊரறிந்த இரகசியம். அது மாத்திரம் அல்லாமல் அந்த இடைக்கால வரைவின் ஊடாக சம்பந்தன் ஐயாவும் கூட்டமைப்பினரும் ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்கு இணங்கியிருந்தார்கள். ஆகவே ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்கு இணங்கி விட்டு – பௌத்தத்துக்கு முன்னுரிமை கொடுப்பதற்கு இணங்கி விட்டு – இன்று தமிழ் மக்களை மீண்டும் ஒரு தடவை ஏமாற்றி வாக்குகளைச் சூறையாடுவதற்காக தமிழரசுக் கட்சியின் மகாநாட்டில் சமஷ்டிதான் வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள்.

ஆனால் ஏற்கனவே ஒற்றையாட்சி யாப்பிற்கு கோட்டாபய தலைமையிலான பொதுஜன பெரமுனவும் சம்பந்தன் ஐயா தலைமையிலான கூட்டமைப்பும் இணங்கிவிட்டார்கள்.ஆனால் அவற்றையெல்லாம் மூடி மறைத்து தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குகளைப் பெறுவதற்காக சமஷ்டி என்ற கோசம் முன்வைக்கப்படுகின்றது. ஆனால் கூட்டமைப்பின் உண்மை முகம் என்பது தமிழ் மக்களுக்குத் தெரியும். இவர்கள் தொடர்ச்சியாக எமது மக்களை ஏமாற்ற முடியாது – என்றார். (ஐ – 07)

# சம்பிக்கவின் கைது சட்டமுரணானதல்ல

## கூறுகின்றார் கம்மன்பில



கொழும்பு, டிசெ. 22

நாடாளுமன்ற உறுப்பினரொருவர் நாடாளுமன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றபோது கைது செய்யப்பட்டால் மாத்திரமே அது நாடாளுமன்ற சிறப்புரிமையை மீறும் செயலாகும். வீட்டிலிருக்கும்போது சம்பிக ரணவக்க கைது செய்யப்பட்டமை நாடாளு மன்ற சிறப்புரிமைகளுக்கு முரணான தல்ல எனபிவிதுருஹெலஉறுமயவின்தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சபாநாயகருக்கும் நீதிவானுக்கும் அறிவிக்காமல் வீட்டினுள் நுழைந்து தன்னைக் கைது செய்தமை சட்டவிரோதமானது என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக ரணவக்க கூறுகின்றார்.

சபாநாயகருக்கு அறிவிக்காமல் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக ரணவக்க கைது செய்யப்பட்டிருக்கின்றமை , நாடாளுமன்றம் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் சிறப்புரிமைகளை மீறி இடம்பெற்ற செயலாகும் என்று ஐக்கிய தேசிய சட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூறுகின்றனர்.

1953/21 ஆம் இலக்க நாடாளுமன்ற அதிகாரங்கள் மற்றும் பற்றிய சட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறப்படுவதாகக் குறிப்பிடப் பட்டிருப்பதாவது, ' நாடாளுமன்றத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டால் மாத்திரமேயாகும்.'

எனவே வீட்டிலிருந்தபோது சம்பிக ரணவக்க கைது செய்யப்பட்டமையானது நாடாளுமன்றச் சம்பிரதாயங்களுக்கு முரணானது அல்ல. அதே வேளை பிடியாணை இன்றியே தன்னை கைது செய்தனர் எனவும் சம்பிக்க கூறுகின்றார்.

நாட்டில் சட்டமா அதிபருடைய ஆலோசனையை விடவும் நீதிபதியின் உத்தரவு உயர்ந்ததல்ல என்பதையும் அவர்களிடம் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் – என்றார். (ஐ)

# அரிசியின் கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்வோர் மீது இனி அதிரடி

கொழும்பு, டிசெ. 22

நாடு மற்றும் சம்பா அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையாக 98 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை மீறி விற்பனை செய்வோர் மீது பாவனையாளர்கள் அதிகார சபை மற்றும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஆயிரத்து 430 விற்பனை நிலையங்களில் முன்னெடுக்கப்பட்ட தேடுதலில் 512 வர்த்தகர்கள் அரிசியைக் கட்டுப்பாட்டு விலையிலும் அதிக விலைக்கு விற்பனை செய்து சிக்கிக் கொண்டுள்ளனர் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:–

பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை மற்றும் இலங்கை பொலிஸார் ஒன்றிணைந்து அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசியை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் பற்றிய தேடுதல்களை தற்போது ஆரம்பித்துள்ளனர்.

அண்மையில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையினால் உள்நாட்டு சம்பா மற்றும் நாட்டரிசி ஒரு கிலோ கிராமிற்கான அதிகபட்ச சில்லறை விலை 98 ரூபா என வர்த்தமானியினூடாக அறிவித்தல் விடுக்கப்பட்டது – என்றுள்ளது. (ஐ)

# மல்லாகத்தில் தொண்டமான்

## நீதிவான் முகாமுக்கு நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார்





யாழ்பாணம், டிசெ. 22

மல்லாகம், நீதிவான் முகாமில் உள்ள மக்களின் நிலைமைகள் தொடர்பில் நேற்று சமுதாய வலுவூட்டல்கள் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் நேரடியாகச் சென்று ஆராய்ந்தார்.

மயிலிட்டிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து கடந்த 30 வருடங்களாக நலன்புரி முகாங்களில் மக்கள் வசித்து வருகின்றனர். இந்த முகாமில் 53 குடும்பங்களுக்கு மேல் வாழ்ந்து வருகின்றன.

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானுடன் யாழ். மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன்,மேலதிக அரச அதிபர் (காணி)எஸ்.முரளிதரன், வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் எஸ்.சிவசிறி உள்ளிட்டவர்களும் முகாமுக்குச் சென்று அங்குள்ள மக்களின் நிலைமைகள் குறித்து ஆராய்ந்தனர்.

இங்கு வசிக்கும் மக்களின் காணிகள் இராணுவத்தால் இதுவரை விடுவிக்கப்படாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ - 07)

# அரைச் சொகுசு பஸ் சேவை தடை செய்ய ஏற்பாடு தயார்

கொழும்பு, டிசெ. 22

அரைச் சொகுசு பஸ் சேவைகளைத் தடைச் செய்வதற்கான சகல ஏற்பாடுகளும் தயாரெனப் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக பல தரப்புக்களுடனும் போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர பேச்சு நடத்தியுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோரை உள்வாங்கி மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் ஆய்வில் 100 வீதம் இந்தச் சேவை இரத்துச் செய்யப்படவேண்டும் என்ற கருத்துகளே பெறப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது.

# கோட்டாவின் முடிவை வரவேற்கின்றது சீனா



கொழும்பு, டிசெ. 22

அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பில் சீனக் கம்பனியுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையை மீளாய்வு செய்யப் போவதில்லை என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கூறியதைச் சீனா வரவேற்றுள்ளது. இது தொடர்பாக சீனத் தூதரகம் நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் சுயாதிபத்தியத்தையும், ஆள்புல ஒருமைப்பாட்டையும் பெரிதும் மதிப்பதாக சீனா மீண்டுமொரு தடவை வலியுறுத்துகிறது. அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் பாதுகாப்பும், கட்டுப்பாடும் இலங்கை அரசினதும் அதன் கடற்படையினதும் கட்டுப்பாட்டிலேயே இருக்கும். இலங்கையின் வேறு துறைமுகங்களின் பாதுகாப்பும், கட்டுப்பாடும் தொடர்பில் கடைப்பிடிக்கப்படும் நடைமுறைகளிலிருந்து வேறுபட்டதாக அம்பாந்தோட்டைத் துறைமுகம் இருக்கப் போவதில்லை.

கொழும்பிலுள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்களைக் கடந்த 19 ஆம் திகதி சந்தித்த ராஜபக்ஷ அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பில் தற்போது நடைமுறையிலிருக்கும் உடன்படிக்கையை இலங்கை அரசு மீள்பேச்சுக்கு உட்படுத்தப்போவதில்லை என்பதையும், கைச்சாத்திடப்பட்ட வர்த்தக உடன்படிக்கை ஆட்சிமாற்றத்தின் விளைவாக மாற்றியமைக்கப்படப் போவதில்லை என்பதையும் தெளிவாகக் கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் கருத்துக்களைப் பெரிதும் மெச்சுகின்ற சீனா உடன்படிக்கையின் நடைமுறைப்படுத்தலைத் துரிதப்படுத்துவதற்கும், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கும் இலங்கைத் தரப்புடன் சேர்ந்து பணியாற்றுமாறு சம்பந்தப்பட்ட சீன நிறுவனங்களுக்கு வழிகாட்டலை வழங்கத் தயாராக இருக்கிறது - என்றுள்ளது.

(ஐ)

# எம்.சி.சி, அக்ஸா ஒப்பந்தங்களை கிழித்து எறிந்து விடவேண்டும்

## அரசுக்கு சஜித் பிரேமதாஸ 'அட்வைஸ்'



கொழும்பு, டிசெ. 22

எம்.சி.சி, அக்ஸா உள்ளிட்ட நாட்டுக்குப் பாதகமான சகல ஒப்பந்தங்களையும் கொழும்பிலுள்ள சுதந்திர சதுக்கத்தில் வைத்து கிழித்து எறிந்துவிட வேண்டுமென முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்தார்.

களுத்துறையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டுக்கு அவசியமற்ற ஒப்பந்தங்களைக் கைசாத்திடவேண்டாம் என்பதைக் கூறியே 69 இலட்சம் பேர் புதிய ஜனாதிபதிக்கு வாக்களித்தனர். அந்த மக்கள் ஆணைக்கு மதிப்பளிக்கவேண்டியது அவசியம்.

அதேபோல் ஐக்கிய தேசியக் கட்சியினர் சகலரும், அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்காக ஒன்றுபடவேண்டியது அவசியம். கட்சிக்குள் பிரதமர் வேட்பாளர் என்ற புதியதொரு பதவி அந்தஸ்து கொண்டுவரப்பட்டுள்ளதை நான் வேடிக்கையாகக் கருதுகிறேன் – என்றார்.

(ஐ)

# சுவிஸ் அரசின் சிறப்புத் தூதுவர் அமைச்சர் தினேஷுடன் பேச்சு!

கொழும்பு, டிசெ. 22

சுவிற்ஸர்லாந்து வெளிவிவகார அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்ட சிறப்புத் தூதுவரான ஜோக் டிரைடன் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தவை நேற்று முன்தினம் மாலை சந்தித்து கலந்துரையாடினார்.

சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கும் கொழும்பிலுள்ள சுவிஸ் தூதரகப் பெண் கடத்தல் மற்றும் கைது விவகாரத்தைக் கையாள்வதற்காக சுவிற்ஸர்லாந்து பிரதிநிதியாக ஜோக் டிரைடன் நேற்று முன்தினம் பகல் இலங்கையை வந்தடைந்தார். இவர் நேற்று முன் தினமே வெளிவிவகார அமைச்சருடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இதேவேளை சுவிஸ் தூதரகப் பெண் பணியாளர் கடத்தப்பட்டு விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டார் எனக் கூறப்படுகின்ற சம்பவம் தொடர்பிலான விசாரணையின் தரம் குறித்து கொழும்பிலுள்ள வெளிநாட்டு தூதுவர்களுக்கு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன நேற்றுமுன் தினம் தெளிவுபடுத்தினார்.

இந்தச் சந்திப்புக்கு இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மன், ரோமானியா, நெதர்லாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

(ஐ)





பாற்கடல்
மு.சிவநேசன்
sivanesan@usa.com



# வெள்ளைத் தீவில் சாம்பல் மேடு

தொடர்ச்சி

நியூசிலாந்தின் வகாரி (வெள்ளைத் தீவு) எரிமலை, அதன் வட தீவிற்கு வடக்கே, கடல் மட்டத்தில் தனது உலைமுகத்தை கொண்டு, தன்னை பிளென்ரி விரிகுடாவில் பெரும் பகுதியை அமிழ்த்திய நிலையில் நிலைகொண்டுள்ளமை உல்லாசம் விரும்பிகளுக்கும், ஆய்வாளர்களுக்கும் சௌகரியமாக அமைகிறது.

பிளென்ரி விரிகுடாவோ எல்லையில்லாத பரந்த பசுபிக் சமுத்திரத்துள் திறக்கிறது.




வட தீவிலிருந்து சிறிய தூர கடற் பயணத்தில், வெறும் 50 கி.மீ தொலைவில், மலையேற்றம் என்று அதிகம் பிரயாசை இல்லாமல், கடல் மட்டத்தில் இருந்து வெறும் 321 மீற்றர் உயரத்தில், எரிமலையின் உலைமுகத்தை அடைந்துவிடலாம். எனவேதான் உல்லாசப் பயணிகள் அதிகளவில் குடும்பம் குடும்பமாக இங்கே படையெடுக்கிறார்கள். ஒரு தாவரம் கூட கிடையாத வெள்ளைத் தீவு அது. இந்த வட்டத் தீவின் விட்டம் ஆக இரண்டு கி.மீ.மட்டுமே, பரப்பளவோ 800 ஏக்கர். அதாவது 12,800 பரப்பு. கடற்படுக்கையில் இருந்து மலையின் உயரமோ 1600 மீற்றர். அதாவது இதன் உயரம் ஒரு மைல் எனலாம். உள்ளே குமுறும் இதன் உடலின் பெரும்பகுதி கடலினுள் அமிழ்ந்தே கிடக்கிறது. எனவே கப்பலில் வந்து தீவில் இறங்குமிடம் ஒரு மலைஉச்சி என்பது மலைக்க வைக்கிறது.

டிசெம்பர், 1975 இல் சீறிய இந்த எரிமலை செப்டெம்பர் 2000 இல்தான் ஓய்வுக்கு வந்தது. இதனால் உலகினில் தொடர்ச்சியாக மிக நீண்ட காலம் சீறிய வரலாற்றினை இது தனதாக்கிக் கொண்டுள்ளது. மீண்டும் 2012, 2016, 2019 இல் இது சீற்றம் கொண்டுள்ளது. 1930 வரை இது ஒரு கந்தகச் சுரங்கமாக இருந்து வந்துள்ளது. 1914 இல் பத்து சுரங்கத் தொழிலாளர்களை இது காவு கொண்டிருந்தது. தற்போது சுரங்க நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளன.


ஆபத்தான பெருமளவிலான கந்தக ஒட்சைட் வாயு வெளியேற்றம், கொதிநீராவி, கொதிக்கும் சேற்றுக் குழம்பு குளங்கள் மற்றும் பாகு ஓட்டங்கள், பூகம்பம், பாறைப் பொழிவுகள், சாம்பல் மண்டலம், சுனாமி என்று பல வடிவங்களில் இது உருக்கொள்ள வல்லது.

நியூசிலாந்து நேரப்படி, 09.12.2019 திங்கட்கிழமை மதியம் கடந்து, மாலை 2.10 வரை எதுவித எச்சரிக்கையையும் வெளியிடாது இது மௌனம் காத்து நிற்கிறது. தீவில் சுமரர் ஐம்பது பேர் வரையிலான உல்லாசப் பயணிகள் ஒரு குறுகிய விஜயத்தை மேற்கொண்டு இருக்கிறார்கள். இவர்களில் 24 ஆஸ்திரேலியர்கள், ஒன்பது அமெரிக்கர்கள், ஐந்து நியூசிலாந்துக்காரர். அவர்களில் சிலர் வழிகாட்டிகள் மற்றும் பிரித்தானிய, ஜேர்மனிய, மலேசிய, சீனப் பிரஜைகள் அடக்கம்.

எமது வானிலை அறிவிப்புக்கள், சுனாமி எச்சரிக்கைகள் போலவே, அடிக்கடி எச்சரிக்கைகள் விடப்படுவதும், ஆனால் அன்று எதுவுமே இடம் பெறாமையும் வழமையான வேடிக்கையான நிகழ்வுகள். விஞ்ஞானிகள் மற்றும் கருவிகள் கணனிகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு இந்த எரிமலை 2.11 அளவில் வெடித்துச் சீறியதில் அங்கே நின்றிருந்த அனைவருமே இறந்தோ கடுமையான காயங்களுக்கு ஆளாகியோ விட்டார்கள். அவர்களின் சோக வரலாறுகள் மெல்ல மெல்ல கட்டவிழ்ந்து வருகின்றன. கேட்பவர்கள் பலரின் முகத்தில் ஈயாடவில்லை. சோகம் மெல்ல மெல்ல ஆஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் உலக நாடுகளை கௌவி வருகிறது. இந்தக் கிறிஸ்மஸ் பலருக்கு சோபிக்கப் போவதில்லை.



முதலாவதாக இறந்துவிட்டவர் என அறிவிக்கப்பட்டவர் ஆஸ்திரேலியாவின் மெல்பனை சேர்ந்த 21வயதான விலங்கு ஆர்வலர். துடிப்பான கால்நடை வைத்திய மாணவி Krystal Eve Browitt என்பவர். இவர்கள் குடும்பமாக ஒரு பயணிகள் கப்பலில் இந்தப் பிராந்தியத்திற்கு குறுகிய விஜயமொன்றை மேற்கொண்டு இருந்தனர். இளையவர்கள் பலரும் குப்பைகளைக் குவிக்கும் முகநூல் களத்தில், இவரது முகநூல் பதிவுகளை பார்க்கும்போது உலகம் ஓர் இளம் இயற்கை ஆர்வலரை இழந்துவிட்டது என்றே கூற வேண்டும். உலக வெப்பமயமாதல், அருகிவரும் விலங்கினங்கள், காட்டுத் தீ, மாசடைதல் போன்ற பல பிரச்சினைகளுக்கு எதிரான குரல் கொடுக்கின்ற விழிப்புணர்வு பிரச்சார இயந்திரம் ஒன்று துடித்து மடிந்துவிட்டது என்றே கூறவேண்டும். இப்படியான இழப்புக்கள் இன்றைய இக்கட்டான உலக நிலமையில் பேரிழப்பு என்றே கருதப்படல் வேண்டும்.




இவர் தனது தகப்பன் போல் உடனும் அக்கா ஸ்ரெபினுடனும் தீவில் கால் பதித்து இருந்தார். தாயரர் மேரி அதிர்ஷ்டவசமாகவோ அல்லது இந்தக் கொடுமையை அனுபவிக்கவென்றோ தீவில் இறங்காது கப்பலிலேயே தங்கிக் கொண்டார். தற்போது இளைய மகளை இழந்து, கணவனையும் மூத்த வளையும் ஓக்லன்ட் மற்றும் கிறிஸ்ட்சேச் என இருவேறு வைத்தியசாலைகளில் கோமா நிலை யில் தீவிர சிகிச்சைப் பிரிவில் போராடும் நிலமை யில் விட்டு, இவர் தப்பித் தவிக்கிறார். தனது மக ளின் அருகில் கிறிஸ்ட்சேச் வைத்தியசாலையில் தடுமாறி நிற்கிறார். நாடுவிட்டு நாடுவந்து விடு முறையை உல்லாசமாகக் கழிக்க வந்த நிலையில் இந்தக் கதி ஏற்பட்டு உள்ளது கொடுமையிலும் கொடுமையே.

பிறேசிலின் அமேசன் மழைக் காடுகளில் காட்டுத்தீ தீவிரமடைந்து வருகையில், அது எங்கள் உள் நாட்டு விவகாரம், அதைப்பற்றி ஏனைய நாடுகள் அக்கறைப்படத் தேவையில்லை என்ற சாரப்பட பிறேசில் அரசுகூட கருத்து வெளியிடுகின்ற நிலமையில், உலகினில் என்ன இடம்பெற்றாலும் அதைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் இளஞ் சமுதாயம் முகநூலில் தமது வழமையான உல்லாசங்களில் திளைத்திருக்கும் காலகட்டத்தில், அமேசன் வனப்பகுதி என்பது தன்வீடு பற்றி எரிவது போல, ஆஸ்திரேலியாவில் இருந்து துடித்து, அங்குள்ள தாவரங்கள், விலங்கினங்கள் பற்றிய கவலையோடு தனது முகநூல் பதிவுகளை மேற்கொண்டவர் Krystal Eve Browitt. மேலும் உலக வெப்பமயமாதல், காலநிலை மாற்றங்கள், பிளாஸ்ரிக் மாசுக்கள், அருகிவரும் தாவரங்கள் மற்றும் உயிரினங்கள், ஆசிய நாடுகளில் இறைச்சிக்காகக் கொல்லப்படும் நாய்கள், பூனைகள் என்றெல்லாம் சமூக அக்கறையுடனான பதிவுகளையே தனது முகநூல் பக்கத்தில் நிரப்பும் இவரது இழப்பு இயற்கை ஆர்வலர்களால் ஜீரணிக்க இயலாத ஒன்றே.

பலரும் தமது ஆதங்கங்களை அவரது ஓய்ந்துவிட்ட முகநூல் பக்கத்தில் கருத்திட்டு வருகிறார்கள்.



நாய்களை வளர்ப்பவர்களின் ஆலோசனை களஞ்சியமாக இவர் திகழ்ந்துள்ளமை அவர்களது புலம்பல்களில் தெரியவருகிறது. விலங்குகளின் குரல் ஓய்ந்துவிட்டது என்று பலர் கருத்திடுகிறார்கள். இறந்த பின்பும் அவரோடு பேசுகின்ற திருப்தியை முகநூலில் பெற முனைகிறார்கள். பரிதாபம் அவர் தனது பிறந்தநாளைக் கொண்டாடிய வேளை அது.

(தொடரும்)

காலைக்கதிர்
Kalaikathir



# ஈழத்தில் திருப்பாவையும் ஆண்டாளும் ஒரு நோக்கு

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா .
(மெல்பேண் - ஆஸ்திரேலியா)



'மாதங்களில் நான் மார்கழி' என்று கீதையில் கண்ணன் கூறுகிறான். அந்த வாக்கை வைணவர்கள் மனங்கொண்டு மார்கழி முழுவதையும் வழிபாட்டுக்கு உரிய மாதமாக்கி விட்டார்கள் என்றுதான் எண்ண வேண்டி இருக்கிறது.

மார்கழி என்றதும் சுப நிகழ்ச்சிகளைச் செய்வதை பொதுவாகவே இந்துக்கள் தவிர்த்துக் கொள்ளுகிறார்கள். இந்த நிலை ஈழத்திலும் காணப்படுகிறது.

திருமணம், வீடு குடிபுகுதல்,காதுகுத்தல், ஏடு தொடக்குதல் முதலான சுப வியங்களை மார்கழியில் செய்வதைத் தவிர்த்து விடுகிறார்கள். அப்படித் தவிர்ப்பதற்கு அவர்கள் கூறும் காரணம் மார்கழி பீடை பிடித்த மாதம் என்பதே ஆகும். ஆனால் உண்மையில் மார்கழி பீடுடைய மாதமே என்பதை மனமிருத்தத் தவறி விடுகின்றனர்.

மார்கழி தேவ வழிபாட்டுக்கு உகந்த மாதம் என்பதாலேயே அதில் மக்களுக்கான விழாக்களைத் தவிர்த்தார்கள் என்பதுதான் உண்மையாகும்.

மார்கழியில்தான் திருப்பாவை, திருவெம்பாவை பாடப்படுகின்றன. ஆருர்த்தா தரிசனம், வைகுண்ட ஏகாதசி, சொர்க்கவாசல் திறத்தல் போன்ற முக்கிய தெய்வ வழிபாடுகள் இடம்பெறுகின்றன. இந்த வகையில் மணிவாசகப் பெருமானும் ஆண்டாள் நாச்சியாரும் சைவர்களாலும்,வைணவர்களாலும் ஏற்றிப் போற்றி வணங்குதலுக்கு ஆளாகி இருப்பதையும் காண்கின்றோம்.

மணிவாசகப் பெருமானின் திருவெம்பாவை பற்றி ஈழத்தவர்களுக்கு மிகவும் நன்றாகவே தெரியும். ஈழத்தில் இருக்கும் சைவக் கோவில்கள் பெரியனவாக இருந்தாலும், சிறியனவாக இருந்தாலும், அங்கெல்லம் மார்கழியில் திருவெம்பாவை மிகவும் பக்திபூர்வமாக அனுஷ்டிக்கப்படும்.

காலையில் அதுவும் மிகவும் அதிகாலையில் திருப்பள்ளி எழுச்சியுடன் ஆரம்பித்து திருவெம்பாவை பாடல்முழுவதும் பாடி கோவிலில் பூஜை வழிபாடு நிறைவு பெறும்.

சைவ ஆலயங்கள் அனைத்திலும் இந்த நடைமுறை நீண்ட காலமாகவே நடைபெற்று வருவதை யாவரும் அறிவர்.

அதேவேளை விஷ்ணு ஆலயங்களில் திருவெம்பாவைக்குப் பதிலாக திருப்பாவை பாடப்படும் முறை காணப்படுகிறது. திருவெம்பாப் பாடல்களை பெரும்பாலான சைவர்கள் அறிந்தளவும் திருப்பாவையினை அறிந்தவர்களாக இல்லை என்பது முக்கிய வியமாகும். அதேநேரம் மணிவாசப் பெருமானை அறிந்ததுபோல் ஆண்டாள் நாச்சியார் அதிகளவில் அறியப்படவில்லை என்பதும் நோக்கத் தக்கதாகும்.

ஈழத்தில் பல பாகங்களிலும் விஷ்ணு ஆலயங்கள் அமைந்திருக்கின்றன. அங்கெல்லாம் பூஜைகளை ஆற்றுகின்றவர்கள் பெரும்பாலும் சிவப் பிராமணர்களே என்பது இங்கு முக்கியமாக நோக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஈழத்தில் சைவமே நிறைந்து காணப்படுகிறது. வைஷ்ணவம் என்னும் பெயர் படித்தவர்கள் மட்டத்தில் தெரிந்தளவு பாமர்களிடம் சென்றடையவில்லை என்றுதான் கொள்ள வேண்டி இருக்கிறது. வைஷ்ணவ சம்பிரதாயங்கள் இந்தியாவில் இருப்பது போன்று ஈழத்தில் இல்லை என்பது மனங்கொள்ளத்தக்கதாகும். வடகலை, தென்கலை நாமம் இடுதல் என்றால் பெரும்பாலான ஈழத்தவர்களுக்கு விளங்குமா என்பது ஐயமேயாகும். இந்த நிலையில் வைஷ்ணவ அடியவாராய் விளங்கும் ஆண்டாள் நாச்சியார் பற்றியும் அநேகம் பேர் அக்கறை காட்டும் நிலையிலும் இல்லை என்றுதான் எண்ண வேண்டி இருக்கிறது. மணிவாசகப் பெருமானை அறிந்து வைத்திருக்கும் அளவுக்கு சூடிக்கொடுத்த சுடர்க் கொடியை அறிந்திருப்பவர் மிகவும் குறைவாகவே காணப்படுகிறார்கள். பல்கலைக்கழகத்தில் தமிழை, இந்துநாகரிகத்தைப் படிக்கும் மாணவர்களும் படிப்பிக்கும் ஆசிரியர்ளும் பாடத்துக்காக ஆண்டாள் நாச்சியாரையும் அவரது திருப்பாவையும் அவரின் படைப்புக்களையும் அவர் பற்றிய வரலாற்றையும் அறிந்து வைத்திருக்கிறார்களே அன்றி, மற்றவர்களுக்கு அந்த வாய்ப்பு மிகவும் அரிதாகவே இருக்கிறது என்பது மிகவும் முக்கிய வியமாகும்.

யாழ்ப்பாணம் முழுவதும் நாவலர் கலாசாரம், கந்தபுராண கலாசாரம் நிறைந்த இடமாகும். இங்குள்ள கோவில்கள் பெரும்பாலும் ஆகம விதிப்படி பூஜைகள் நடைபெறும் சைவக் கோவில்களேயாகும். ஆனால் பொன்னாலை வரதராஜப் பெருமாள், வல்லிபுர ஆழ்வார், யாழ்நகரில் உள்ள பெருமாள் கோவில், தற்பொழு இணுவிலில் புதிதாக அமைக்கப்பட்ட இணுவில் திருப்பதி கோவில் யாவும் விஷ்ணு கோவில்களே ஆகும். விஷ்ணு கோவிலாக இருந்தாலும் வைஷ்ண பட்டாச்சாரியார்கள் இங்கு பூஜை ஆற்றுவதில்லை. இங்கு பூஜை ஆற்றுகிறவர்கள் யாவருமே சிவப் பிராமணர்களே என்பது நோக்கத்தக்கதாகும்.



ஈழத்திலுள்ள விஷ்ணு ஆலயங்களில் சிவப் பிராமணர்களும், சைவர்களும் இருந்தாலும் மார்கழியில் அங்கெல்லாம் ஆண்டாள் நாச்சியாரின் வடிவங் கொண்ட சிலை உள்வீதியில் பக்தியுடன் வலம் கொண்டுவரப்பட்டு ஸ்ரீரங்கநாதர் முன்னே வைக்கப்பட்டு திருப்பாவை இன்றளவும் காலைப் பூஜையின் பொழுது பாடப்பட்டு வருகிறது என்பது முக்கிய அம்சம் எனலாம்.

வைஷ்ணவம் என்பது சமயபாடப் புத்தகத்தில் படிக்கும் அளவுக்கு ஈழத்தில் இருக்கிறதே அல்லாமல் சைவம் போன்று மக்களால் கடைப்பிடிக்கும் அளவுக்கு இல்லை என்பது மனங்கொள்ளத் தக்கதாகும்.

திருமுறைகளும், நாயன்மார்களும் அறியப்பட்டளவுக்கு ஆழ்வார்களும் அவர்களது பாசுரங்களும் பொதுமக்களிடம் சென்றடையவில்லை என்றுதான் கருதவேண்டி இருக்கிறது. அதற்குக் காரணம் ஈழத்தில் சைவம் பெற்ற முக்கியத்துவமே எனலாம். அறுபத்து மூன்று நாயன்மார் பெற்ற முக்கியத்துவத்தை பன்னிரு ஆழ்வார்களும் ஈழத்துப் பெரும்பாலான மக்களிடம் பெற்றிருக்கிறார்களா என்பது ஐயத்துக்கு உரியதாகவே இருக்கிறது. பெரிய புராணம் கோலோச்சிய அளவுக்கு, கந்தபுராணம் போற்றப்படும் அளவுக்கு வைஷ்ணவ ஆழ்வார்களும் அவர்களது திருப்பாசுரங்களும் அறியப்பட்டிருப்பது மிகவும் குறைவென்றே கொள்ள வேண்டி இருக்கிறது.



சமயச் சொற்பொழிவாற்றுகின்ற பெரியவர்கள்கூட சைவ இலக்கியங்களையும், சைவ மேன்மைகளையும் எடுத்துச் சொல்லுவார்களே அன்றி வைஷ்ண சம்பிரதாயங்களையோ அல்லது வைஷ்ணவ ஆழ்வார்களையோ பற்றியோ சொல்லுவது மிகவும் அரிதாகும். மணிவாசகர் மன்றம், மணிவாசகர் சபை என்றெல்லாம் அமைத்து அதன்மூலம் போட்டிகளிம் பரிசுகளும் அளித்து மார்கழியில் வீதிகளில் மணிவாசகரின் திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பா பாடல்களைப் பாடும் அளவுக்கு ஆண்டாள் நாச்சியாரோ அவரது திருப்பவையோ இடம்பெற்றனவாகத் தெரியவில்லை.

நாயன்மார்களைப் போற்றும் முகமாக குருபூசைத்தினம் என்று அமைத்து கோவில்களிலும், பாடசாலைகளிலும், சிறப்பான பூஜை வழிபாடு செய்யும் அளவு வைஷ்ணவ ஆழ்வார்களுக்கோ, குறிப்பாக ஆண்டாள் நாச்சியாருக்கு ஈழத்தில் செய்யப்படுவது அரிதென்றே சொல்லலாம்.

யாழ்ப்பாணத்தில் புதிதாக இணிவிலில் திருப்பதி என்னும் பெயரில் விஷ்ணுவுக்கு பெரியதொரு கோவில் அமைக்கப் பட்டிருக்கிறது. இங்கு விநாயகர் தொடக்கம் விஷ்ணுவரை மிகவும் பிரமாண்டமான சிலை விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. இக்கோவிலில் ஆண்டாள் நாச்சியாருக்கும் ஒரு சன்னிதானம் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கு செல்லும் அடியவர்கள் ஆண்டாள் நாச்சியாரையும் வணங்கியே செல்லுகிறார்கள்.

விஷ்ணு ஆலயங்களில் ஆண்டாள் நாச்சியார் வைக்கப்பட்டிருக்கிறார். ஆனால் வழிபடச் செல்லும் அடியார்களுக்கு சரியான விளக்கம் இல்லாத காரணத்தால் விஷ்ணு கோவில் செல்பவர்கள் ஆண்டாள் பற்றிக் கவனம் செலுத்தத் தெரியாதவர்களாகவே இருக்கிறார்கள் என்பதும் நோக்கத்தக்கது.

வல்லிபுரக் கோவிலில் திருமண்ணும் திருநீறும் வழங்கப்படுகிறது. விஷ்ணு ஆலயமாக இருந்தாலும் சிவனும் விஷ்ணுவும் இங்கு பிரித்துப் பார்க்கும் விதத்தில் வழிபாடு அமையவில்லை என்றுதான் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஆண்டாள் நாச்சியாரின் தமிழ் அமுதத் தமிழ். அவரின் பக்தி அளவிடமுடியாத பக்தி. ஈழத்தில் சைவத்தின் உச்சத்தால் வைஷ்ணவ அடியரான ஆண்டாள் நாச்சியாரை சாதாரண மக்கள் அறியும் வாய்ப்புக் கிட்டவில்லை என்றுதான் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெறும்செந் நெல்ஊடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண் படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கமு குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்.

## திருத்தந்தையின் கிறிஸ்மஸ் நிகழ்வுகள்

24 டிசம்பர் 2019 இரவு புனித பேதுரு பெருங்கோவிலில் திருத்தந்தை பிரான்சிஸ் கிறிஸ்து பிறப்பு பெருவிழா நள்ளிரவுத் திருப்பலியை நடத்துவார். 25 டிசம்பர் 2019 அன்று கிறிஸ்து பிறப்பு பெருவிழாவன்று மதியம் புனித பேதுரு வளாகத்தின் மேல் மாடத்திலிருந்து 'ஊருக்கும் உலகுக்கும்' என்று பொருள்படும் சிறப்புச் செய்தியையும் சிறப்பு ஆசீரையும் திருத்தந்தை வழங்குவார்.

காலைக்கதிர் Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ் TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## திருத்தந்தையின் புத்தாண்டு நிகழ்வுகள்

31 டிசம்பர் 2019 அன்று மாலையில் புனித பேதுரு பெருங்கோவிலில் தே தேயும் என்ற நன்றி வழிபாட்டை தலைமையேற்று நடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ் மறுநாள் புத்தாண்டு நாளன்று சிறப்பிக்கப்படும் மரியா இறைவனின் தாய் என்ற பெருவிழா திருப்பலியை நிறைவேற்றுவார். 06 சனவரி 2020 அன்று கொண்டாடப்படும் திருக்காட்சி பெருவிழாவன்று புனித பேதுரு பெருங்கோவிலில் காலைத் திருப்பலியை அவர் நிறைவேற்றுவார்.

# கிறிஸ்மஸ் குடில் ஒரு வாழும் நற்செய்தி

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கிறிஸ்மஸ் பெருவிழாவுக்கு சரியாக ஒரு வாரமே இருக்கும் நிலையில் அப்பெருவிழாவுக்காக நம்மை எவ்வாறு தயாரித்து வருகிறோம் என்பது குறித்து மறைக்கல்வி உரையை வழங்கினார்.

அன்பு சகோதர சகோதரிகளே திருவருகைக் காலத்தின் இந்த இறுதி நாள்களில் இயே சுவின் பிறப்பிற்காக நம்மை நாம் எவ்விதம்தயாரிக்கிறோம்என்றகேள்வியை நமக்குள் கேட்பது சிறப்பு. கிறிஸ்து பிறப்பு விழாவுக்காக நம்மைத் தயாரிக்கும் வழிகளில் ஒன்று அசிசியின் புனித பிரான்சிஸ் அவர்கள் தொடங்கி வைத்த அழகு நிறை பாரம்பரியத்தைப் பின்பற்றி நம் வீடுகளிலும் கோவில்களிலும் பொது இடங்களிலும் இயேசு பிறப்பு குடிலை அமைப்பதாகும். கிறிஸ்மஸ் குடில் என்பது ஒருவகையில் வாழும் நற்செய்தியாகும்.



நம்மீது அன்பு கொண்டிருப்பதன் வெளிப்பாடாகவும் நம் தினசரி வாழ்வையும் நம் நம்பிக்கைகளையும் அக்கறையையும் நம்முடன்பகிர்ந்துகொள்ளவும்நம்மிடையே மனிதராக இறைவன் பிறந்தார் என்ற நெஞ்சைத் தொடும் உண்மையை நினைவுபடுத்தி நிற்கின்றன இந்தக் குடில்கள். அப்பத்தின் வீடு என்று பொருள்படும் பெத்லகேமும், தீவனத்தொட்டியின் காட்சியும் நாம் ஒரே குடும்பமாக பகிர்ந்துண்ணும் உணவு குறித்தும் நம் குடும்ப வாழ்வில் மையமாக இருக்கும் இயேசு வானகத்திலிருந்து உயிர்தரும் உணவாக இறங்கிவந்ததையும் நினைவூட்டி நிற்கின்றன.

இயேசு பிறந்துள்ள இந்த எளிமையான காட்சியை நாம் உற்றுநோக்கும் வேளையில் அவரை நாம் நம் இதயங்களுக்குள் அழைப்போம். அவ்வாறு நாம் அழைப்பதன் வழியாக ஒவ்வொரு புதிய நாளும் நமக்கு ஆன்மீக மறுபிறப்பைக் கொணர்ந்து கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சியை நமக்குள் தங்க வைக்கும்.

# உலக கத்தோலிக்கத் திருச் சபையின் தலைவர் திருத்தந்தை பிரான்ஸிஸ் 83ஆவது அகவையில்



17 டிசம்பர் 2019 அன்று தன் 83வது பிறந்த நாளைச் சிறப்பித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு முன்னாள் திருத்தந்தை முதலாம் பெனடிக்ட் அவர்கள் பல்வேறு சமயத் தலைவர்கள், அரசுகளின் தலைவர்கள் உட்பட உலகெங்கிலுமிருந்து பலதரப்பு மக்கள் செபங்களும் நல்வாழ்த்துக்களும் நிறைந்த செய்திகளை அனுப்பியுள்ளனர். ஆயிரக் கணக்கான வாழ்த்து மின்னஞ்சல்கள் மற்றும் சிறாரின் நல்வாழ்த்துக் கடிதங்களும் திருத்தந்தைக்கு வந்து சேர்ந்துள்ளன.

இத்தாலிய அரசுத்தலைவர் செர்ஜோ மத்தரெல்லா அவர்கள் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் பிரிவினைகளைப் பின்னுக்குத் தள்ளி அமைதியைக் காக்கவும் உரையாடலில் ஈடுபடவும் இப் பூமியின் வளங்களை ஞானத்தோடு நிர்வகித்துக் காக்கவும் தனது அயராத மேய்ப்புப்பணி நடவடிக்கைகள் வழியாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மக்களையும் நாடுகளையும் தொடர்ந்து ஊக்கப்படுத்தி வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளார்.

தன் அருள்பணித்துவ வாழ்வில் ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்யும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு, கர்தினால்கள் அவைத் தலைவர் கர்தினால் ஆஞ்சலோ சொதானோ அவர்களும் உலகின் தலத்திருஅவைத் தலைவர்களும் ஏனையோரும் தங்கள் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வத்திக்கானில் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் 13 டிசம்பர் 2019 அன்று காலையில் நன்றித் திருப்பலியை நிறைவேற்றிய வேளை அத்திருப்பலியின் தொடக்கத்தில் அனைத்து கர்தினால்கள் சார்பாக நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார் கர்தினால் சொதானோ.

# யாழ் மறைமாவட்டத்தை சேர்ந்த இருவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது

07 டிசெம்பர் 2019 அன்று கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வழங்கப்பட்ட தர்மபிரபாஷ்வர விருது வழங்கும் நிகழ்வில் யாழ் மறைமாவட்டத்தை சோந்த இருவர் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் பணியாற்றி வரும் திருவாளர் இசிதோர் மரியதாஸ் ஜெயசீலன் மற்றும் இரணைப்பாலை பங்கைச் சேர்ந்த திருமதி பிலோமினா யேசுராசா ஆகிய இருவருமே இவ்வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை பெற்றுக் கொண்டவர்களாவர்.

மேற்படி நிகழ்வில் தேசிய ரீதியாகவும் மறைமாவட்ட ரீதியாகவும் பல்வேறு துறைகளில் பணியாற்றுபவர்களிலிருந்து 37 கலைஞர்கள் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

திருவாளர் இசிதோர் மரியதாஸ் ஜெயசீலன் 1950ஆம் ஆண்டு பிறந்தவர். பருத்தித்துறை புனித தோமையார் ஆலயப் பங்கைச் சோந்தவர். 1969ஆம் ஆண்டு இந்தியா திண்டிவனத்தில் மறையாசிரியர் பயிற்சி பெற்றவர். 30 நாடகங்களைத் தயாரித்து நெறிப்படுத்தியவர்.ஐந்துக்கு அதிகமான நாடகங்களை தயாரித்து நெறிப்படுத்தி அவற்றில் நடித்தும் உள்ளார். பருத்தித்துறை ,முருங்கன், கரவெட்டி ஆகிய இடங்களில் 5 தடவைகள் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியை மேடையேற்றியுள்ளார். மிக பிரமாண்டமான முறையில் மறைக்கல்வி கண்காட்சிகளை ஒழுங்கு படுத்தி பொம்மலாட்டம் மூலமாக புனிதர் வரலாறு மற்றும் வேதாகமக் கதைகள் போன்றவற்றை காடசிப் படுத்துவதில் வல்லவர்.

திருமதி பிலோமினா யேசுராசா 1961ஆம் ஆண்டு பிறந்தவர். இரணைப்பாலை பங்கைச் சோந்தவர். கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக இரணைப்பாலை பங்கில் மறையாசிரியராகவும் பல வருடங்களாக பாடசாலையில் கத்தோலிக்க பாட ஆசிரியராகவும் பணியாற்றி வருகிறார். நாட்டுக் கூத்துக்களில் நடித்துள்ள இவர் கும்மி, கரகாட்டம், கோலாட்டம், காவடி, அருவி வெட்டு நடனம், மீனவ நடனம், பாம்பு நடனம், வேப்பிலை நடனம், ஒயிலாட்டம், பொம்மலாட்டம் போன்ற கலை வடிவங்கள் ஊடாக கத்தோலிக்க விழுமியங்களையும் தமிழர் பண்பாட்டையும் பாதுகாத்து வருகிறார். வடமோடி, தென்மோடி, சிந்து போன்ற நாடகக் கூத்துக்களில் பாண்டியத்துவம் பெற்ற இவர் ஞான சவுந்தரி அர்ப்பணம், ஏமாந்தான் ஏரோதன், யோசவ்வாஸ் போன்ற கூத்துக்களை நெறியாள்கை செய்து மேடையேற்றியுள்ளார்.

வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற திருவாளர் இசிதோர் மரியதாஸ் ஜெயசீலன் மற்றும் இரணைப்பாலை பங்கைச் சேர்ந்த திருமதி பிலோமினா யேசுராசா ஆகிய இருவரையும் காலைக்கைதிர் கிறிஸ்தவ செய்தி இதழின் அன்பு நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்துகிறோம்.








# ஒருபுறம் உடல்பருமன் பிரச்சினை மறுபுறம் ஊட்டச்சத்து குறைபாடு



**உடல்பருமன் ஏழை நாடுகளையும் விட்டுவைக்கவில்லை-காரணம்என்ன?**

உலகிலுள்ள மூன்றில் ஒரு பகுதி நாடுகள் அதிக உடல் பருமனையும், ஊட்டச்சத்து குறைபாடு பிரச்சினைகளையும் கையாண்டு வருக்கின்றன என லான்செட் சஞ்சிகையில் வெளியான அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

அதிக பதப்படுத்தப்பட்ட உணவுகள் உலக அளவில் எளிதில் கிடைப்பதாலும், உடற்பயிற்சி குறைந்துள்ளதாலும் இப்பிரச்சினை நிலவுவதாக இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

இதற்குக் காரணமாக இருக்கின்ற நவீன கால உணவு அமைப்பில் மாற்றங்கள் ஏற்படவேண்டுமென இந்த அறிக்கையைத் தயாரித்தவர்கள் கேட்டு கொண்டுள்ளனர்.

இதனால் சகாரா பாலைவனத்தின் தெற்கிலுள்ள ஆபிரிக்க நாடுகள் மிகவும் பாதிக்கப் படுகின்றன.



இந்தபூமியிலுள்ள சுமார் 230 கோடிகுழந்தைகளும், வயது வந்தோரும் அதிக எடையுடையவராக இருக்கின்றனர் என மதிப்பிட்டுள்ள இந்த அறிக்கை, 15 கோடிக்கு மேலான குழந்தைகள் குன்றிய வளர்ச்சியோடு இருப்பதாகக் குறிப்பிடுகிறது.

குறைவான மற்றும் நடுத்தர வருமானமுடைய பல நாடுகள் ஊட்டச்சத்து குறைபாட்டின் இரட்டை சுமை என்று அறியப்படும் உடல்பருமன், ஊட்டச்சத்து குறைவு என இரண்டு பிரச்சினைகளையும் எதிர்கொண்டு வருகின்றன.

20வீத குழந்தைகள் அதிக எடையுடையதாகவும், நான்கு வயதுக்கு கீழுள்ள 30வீத குழந்தைகள் சரியான வளர்ச்சி இல்லாமலும், 20வீத பெண்கள் ஒல்லியாக இருக்கின்றனர் எனவும் வகைப்படுத்தப்படுவதை இந்த அறிக்கை குறிப்பிடுகிறது.

ஊட்டச்சத்து குறைபாட்டை பெற்றிருக்கும் இரண்டு வடிவங்களாலும் தனிநபர்கள் தங்கள் வாழ்வின் வேறுப்பட்ட நிலையில் பாதிக்கப்படுவதோடு, சமூகங்களும், குடும்பங்களும் பாதிக்கப்படும் என்று இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

1990களில் 123 நாடுகளில் 45 நாடுகளும், 2010களில் 126 நாடுகளில் 48 நாடுகளும் இந்தப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டன என்று இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

1990களில் இருந்து 2010ம் ஆண்டுக்குள் உலகில் குறைவான வருமானமுடைய 14 நாடுகளில் இந்த இரட்டை பிரச்சினை உருவாகியுள்ளது.

**மேசமான உணவு அமைப்பு முறை**

இந்த பிரச்சினைக்குத் தீர்வு காண அரசுகளும், ஐக்கிய நாடுகள் அவையும், கல்வியாளர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறும் இந்த அறிக்கையை தயாரித்தவர்கள், உணவு முறைகளில் மாற்றம் வேண்டும் என்று சுட்டிக்காட்டுகின்றனர்.

மக்கள் சாப்பிடும், குடிக்கும் மற்றும் இயங்குகின்ற வழிமுறைகள் மாறிக்கொண்டிருக்கின்றன. எண் ணிக்கையில் அதிகரித்து வரும் பெருவணிக சந்தைகள், ஊட்டச்சத்து இல்லாத உணவுகள் எளிதாக கிடைப்பது, உடல் ரீதியான செயல்பாடுகள் குறைவது ஆகியவை மக்களை அதிக எடையுடையவர்களாக மாற செய்கின்றன.

இந்த மாற்றங்கள் எல்லாம் குறைவான மற்றும் நடுத்தர வருமானமுடைய நாடுகளையும், அதிகவருமானம்பெறுகின்ற நாடுகளையும் பாதிக்கின்றன.

குழந்தைகள் குன்றிய வளர்ச்சியுடையவையாக வளர்வது பல நாடுகளிலும் அரிதாகி விட்டாலும், அதிக பதப்படுத்தப்பட்ட உணவுகளை குழந்தை பருவத்திலேயே சாப்பிடுவது மோசமான வளர்ச்சி ஏற்படக் காரணமாகிறது.

இந்த அறிக்கையை தயாரித்த உலக சுகாதார நிறுவனத்தின் சுகாதாரம் மற்றும் வளர்ச்சிக்கான ஊட்டச்சத்து பிரிவின் இயக்குநரும், அறிக்கை தயாரித்த குழுவின் தலைவருமான டாக்டர் பிரான்செஸ்கோ பிரான்கா, நாம் புதியதொரு ஊட்டச்சத்து நடைமுறையை எதிர்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானமுடைய, ஊட்டச்சத்து பற்றாக்குறையுடைய, உயர் வருமானமுடைய நாடுகள் என்று இனிமேலும் நம்மால் வகைப்படுத்த முடியாது. உடல் பருமனை பற்றிதான் கவலைபட வேண்டியுள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

குறைவான ஊட்டச்சத்துடைய வடிவங்கள் எல்லாமே, ஆரோக்கியமான, பாதுகாப்பான, மலிவான மற்றும் தொடர்ந்து வழங்கப்படும் உணவுகளை மக்கள் அனைவருக்கும் கொடுக்க முடியாத உணவு அமைப்பையே கொண்டுள்ளன.

உற்பத்தி மற்றும் பதப்படுத்துதலில் இருந்து தொடங்கி, வணிகம் மற்றும் விநியோகம் மூலம் விலை நிர்ணயம், சந்தைப்படுத்துதல், வகைப்படுத்துதல் என நுகர்வு மற்றும் கழிவு வரை உணவு அமைப்பில் மாற்றங்கள் அவசியமாகின்றன என்கிறார் பிரான்கா.

இது தொடர்புடைய கொள்கைகள் மற்றும் முதலீடுகள் எல்லாம் தீவிரமாக மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்று அவர் தெரிவிக்கிறார்.

இந்த அறிக்கையின்படி, உயர் தர உணவில் கீழ்கண்டவைகள் காணப்படும்.–

**அதிக அளவிலான பழங்கள், காய்கறிகள், தானியங்கள், நார்சத்து. பருப்புகள் மற்றும் விதைகள்**

**விலங்குகளிடம் இருந்து பெறப்படும் உணவுகளில் சுமாரான அளவு**

**பதப்படுத்தப்பட்ட இறைச்சியில் குறைவான அளவு**

**அதிக சக்தியை தரக்கூடிய, சர்க்கரை சேர்க்கப்பட்ட, அதிக மற்றும் குறைந்த கொழுப்புடைய இறைச்சி, உப்பு மிக குறைவான அளவு.**

உயர் தர உணவுகள் ஊட்டச்சத்து குறைவு ஏற்படும் ஆபத்தை அகற்றிவிடும். ஆரோக்கியமான வளர்ச்சி மற்றும் வாழ்க்கை முழுவதும் உடலை நோய்கள் அணுகாமல் பாதுகாக்க இது உதவும்.



# ‘சுகர் ப்ரீ’ உணவுகள் பாதுகாப்பானவையா?

‘சுகர் ப்ரீ உணவுப் பொருள்களை சாப்பிடுவது உண்மையில் பாதுகாப்பானதா? இல்லையா?

தற்போதைய காலக்கட்டத்தில் சர்க்கரை நோய் என்பது எல்லோரிடத்திலும் பரவலாக காணப்படுகிறது. இதன் விளைவு மக்கள் ‘சுகர் ப்ரீ' உணவுப் பொருள்களை மட்டுமே நாடிச் செல்லத் தொடங்கியுள்ளனர். உண்மையில் இந்த சுகர் ப்ரீ உணவுப் பொருள்கள் பாதுகாப்பானவையா இல்லையா என்பது கூட அவர்களுக்கு தெரிவதில்லை. அதிலும் சர்க்கரை நோயாளிகள் இதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றனர். சாப்பிடும் பிஸ்கட்டிலிருந்து, காபி, டீ என எல்லாவற்றிற்கும் ‘சுகர் ப்ரீ' யைத் தான் பயன்படுத்துகிறார்கள்.




சீனிச் சத்து பொதுவாக மாவு போன்ற கார்போஹைட்ரேட் உணவுப் பொருள்களில் காணப்படுகிறது. ஆனால் மக்கள் முழுமையாக சர்க்கரையை தவிர்க்க வேண்டும் என்று செயற்கை சர்க்கரைகளை பயன்படுத்துகின்றனர். வெல்லம், தேன் போன்ற இயற்கை பண்டங்கள் நல்லது.

70களில் நடத்திய ஆய்வின் படி செயற்கை இனிப்புகள் எலிகளின் சிறுநீர்ப்பை புற்றுநோய்க்கு காரணமாக அமைகிறது என கண்டறியப்பட்டுள்ளது.

‘சுகர் ப்ரீ' என்பது சர்க்கரை இல்லாதது. இது உங்கள் உணவுக்கு இனிப்பு சுவை அளிப்பதோடு குறைந்த கலோரிகளைக் கொண்டது. சர்க்கரை நோயாளிகள் தாங்கள் எடுத்துக் கொள்ளும் சர்க்கரையின் அளவில் கட்டுப்பாடோடு இருக்க வேண்டியது அவசியமாகிறது . ஒரு 5 கிராம் சர்க்கரையில் 20 –25 கலோரிகள் வரை இருக்கின்றன.

சர்க்கரை நோயாளிகளுக்கு சர்க்கரை பாதுகாப்பானதா? நிபுணர்களின் கூற்றுப்படி ‘சுகர் ப்ரீ' யில் இயற்கையான பொருள்கள் இருந்தால் அது பாதுகாப்பானது. அதில் இரசாயனங்கள் கலக்கும் போது மட்டுமே பாதிப்பு ஏற்படுகிறது. கெமிக்கல்கள் நிறைந்த ‘சுகர் ப்ரீ' எலும்புகளையும் பாதிக்க வல்லது. எனவே ‘சுகர் ப்ரீ' யை வாங்குவதற்கு முன் அதில் சேர்க்கப்பட்டுள்ள பொருட்களின் பட்டியலைப் படித்துக் கொள்ளுங்கள்.





‘சுகர் ப்ரீ'யுடன் ஒப்பிடும் போது தாவரத்தில் இருந்து பெறப்படும் ஸ்டீவியா சிறந்ததாக கூறப்படுகிறது. ஹெல்த்லைன் படி, ஸ்டீவியா ஒன்றை வீட்டில் நடவு செய்து அதன் இலைகளை ‘சுகர் ப்ரீ' மாத்திரைகளாக பயன்படுத்துவது சிறந்தது. இந்த மாத்திரைகள் கடைகளிலும் கிடைக்கின்றன.

‘சுகர் ப்ரீ' இனிப்புகளை சாப்பிடலாமா? இந்த ‘சுகர் ப்ரீ' யை நிறைய இனிப்புவகைகளில் கூட தற்போது பயன்படுத்துகின்றனர். லட்டு, கேக் அல்லது புட்டிங் போன்ற நிறைய இனிப்பு வகைகளிலும் பயன்படுத்தி வருகிறார்கள். இது குறைந்த கலோரிகளைக்கொண்டது. ஆனால் இருப்பினும் இதில் சேர்க்கப்பட்டுள்ள நெய், க்ரீம் போன்றவை நீரிழிவு நோயாளிகளுக்கு உடல் பருமனை ஏற்படுத்துகின்றன. அவர்களை ஆரோக்கியமற்றதாக மாற்றுகிறது. ‘சுகர் ப்ரீ' உணவாக இருப்பினும் கார்போஹைட்ரேட் அளவில் குறைவு இல்லை.

சிலருக்கு இரத்த சர்க்கரை அளவு தொடர்ச்சியாக அதிகமா




கும் போது அவர்கள் சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரைக்குப் பதிலாக ‘சுகர் ப்ரீ'யைப் பயன்படுத்துகின்றனர். அதே நேரத்தில் மருத்துவர்கள் ‘சுகர் ப்ரீ'யை கூடக் குறைந்த அளவில் பயன்படுத்த வலியுறுத்துகின்றனர். டாக்டர்களின் கூற்றுப்படி, அதிக எடை கொண்ட சர்க்கரை நோயாளிக்கு 1,800 கலோரி உணவு இருக்க வேண்டும். இதே மெலிந்த உடல் வாகு கொண்டவர்கள் 2000 – 2200 கலோரிகள் வரை பெறலாம். அதிகப்படியான உடல் பருமன் உடைய சர்க்கரை நோயாளிகள் ஒரு நாளைக்கு 1500 கலோரிகளுக்கு மேல் தாண்டக் கூடாது. சர்க்கரையை தவிருங்கள். குழந்தைகளை ‘சுகர் ப்ரீ'யை சாப்பிட அனுமதிக்காதீர்கள். ஹெல்த்லைன். கொம் தகவலின் படி, சில செயற்கை இனிப்புகள் மற்றும் ‘சுகர் ப்ரீ' போன்றவை நீரிழிவு நோயை ஏற்படுத்துகின்றன. அதே மாதிரி சில பக்க விளைவுகளையும் ஏற்படுத்துவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

# ரபோவா வெற்றி!

முபாடாலா உலக ரென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் நட்சத்திர வீராங்கனை மரியா ரபோவா வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

தோள்பட்டைக் காயம் காரணமாக நீண்டகாலம் விளையாடாமல் இருந்த ரபோவா, 2019 இல் மொத்தமாக 15 போட்டிகளில் மாத்திரமே விளையாடியிருந்தார்.

இந்நிலையில் அபுதாபியில் நடைபெற்று வரும் முபாடாலா போட்டியில் பங்கேற்ற அவர் ஆரம்பத்தில் ஆஸ்திரேலிய வீராங்கனை அஜிலாவை 6 - 4, 7 - 5 என்ற நேர் செற்களில் வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளார்.



# தினேஷ் கார்த்திக்கே தொடர்ந்தும் தலைவர்




கொல்கத்தா நைட் ரைடர் அணிக்கு தினேஷ் கார்த்திக்கே தொடர்ந்தும் அணித்தலைவர் எனப்பயிற்சியாளர் மெக்கலம் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியின் தலைவர் இயன் மோர்கனை கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி வாங்கியுள்ளது. அவரது தலைமையில்தான் இங்கிலாந்து அணி உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தது.

இதன் காரணமாக கொல்கத்தா அணிக்கும் அவர் தலைவராக நியமிக்கப்படலாம் என்று கருதப்பட்டது. ஆனால் இதனை கொல்கத்தா அணியின் தலைமைப் பயிற்சியாளர் பிரெண்டன் மக்கலம் மறுத்துள்ளார்.

'நிச்சயம் தினேஷ் கார்த்திக்தான் எங்கள் அணித்தலைவர். அதில் மாற்றம் இல்லை.

தற்போது சிறந்த அணித்தலைவர்களில் ஒருவராக மோர்கன் விளங்குகிறார். தினேஷ் கார்த்திக்கிற்கு உதவுவதில் மிக பொருத்தமானவராக மோர்கன் இருப்பார்' எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# தந்தை போலவே மகனும் சாதனை!

ராகுல் டிராவிட்டின் மகன் 14 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் போட்டியில் இரட்டைச் சதம் அடித்துச் சாதனை படைத்துள்ளார்.



ராகுல் டிராவிட்டின் மகன் சமித், கர்நாடாகாவில் நடந்த 14 வயதுக்கு உட்பட்ட மாநில அளவிலாக கிரிக்கெட் போட்டியில் கலந்து கொண்டார். துணைத்தலைவர் லெவன் அணியின் கப்டனாக இருக்கும் சமித், தார்வாட் மண்டலுக்கு எதிரான ஆட்டத்தில் 250 பந்துகளில் 201 ஓட்டங்கள் எடுத்து குவித்தார். இந்தில் 22 பவுண்டரிகளும் அடங்கும்.

சகலதுறை வீரரான சமித் 2 ஆவது இன்னிங்ஸில் 94 ஓட்டங்கள் குவித்து பந்து வீச்சில் 26 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகளைக் கைப்பறியுள்ளார்.

இருப்பினும் தார்வாட் அணிக்கு எதிரான துணைத் தலைவர் லெவன் அணி மோதிய போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

சிறுவயத்திலிருந்தே கிரிக்கெட் மீது மிகுந்த ஆர்வமாக இருந்த சமித்துக்கு தொடக்கத்தில் டிராவிட் பயிற்சி அளித்துள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டில் 12 வயதிற்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட்டில் சமித் மூன்று அரைச் சதங்கள் அடித்துள்ளார். இவை அனைத்தும் வெற்றியாக அமைந்துள்ளன.

இவர் வருங்காலத்தில் தந்தையை போல சிறந்த கிரிக்கெட் வீரராக இருப்பார் என்று அனைவரும் வாழ்த்து தெரிவித்து வருகின்றன



# நடாலுக்கு விருது

சர்வதேச ரென்னிஸ் சம்மேளனத்தின் உலக சம்பியன் விருதுகள் வழுங்கப்பட்டுள்ளன.

ஆடவர் பிரிவில் ரபேல் நடாலுக்கும், மகளிர் பிரிவில் ஆஷ்லி பர்டிக்கு விருதுகள் வழுங்கப் பட்டுள்ளன.

உலகின் முன்னணி வீராங்கனையான ஆஷ்லி பர்டி, கடந்த 2014 இல் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்காக ரென்னிஸை விட்டு விலகினார்.

எனினும், மீண்டும் 2016 இல் ரென்னிஸ் போட்டியில் இணைந்த பர்டி, பிரெஞ்சு ஓபன் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியிருந்தார்.

அதேபோன்று உலகின் முதல் நிலை வீரராக நான்காவது முறையாக சீசனை நிறைவு செய்யும் நடால், பிரெஞ்சு ஓபன், யு.எஸ் ஓபன் பட்டங்களை வென்றுள்ளார்.

மேலும் டேவிஸ் கிண்ணப்பட்டத்தை ஸ்பெயின் வெல்லவும் உதவியிருந்தார்.

இதற்காக அவருக்கு ஐ.டிஎப்பின் ஸ்டெபான் எட்பர்க் விருது மூன்றாவது முறையாகவும் வழுங்கப் பட்டுள்ளது.

# ஐ.பி.எல். ஏலத்தில் சென்னை வாங்க நினைத்த வீரரை கோடிக்கணக்கில் எடுத்த மும்பை அணி!

இந்தியாவில் நடைபெற்ற ஐ.பி.எல். ஏலத்தின்போது ஆஸ்திரேலியா வீரரை எடுப்பதற்காக சென்னை மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகளுக்கிடையே கடும்போட்டியே நிலவியது.

அடுத்த ஆண்டு நடக்கவுள்ள ஐ.பி.எல். தொடருக்கு ஏலம் கடந்த 19 ஆம் திகதி தொடங்கியது. இதையடுத்து நேற்று முன்தினம் தொடங்கிய இந்த ஏலத்தில் யாரும் எதிர்பார்க்காத வகையில் சுழற்பந்து வீச்சாளர் பியூஸ் சாவ்லாவை சென்னை அணி 15 கோடி ரூபாவுக்கு மேல் எடுத்தது.

இதனால் சென்னை ரசிகர்கள் என்னடா இது தேவையில்லாமா இவருக்கு இவ்வளவு காசா என்று டுவிட்டரில் கதறி வருகின்றனர். அதற்கு அணி நிர்வாகமோ சாவ்லாவை எடுப்பதற்கு முக்கிய காரணமே டோனி தான் என்று தெரிவித்தது.

இந்நிலையில் இந்த ஏலத்தின்போது ஆஸ்திரேலியா அணியின் வேகப்பந்து வீச்சாளரான குல்டர் நைலை எடுப்ப தற்குச் சென்னை அணி மிகுந்த ஆர்வம் காட்டியது, இருப்பினும் மும்பை அணியும் அவரை எடுப்பதில் ஆர்வம் காட்ட, இரு அணிகளுமே ஏலத்தில் போட்டி போட்டு பணத்தை அறிவித்தன.

ஆனால் இறுதியில் மும்பை அணி அவரை 20 கோடி ரூபா கொடுத்து ஏலத்தில் எடுத்தது குறிப்பிடத்தக்கது.



SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
WesternUnion WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தினை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்
உலகெங்குமிருந்து உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை
No.303, K.K.S. Road, Jaffna. Srilanka. Tel: 021 222 2670/5392 Fax: 021 222 3214
Email: srimurugan09@gmail.com srimurugan303@gmail.com














தமிழ் ஊடக உலகில் அண்மைக் காலமாக ஜொலிக்கும் கேலிச் சித்திரக் கலைஞரான ச.தர்மதாஸனின் (செல்வனின்) கார்ட்டூன் படங்கள் அடங்கிய 'காலவரை' நூல் இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் 'வீரகேசரி' வாரவெளியீட்டின் பிரதம ஆசிரியர் ஆர். பிரபாகரன் தலைமையில் நடைபெறுகின்றது.

இலங்கையில் மூன்று மொழி இதழ்களின் கேலிச் சித்திரக்காரர்கள் மத்தியில் 2018 ஆம் ஆண்டு ஜனாதிபதி விருதுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது ஓவியர் இவராவர். அந்த விருதை அவர் பெறுகின்றமையை முதல் படத்திலும், அதையொட்டி வீரகேசரி நடத்திய சிறப்பு நிகழ்வில் வீரகேசரி நிர்வாக இயக்குநர் குமார் நடேசன் மற்றும் பிரமுகர்களால் அவர் கௌரவிக்கப்படுகின்றமையை அடுத்த வரிசைப் படத்திலும் காணலாம்.

அவரின் மேற்படி நூல் அண்மையில் நோர்வேயில் வெளியிட்டு வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம் மூன்றாவது வரிசையில் உள்ளது. வெளியீட்டு விழா மேடையில் நூலாசிரியரின் சகோதரர் ஊடகவியலாளர் அமரதாஸ் யாழ் போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி, இலங்கையில் முன்னர் சமாதான முயற்சிகளுக்கு அனுசரணைப் பணி வகித்த நோர்வே அரசியல் பிரமுகர் எரிக் சொல்ஹெய்ம், கவிஞர் சேரன் ஆகியோர் காணப்படுகின்றனர். நூலில் இடம்பெற்றுள்ள அவரின் சில காட்டூன் கீழே பிரசுரமாகின்றன.














காலைக்கதிர் Kalaikathir



# பாலியல் வல்லுறவுக் குற்றத்திற்கு பல்வேறு நாடுகளிலும் உள்ள தண்டனைகள்!



இந்தியா சுதந்திரம் அடைந்திருந்தாலும், இன்னமும் பெண்களுக்கு போதிய பாதுகாப்பு கிடைக்கவில்லை என்றுதான் கூற வேண்டும். உலகிலேயே மிகவும் மோசமான ஒரு குற்றம் என்றால் அது பாலியல் வன்புணர்வு என்னும் கற்பழிப்பு குற்றமாகத்தான் இருக்க முடியும். இந்தியாவில் பெண்களின் மீதான பாலியல் வன்கொடுமை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கின்றன. இன்றைய சமூகத்தில் பெண்களால் சுதந்திரமாக நடமாட முடியவில்லை.

சிறிய குழந்தைகளையும் விட்டு வைக்காமல் சில காம கொடூரர்கள் மோசமாக நடந்து கொள்வதோடு, சமூகத்தில் எவ்வித அச்சமும் இல்லாமல் சுதந்திரமாகச் சுற்றிக் கொண்டும் இருக்கின்றனர். இம்மாதிரியான குற்றவாளிகள் இந்தியாவில் மட்டுமே சுதந்திரமாக எந்தவொரு பயமும் இல்லாமல் சுற்றிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால் உலகின் பல நாடுகளில் இம்மாதிரி கற்பழிப்பு, பாலியல் குற்றங்களுக்கு மிருகத்தனமான தண்டனைகள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் அந்த நாடுகளில் கற்பழிப்பு குற்றங்களை புரியவே பலர் அஞ்சுவார்கள். இக்கட்டுரையில் கற்பழிப்பு குற்றங்களுக்கு மற்ற நாடுகளில் கொடுக்கப்படும் கொடூரமான தண்டனைகள் என்னவென்று கூறப்பட்டுள்ளன.

### சீனா

சீனாவில் பாலியல் பலாத்காரத்திற்கு மரண தண்டனை கொடுக்கும் சட்டம் உள்ளது. சில சமயங்களில் குற்றத்தின் தீவிரத்தைப் பொறுத்து, இங்கு குற்றவாளிகளின் ஆணுறுப்பு துண்டிக்கப்படுமாம்.



### ஈரான்

ஈரானில் பாலியல் பலாத்காரம் செய்யும் குற்றவாளிகளைத் தூக்கிலிடுவார்கள் அல்லது பொது மக்கள் முன்னிலையில் சுட்டு கொல்வார்கள். சில சமயங்களில், குற்றவாளிகள் பாதிக்கப்பட்டவர்களின் அனுமதியால் மரண தண்டனையில் இருந்து தப்பிப்பார். இருப்பினும், 100 சவுக்கடி அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்படுவார்.

### நெதர்லாந்து

எந்த வகையான பாலியல் குற்றங்களும், ஏன் விருப்பமில்லாத முத்தங்கள் கூட நெதர்லாந்தில் பாலியல் வன்முறைக் குற்றமாகக் கருதப்படுகிறது. இந்த குற்றவாளிகளுக்கு வயதைப் பொறுத்து 4 முதல் 15 வருடங்கள் வரை சிறை தண்டனை அளிக்கப்படும். வேறு எந்த நாடுகளிலும் இல்லாத ஒரு சட்டம் நெதர்லாந்தில் உள்ளது. அது என்னவென்றால் விபச்சாரம் செய்பவர்களுக்கு பாலியல் துன்புறுத்தல் நடந்தாலும், நெதர்லாந்தில் 4 வருடம் சிறை தண்டனை அளிக்கப்படும்.

### பிரான்ஸ்

பிரான்ஸில் கற்பழிப்பு குற்றத்தை மேற்கொண்டவர்களுக்கு சித்திரவதையுடன் 15 வருடம் சிறை தண்டனை விதிக்கப்படுகிறது. மேலும் இந்த தண்டனை 30 வருடங்கள் வரை நீட்டிக்கப்படலாம் அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட சேதத்தைப் பொறுத்து ஆயுள் தண்டனை விதிக்கப்படும்.

### ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தானில் ஒருவர் கற்பழிப்பு குற்றத்தைப் புரிந்தால், குற்றவாளிகளை நான்கு நாட்களில் தலையில் சுட்டு மரணத்தை தண்டனையாக அளிப்பார்களாம்.

### வட கொரியா

வட கொரியாவில் கற்பழிப்பு போன்ற குற்றங்களுக்கு பாசம் எதுவும் பார்ப்பதில்லை. இங்கு பாலியல் பலாத்காரத்திற்கு உடனடியாக தலையில் சுட்டுக் கொல்லும் படி நீதி வழங்கப்படுமாம்.



### ரஷ்யா

ரஷ்யாவில், பாலியல் குற்றம் புரிபவர்களுக்கு 3 வருடத்திற்கும் அதிகமாக சிறை தண்டனை அளிக்கப்படுகிறது. மேலும் பாதிக்கப்பட்டவர்களின் நிலைமையைப் பொறுத்து, தண்டனையானது 30 ஆண்டுகள் வரை செல்லலாம்.

### சவுதி அரேபியா

சவுதி அரேபியாவில் ஒருவர் பாலியல் பலாத்கார குற்றத்தைப் புரிந்து நிரூபிக்கப் பட்டுவிட்டால், அந்த நபர் பொது மக்களின் முன்னிலையில் தூக்கிவிடப்படுவார்.

### ஐக்கிய அரபு அமீரகம்

அமீரகம் ஐக்கிய அரபு அமீரகத்தில், கற்பழிப்பு குற்றத்திற்கு தண்டனையாக குற்றவாளிக்கு தூக்கு தண்டனை வழங்கப்படுகிறது. இந்த குற்றத்தைப் புரிந்தவர்களுக்கு இழப்பீடு எதுவும் இல்லை. மேலும் குற்றம் புரிந்த 7 நாள்களுக்குள் தண்டனை நிறைவேற்றப்படும்.

### கிரீஸ்

கிரீஸில், குற்றம் சாட்டப்பட்டவர் பாலியல் குற்றம் புரிந்த குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், அவர் சிறையில் அடைக்கப்படுவார்.

### எகிப்து

எகிப்தில் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட நபர் பொது இடங்களில் தூக்கிலிடப்படுகிறார். இதனால் இந்த கொடூர குற்றத்திற்கான விளைவுகளை மக்கள் அறிந்து, இனிமேல் இம்மாதிரியான குற்றத்தினை யாரும் புரிய யோசிப்பர்.



### அமெரிக்கா

அமெரிக்காவில் இருவகையான சட்டங்கள் உள்ளன. ஒரு கற்பழிப்பு வழக்கு கூட்டாட்சி சட்டத்தின் கீழ் வந்தால், பாலியல் பலாத்காரத்திற்கு அபராதம் அல்லது ஆயுள் தண்டனை வழங்கப்படலாம். கற்பழிப்பு தண்டனைக்கான மாநில சட்டங்கள் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றன.

### நோர்வே

நார்வேயில், கற்பழிப்பு குற்றத்திற்கு 4 முதல் 15 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்படுகிறது. ஆனால் இதில் பாதிக்கப்பட்டவரின் பாதிப்பைப் பொறுத்து ஆண்டுகள் நீட்டிக்கப்படும்.

### இஸ்ரேல்

இஸ்ரேலில், பாலியல் பலாத்காரத்திற்கு குறைந்தது 4 வருடங்கள் முதல் அதிகபட்சமாக 16 வருடங்கள் வரை தண்டனை விதிக்கப்படுகிறது.

---

# இறந்தவரின் உடலின் சாம்பலை சூப்பில் கலந்து குடிக்கும் மக்கள்!



இறந்த உடலின் சாம்பலை சூப்பில் கலந்து குடிக்கும் விநோத பழக்கம் கொண்ட ஒரு பழங்குடியினர் பற்றியதுதான் இந்தத் தகவல்–

உலகம் முழுவதும் இருக்கும் நரமாமிசங்களை சாப்பிடும் பழங்குடியினர்களை பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். பொதுவாக பழங்குடியினர்கள் என்றாலே நரமாமிசம் சாப்பிடுபவர்கள் என்று நீங்கள் நினைத்தால் அது தவறான ஒன்றாகும். ஏனெனில் முற்றிலும் சைவ உணவுகளை மட்டுமே சாப்பிடும் பழங்குடியினர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

நரமாமிசம் மட்டுமின்றி நம்மை அதிர்ச்சியில் ஆழ்த்தும் பல சடங்குகள் பழங்குடியினரிடம் உள்ளன. அந்த வகையில் நம்மை அதிர்ச்சியில் ஆழ்த்தும் ஒரு பழங்குடியினர் இனம்தான் அமேசான் மழைக்காடுகளில் வசிக்கும் யனொமாமி பழங்குடியினர். இந்த பழங்குடியினர் அவர்களின் வினோதமான செயல்களுக்கும், சடங்குகளுக்கும் புகழ் பெற்றவர்கள். இவர்களின் சில சுவாரஸ்யமான மற்றும் அதிர்ச்சியான வாழ்க்கை முறைகளை இந்த பதிவில் பார்க்கலாம்.

### வினோதச் சடங்கு

தங்கள் இனத்தவர்களின் இறந்த உடலை எரித்து அவர்களின் சாம்பலை சாப்பிடும் வினோத பழக்கம் இவர்களிடம் உள்ளது. இவர்கள் இனத்தில் ஆண்கள், பெண்கள் யாராக இருந்தாலும் நிர்வாணமாகத்தான் சுற்றித் திரிகிறார்கள். மேலும் திறந்தவெளி கூடாரத்தில் வசிக்கிறார்கள்.

### யார் இவர்கள்?

இவர்கள் யனோமாமி பழங்குடியின மக்கள், இந்த பழங்குடி அமேசான் மழைக்காடு பிராந்தியத்தில் 200 - 250 கிராமங்களில் பரவியுள்ளது. மனித சாம்பலால் செய்யப்பட்ட சூப்பை குடிக்கும் பாரம்பரிய மரண சடங்கை அவர்கள் கடைப்பிடிக்கின்றனர். அது அவர்களின் உறவினராக மட்டுமே இருக்க வேண்டிய அவசியமில்லை, அது அவர்களின் குலத்தைச் சேர்ந்த யாராக வேண்டுமென்றாலும் இருக்கலாம்.

### இவர்களின் நம்பிக்கை

இந்த பழங்குடியினர்களுக்கு மரணத்தின் மீது நம்பிக்கையில்லை. அதற்கு மாறாக இவர்களின் எதிர்ப் பழங்குடியினரான ஷாமன் இனத்தை சேர்ந்தவர்கள் தங்களைத் தாக்க தீய சக்திகளை அனுப்புகிறார்கள் என இவர்கள் நம்புகிறார்கள். இதற்கான தீர்வாக அவர்கள் நினைப்பது இறந்த உடலை அகற்றுவதும், தகனம் செய்வதும் ஆகும்.



### ஏன் சாம்பலை சாப்பிடுகிறார்கள்?

இறந்தவர்களின் அஸ்தியை உட்கொள்வது தங்கள் அன்பான பழங்குடி உறுப்பினரின் ஆவிக்கு உயிரூட்ட ஒரு வழியாக அமையும், இது வருங்கால சந்ததியினருக்கு அதிர்ஷ்டத்தைத் தரும் என்று அவர்கள் நம்புகிறார்கள். இதன் மூலம் அவர்கள் இறந்தவர்களின் ஆன்மாவிற்கு அமைதி அளிப்பதுடன் அவர்கள் மீண்டும் பிறக்கவும் வழிவகுப்பதாக இவர்கள் நம்புகிறார்கள்.

சாம்பல் சூப் எப்படி தயாரிக்கப்படுகிறது?

இறந்த உடல் இலைகளின் மூலம் மூடப்பட்டு ஆட்கள் யாரும் இல்லாத காட்டில் வைக்கப்படுகிறது. 30 முதல் 45 நாள்களுக்குப் பிறகு அவர்கள் சிதைந்த உடலில் இருந்து எலும்புகளைச் சேகரித்து தகனம் செய்யும் வழிமுறைகளை தொடர்கின்றனர். இந்த எலும்புகள் எரிக்கப்பட்டு அவை புளிப்பான வாழைப்பழங்களில் இருந்து தயாரிக்கப்பட்ட சூப்புடன் கலக்கப்படுகிறது.

ஒருவர் இறந்து விட்டால் அவரின் சாம்பல் மூலம் தயாரிக்கப்படும் சூப்பை கிராமத்தில் இருக்கும் அனைவரும் குடிக்க வேண்டும். இதனை நிறைவேற்ற இந்தப் பிரிவு மக்கள் இருக்கும் அனைத்து கிராமங்களுக்கும் இந்த சூப் அனுப்பப்படுகிறது. இதனை ஒரே மூச்சில் குடிக்க வேண்டும் என்பது கட்டாயமான நடைமுறையாகும்.

இந்தக் காலகட்டத்திலும் இந்த நடைமுறைகள் வழக்கத்தில் உள்ளது உலக மக்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.



பற்றி எரியும் காடுகள்

# ஒருபுறம் பற்றி எரியும் காட்டுத் தீ மறுபுறம் நீரின்றிப் பெரும் வறட்சி



தண்ணீரின்றித் தவிக்கும் மந்தைகளுக்கு பவுஸர்களில் நீர் விநியோகம்

ஆஸ்திரேலியாவில் கடும் வறட்சி நிலவும் நியூசவுத்வேல்ஸ் மாகாணத்தில் 3 லட்சம் லீற்றர் தண்ணீர் திருடப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஆஸ்திரேலியாவின் தென் கிழக்கு பகுதியில் உள்ள நியூசவுத்வேல்ஸ் மாகாணத்தில் கடும் வறட்சி நிலவுகிறது. பருவநிலை மாற்றம் காரணமாகவும், போதிய மழை இல்லாததாலும் அங்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. அதிக வெப்பம் காரணமாக அங்குள்ள முக்கிய அணைகளின் நீர்மட்டம் முன்னெப்போதும் இல்லாத வகையில் குறைந்துள்ளது. இதன் காரணமாக அங்கு தண்ணீரைப் பயன்படுத்த அந்த மாகாண அரசு பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

கிரேட்டர் சிட்னி, புளூ மவுண்டன்ஸ் மற்றும் இல்லாவாரா பகுதி மக்கள் காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சக் கூடாது; 2 வாளி தண்ணீர் கொண்டுதான் வாகனங்களைக் கழுவ வேண்டும்; நீச்சல் குளத்தில் தண்ணீர் நிரப்ப சிறப்பு அனுமதி பெற வேண்டும் என்பன உள்ளிட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு இருக்கின்றன.

இந்தக் கட்டுப்பாடுகளை மீறும் தனி நபர்களுக்கு 150 அமெரிக்க டொலர்கள் வரையும், வணிக நிறுவனங்களுக்கு 550 டொலர்கள் வரையும் அபராதம் விதிக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. இதனால் அந்த மாகாண மக்கள் தண்ணீருக்காகக் கடும் தவிப்புக்கு உள்ளாகி உள்ளனர். தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவும் சூழலில் நியூசவுத் வேல்ஸ் மாகாணத்தில் தண்ணீர் திருட்டு சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன.

இந்த நிலையில் அங்குள்ள இவான் பிளைன்ஸ் நகரில் இருக்கும் பொதுத் தண்ணீர்த் தொட்டியில் இருந்து, சுமார் 3 லட்சம் லீற்றர் தண்ணீரை மர்ம நபர்கள் திருடிச் சென்றனர். மர்ம நபர்கள் எப்போது, எப்படித் தண்ணீரைத் திருடி சென்றனர் என்பது தெரியவில்லை. இது குறித்துக் கடும் அதிர்ச்சி தெரிவித்துள்ள பொலிஸார் தண்ணீரைத் திருடியவர்களைத் தீவிரமாகத் தேடி வருகிறார்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

**ஆஸியின் நியூசவுத்வேல்ஸ் மாகாணத்தை வாட்டி வதைக்கும் இயற்கைப் பேரிடர்கள்**

லொறி, டிராக்டர் உள்ளிட்ட வாகனங்களில் யாராவது தண்ணீர் எடுத்துச் செல்வது குறித்துத் தெரிய வந்தால், உடனடியாகத் தகவல் தெரிவிக்க வேண்டும் எனப் பொதுமக்களை பொலிஸார் அறிவுறுத்தி உள்ளனர். மேலும் இதே போன்ற தண்ணீர்த் திருட்டு சம்பவங்கள் மேலும் அதிகரிக்கக்கூடும் என்பதால் பொதுத் தண்ணீர்த் தொட்டிகள் உள்ள பகுதிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஒருபுறம் இருக்க, அங்கு கட்டுக் கடங்காமல் எரிந்து வரும் காட்டுத்தீ பெரும் பிரச்சினையாக உருவெடுத்து உள்ளது. அங்கு கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக சுமார் 100 இடங்களில் காட்டுத்தீ பற்றி எரிந்து வருகிறது. பல லட்சம் ஹெக்டேர் அளவிலான நிலப்பரப்பு காட்டுத்தீயில் எரிந்து நாசமாகி உள்ளது. நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் காட்டுத்தீயை அணைக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு உள்ளனர். காட்டுத்தீ காரணமாக நியூசவுத்வேல்ஸ் மாகாணத்தில் 7 நாள்களுக்கு அவசரகாலநிலை பிரகடனப் படுத்தப்பட்டு உள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு சிட்னி அருகே காட்டுத்தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த தீயணைப்பு வாகனத்தின் மீது மரம் முறிந்து விழுந்ததில் ஜெப்ரி கீரிடன் (வயது 32), ஆண்ட்ரூ (36) ஆகிய 2 தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திலேயே பலியாகினர்.

இதற்கிடையே விடுமுறையைக் கொண்டாட அமெரிக்காவுக்குச் சுற்றுலா சென்றிருந்த ஆஸ்திரேலிய பிரதமர் ஸ்காட் மொரிசன் தனது பயணத்தை ரத்துச் செய்துவிட்டு நாடு திரும்பி உள்ளார்.

மேலும் தண்ணீர் பற்றாக்குறை மற்றும் காட்டுத்தீ பிரச்சினையால் நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் நிலைமை மோசமாகி இருக்கும் சூழலில்தான் சுற்றுலா சென்றதற்காக மக்களிடம் அவர் மன்னிப்பு கோரியுள்ளார்.



ஈரத் தன்மையேயின்றிப் பாளம் பாளமாக வெடித்துக் கிடக்கும் நீரோட்ட நிலங்கள்.



# தூக்கம் நம் கண்களைத் தழுவட்டுமே!

## நல்ல நித்திரை வேண்டுமா? அதற்குத் தயாராவது எப்படி?

மிகவும் களைப்பாகிச் சலித்துவிட்டதா? நம் அனைவருக்கும் அந்த அனுபவம் ஏற்பட்டிருக்கும், படுக்கைக்குப் போய் ஓய்வெடுத்தே ஆக வேண்டும் என்று தோன்றும். ஆனாலும் உங்களால் ஆழ்ந்து தூங்க முடியாது.

ஆனால் கவலைப்பட வேண்டாம். படுக்கைக்குச் செல்லுமுன் வழக்கமாக என்ன செய்யலாம் என்பதை எல்லோரும் கற்றுக் கொள்ளலாம்.

**1. உண்மையிலேயே களைப்பாக இருக்கிறீர்களா என்பதை உறுதி செய்யவும்.**

இது வெளிப்படையானதாகத் தோன்றும். ஆனால் படுக்கச் செல்வதற்கு நீங்கள் தயாராக இருந்தால், இரவில் தூங்கிவிடுவது மிகவும் எளிமையானது.

இருந்தபோதிலும், இரவில் அதிக நேரம் கண் விழித்திருப்பவர்கள், மற்றவர்கள் 'சாதாரணமாக' தூங்கும் நேரமாகக் கருதும் நேரத்தில் தூங்க முடியாமல் சிரமப்படுவார்கள்.

இது உங்களைப் பற்றியதாக இருக்கிறது என்று தோன்றினால், பகல் நேரத்தில் முடிந்தவரை அதிக நேரம் இயற்கை வெளிச்சத்துக்கு உங்கள்



உடலை ஆட் படுத்துங்கள். காலையில் எழுந்ததில் இருந்தே இதைத் தொடங்குங்கள்.

உடலின் கடிகாரத்தை சீக்கிரம் தூங்கும் வகையில் தயார்படுத்த, இவர்களுக்கு இந்த நடைமுறை உதவும் என்று விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

பகல் நேரத்தில் போதிய அளவு உடற்பயிற்சி செய்வதும் முக்கியமானது; ஆனால் படுக்கப் போவதற்கு 4 மணி நேரத்துக்கு முன்னதாக உள்ள நேரத்தில் உடற்பயிற்சி செய்வதைத் தவிர்த்திடுங்கள். ஏனெனில் அப்போது உருவாகும் அட்ரீனலின் உங்களை விழித்திருக்கச் செய்யும்.

உடல் தளர்ந்தவராக இல்லாவிட்டால் அல்லது குறைந்த நேரம் தூங்குபவராக இல்லாவிட்டால், பகல் நேரத்தில் தூங்குவதை – குறிப்பாக மாலை 4 மணிக்குப் பிறகு தூங்குவதைத் தவிர்த்திடுங்கள். அவ்வாறு தூங்குவது இரவில் தூக்கம் வருவதை தள்ளிப்போடும்.

**2. எதை சாப்பிடுவது, பருகுவது என்பதில் கவனமாக இருங்கள்.**

படுப்பதற்கான நேரத்துக்கு, அதிக நேரம் முன்னதாகவே தூக்கத்துக்கான பயணம் தொடங்கிவிடுகிறது – ஆறு மணி நேரத்துக்கு முன்பே தொடங்குகிறது. சொல்லப்போனால், காபின் கலந்த பானத்தை அதற்கு முன்னதாக நிறுத்திவிட வேண்டும்.

காபின் உங்கள் உடலில் ஒன்பது மணி நேரம் வரை இருக்கும். எனவே இரவில் நல்ல தூக்கம் வர வேண்டும் என்று நீங்கள் உண்மையிலேயே விரும்பினால், மதியம் 12 மணிக்குப் பிறகு டீ, காபி மற்றும் வாயுக்கள் கொண்ட பானங்களை தவிர்த்திடுங்கள்.

உங்களால் முடியுமானால், படுப்பதற்கு நான்கு மணி நேரத்துக்கு முன்னதாக இரவு உணவை முடித்துக் கொள்ளுங்கள். கடின தன்மை உள்ள (தூக்கத்தைத் தடுக்கக் கூடியவை) அல்லது சர்க்கரை உள்ளவற்றை (இரவில் உங்களை எழுப்பி விடக் கூடியது) தவிர்த்திடுங்கள்.

படுக்கப் போகுமுன் மது அருந்துவதைத் தவிர்த்திடுங்கள். சீக்கிரம் தூங்கச் செய்ய மது உதவக்கூடும். ஆனால் தூக்கத்தின் தன்மையை அது பாதிக்கும் என்பது கெட்ட செய்தி. கற்றல் மற்றும் நினைவாற்றலுக்குத் தேவையான ரெம் தூக்கம் என்பது பாதிக்கப்படும்.

படுக்கப் போகுமுன் மது அருந்தினால் சிறுநீர் கழிப்பதற்காக இரவில் நீங்கள் எழுந்திருக்க வேண்டியிருக்கும்.

**3. படுக்கப்போகுமுன் ரிலாக்ஸ் பயிற்சி செய்வதை வழக்கமாக்கிக் கொள்ளுங்கள்.**

படுக்கப் போவதற்கு முன் அனுபவித்து செய்யும் ரிலாக்ஸ் பயிற்சிகள் மனதளவிலும், உடல் ரீதியாகவும் உணர்வுகளை இலகுவானதாக ஆக்கும்.

அதை திரும்பத் திரும்ப செய்வதன் மூலம், தூங்குவதற்கான நேரம் வந்துவிட்டது என்ற அறிகுறியை காட்டுவதாக, உங்கள் உடலும், மனதும் அவற்றை நினைவுபடுத்திக் கொள்ளும்.

இளம்சூடான நீரில் குளிப்பது அல்லது தியானம் செய்தல், துணைவர் அல்லது குடும்பத்தினருடன் பேசுவது, நாட்குறிப்பு எழுதுவது, புத்தகம் படிப்பது அல்லது மங்கலான விளக்கு வெளிச்சத்தில் இசை கேட்பது என்பவையாக அவை இருக்கலாம்.

தூக்கத்தை கொண்டு வருவதற்கு பொருத்தமான இசை எது? தூக்கத்தின் இடைநிலைகள் என்ன என்றும், தூக்கத்தின் சுழற்சியில் ஒவ்வொரு கட்டத்திற்கும் பொருத்தமான பின்னணி இசை எதுவாக இருக்கும் என்றும் 2015 ஆம் ஆண்டில் இசையமைப்பாளர் மேக்ஸ் ரிச்டர், நரம்பியல் நிபுணர் ஒருவரிடம் கேட்டார்.

அவருடைய ஆராய்ச்சி "தூக்கத்தில்" முடிவடைந்தது. நல்ல இரவுநேர தூக்கம் என்பது எட்டு மணி நேரம் கொண்டது என அதில் முடிவுக்கு வந்தனர்.

குறிப்பிட்ட இசையின் பாணியை திரும்பத் திரும்ப, குறைந்த அதிர்வலையில் கேட்பது தூக்கத்தை தூண்டும் – "மெதுவான அலைகள் கொண்ட" தூக்கமாக அது இருக்கும் – குறுகிய கால நினைவாற்றலுக்கும், மூளைக்குள் தகவல்களை பதியச் செய்வதற்கும் இது முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

ஆனால் நீங்கள் எந்த வகையான இசையைத் தேர்வு செய்தாலும், அது உங்களை ரிலாக்ஸ் செய்வதாக இருக்க வேண்டும்.

**4. நிம்மதியான, தூய்மையான தூக்கத்தை பழக்கிடுங்கள்**

படுக்கப் போவதற்கு முன்னதாக குளிக்க அல்லது பல் துலக்க வேண்டும் என்று அர்த்தம் கிடையாது. செய்ய வேண்டாம் என்று சொல்ல முடியாது.



நல்ல தூய்மையான தூக்கம் என்பது தூக்கத்துக்கு வழக்கமான நேர அட்டவணையை உருவாக்குவது, உணர்வைத் தூண்டும் உணவு வகைகள் மற்றும் மதுவைத் தவிர்ப்பது, தூக்கத்துக்கான சூழலில் கவனம் செலுத்துவது ஆகிய தூக்க சூழ்நிலைக்கு பொருத்தமான சூழலை உருவாக்குவதை இது குறிக்கும்.

நம் படுக்கை அறைகள் என்பது தூக்கத்துக்கான இடமாக இருக்க வேண்டும், மற்றவற்றுக்கு குறைந்த இடமே தர வேண்டும்.

பெரும்பாலானவர்கள் இருளான அறையில், பொருள்கள் குவித்து வைக்காத, குளுமையான மற்றும் பிற சாதனங்கள் இல்லாத, கவனத்தை திருப்பும் அம்சங்கள் இல்லாத அறையில் நல்ல தூக்கத்தைப் பெறுகின்றனர்.

நீங்கள் எங்கே இருந்தாலும், படுக்கப் போவதற்கு



குறைந்தது ஒரு மணி நேரம் முன்னதாக திரைகளைப் பார்க்காத நேரமாக ஆக்கிக் கொள்ளுங்கள். (டி.வி. செல்போன், கம்ப்யூட்டர் இல்லாத நேரமாக ஆக்கிக் கொள்ளுங்கள்.) பெரும்பாலான டி.வி.கள், ஸ்மார்ட் போன்கள் வெளிப்படுத்தும் எலக்ட்ரானிக் ப்ளூ வெளிச்சம் உங்கள் மூளையை அதிக நேரம் விழிப்பாக வைத்துக் கொண்டிருக்கும்.

ரேடியோ, இசை அல்லது பாட்காஸ்ட்களில் இசை கேட்டுக் கொண்டிருந்தால், நீங்கள் தூங்கிய பிறகு தானாக ஓவ் ஆகும் வகையில் 'டைமர் செட்' செய்து கொள்ளுங்கள்.

**5. தூக்கத்தை முதன்மை ஆக்கிக் கொள்ளுங்கள்.**

வெற்றிகரமான தொழிலதிபர்கள் மற்றும் உலகத் தலைவர்கள் இரவில் நான்கு மணி நேரம் மட்டுமே தூங்கினர் என்ற பெருமையான கதைகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். ஆனால், பெரும்பாலான மக்களுக்கு அது சாத்தியமில்லை.

சில மணி நேரத்தில் தூக்கம் கலைந்து தெளிவாகி விட்டாலும், சிறிது நேரம்தான் தூங்கினோம் என்ற தொடர் எண்ணம், உங்களுக்கு உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை பாதிப்பதாக அமைந்துவிடும்.

ஐந்து மணி நேரத்துக்கும் குறைவாகத்தான் தூங்குவது என்ற பழக்கம் தொடருமானால், மாரடைப்பு, பக்கவாதம் அல்லது புற்றுநோய் வருவதற்கான ஆபத்தை அதிகரித்துக் கொள்கிறீர்கள் என்று அர்த்தம். தூக்கக் குறைபாடு உங்கள் ஆயுளைக் குறைக்கும் என்று மருத்துவப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வழக்கமான தூக்க நேர அட்டவணையைப் பின்பற்றுவதன் மூலம், பரிந்துரைக்கப்பட்டவாறு தினமும் இரவில் ஏழு முதல் எட்டு மணி நேரம் வரை தூங்குவதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

அதாவது தினமும் படுக்கைக்கு செல்லும் நேரமும், காலையில் எழும் நேரமும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் – வார இறுதி நாள்களிலும் கூட.

*



# ஜனநாயகம் சாவை நோக்கி; இராணுவ'நாயகம்' பிறப்பு!

**உக்கிரன்**

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்று இந்த மாதம் 18ஆம் திகதியுடன் முழுமையாக ஒரு மாதம் முடிவுற்றுவிட்டது. தேர்தல் காலத்தில் கோட்டாபய தொடர்பாக என்னென்ன ஊகங்கள் வெளியிடப்பட்டனவோ அவற்றை நோக்கி அச்சொட்டாக ஆட்சி நகர்வதைக் கவனிக்க முடிகிறது.

முன்னைய ஜனாதிபதிகள் பொதுவான இடங்களிலும், அரச மாளிகைகளிலும் தங்கள் பதவியேற்பை மேற்கொண்டனர். ஆனால், கோட்டாபய வழமைக்கு மாறாக சிங்கள பௌத்தர்களின் புராதன பெருமைக்குரியதெனப் போற்றப்படும் ருவான்வெலிசெய வழிபாட்டுத் தலத்தில் தமது பதவியேற்பை நடத்தினார்.

முன்னைய ஜனாதிபதிகள் தங்களுக்கான தேசிய உடையில் பதவியேற்பில் பங்கேற்றனர். ஆனால், கோட்டாபய அரைக்கை சேர்ட்டும் நீளக்



காற்சட்டையும் அணிந்து இரண்டும் கெட்டான் உடையில் பதவியை ஏற்றுக்கொண்டார். தமது குடும்பப் பாரம்பரியமான குரக்கன் சால்வையைக்கூட அவர் அணியவில்லை.

முன்னைய ஜனாதிபதிகள் ஆறு பேரும் அரசியல் பதவிகள் வழியாக இப்பதவிக்கு வந்தவர்கள் . ஆனால், அரசியல் வழியிலாகவன்றி இராணுவப் பதவி வழியாக ஜனாதிபதிப் பதவிக்கு வந்த முதலாவது ஆள் கோட்டாபய.

தமது பதவியேற்புக்காக அநுராதபுரம் ருவான்வெலிசெய பௌத்த வழிபாட்டுத் தலத்தை இவர் தெரிவு செய்தபோது பல கேள்விகள் எழுந்தன. முக்கியமாக தமிழர்கள் இதனை ஒருவித அச்ச நிலையில் பார்த்தனர்.

துட்டகெமுனு என்ற சிங்கள மன்னன் தமிழ் மன்னனான எல்லாளனைப் போரில் வெற்றி கொண்ட இடமாக இலங்கைச் சரித்திர நூல்கள் குறிப்பிடும் அநுராதபுரத்தில, துட்டகெமுனுவால் நிர்மாணிக்கப்பட்ட ருவான்வெலிசெயவை கோட்டாபய தமது பதவியேற்புக்கு காரணமில்லாமல் தெரிவு செய்யவில்லை.

சிங்களமும் பௌத்தமுமே இலங்கையின் முதன்மைக் கலாசாரமானவையென்று தமது பதவியேற்பில் குறிப்பிட்ட கோட்டாபய, அதனைப் பாதுகாக்கத் தமது தலைமையிலான அரசாங்கம் சகல ஆதரவையும் வழங்குமென சிங்கள, பௌத்தர்கள் மனம்குளிரும்வகையில்குறிப்பிட்டார்.

அரசியல்வாதிகளான முன்னைய ஜனாதிபதிகளும், பிரதமர்களும் அரசியற் பிரமுகர்களும் இதனையே தங்கள் செயற்பாட்டில் நடைமுறைப்படுத்தியமைக்கும், ஓர் இராணுவ அதிகாரியாகவிருந்த கோட்டாபய தமது கொள்கையைத் தமது கன்னி உரையின்போது அறிவித்தமைக்கும் இடையில் பாரிய வேறுபாடு தெரிந்தது.

தமக்குத் தெரிந்த ஆயுத பலத்தால், ஆயுத கலாசாரத்தால், ஆயுத ஆக்கிரமிப்பால் இவரது ஆட்சி நிலைநிறுத்தப்படுமா என்பதே அந்த வேறுபாட்டின் புலப்பாடு. மக்கள் மனதில் எழுந்த அச்சம் கலந்த வேறுபாட்டை இவரது ஒரு மாத கால ஆட்சி நிரூபித்துள்ளதா என்று பார்த்தால், இல்லை என்று கூற முடியாதுள்ளது.

இவரது ஆட்சிக்கு அணி சேர்க்கும் வகையில் போர்க் குற்றம் சுமத்தப்பட்ட மேஜர் ஜெனரல்சவேந்திர சில்வாவை தேர்தலுக்கு ஒரு மாதம் முன்னராக அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்தார். இது கோட்டாபயவுக்கு மிக வாய்ப்பாகப் போய்விட்டது.

பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலாளராக நந்திக் கடல் புகழ் மேஜர் ஜெனரல் கமல் குணரட்ன நியமிக்கப்பட்டுள்ளார். மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் பத்தாண்டுகளும் கோட்டாபய வகித்த பதவி இது. இப்போது பாதுகாப்பு அமைச்சர் யார் என்பது இன்னும் தெரியவரவில்லை. ஆனால் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சராக கோட்டாபயவின் மூத்த சகோதரரான சாமல் ராஜபக்ஷ நியமனம் பெற்றுள்ளார்.

ஜனாதிபதி செயலகப் பிரதம நிர்வாகியாக மற்றொரு இராணுவ ஜெனரல் நியமனமாகியுள்ளார். அதே செயலகத்தின் மேலதிக செயலாளராக முன்னாள் கடற்படை அதிகாரி அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே நியமனம் பெற்றுள்ளார்.

தேசிய புலனாய்வுத்துறையின் பணிப்பாளராக பிரிகேடியர் சுரேஷ் சாலே நியமிக்கப்பட்டுள்ளார். இப்பதவிக்கு நியமனம் பெற்ற முதலாவது இராணுவ அதிகாரி இவரே என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய ஊடக பணிப்பாளர் பதவி பிரிகேடியர் சந்தன விக்கிரமசிங்கவுக்கு கிடைத்துள்ளது.



விமானப் போக்குவரத்துச் சபையின் தலைவராக முன்னாள் இராணுவத் தளபதி சந்திரசிறி நியமனமாகியுள்ளார். வடமாகாண சபையின் ஆளுனராகவிருந்த இவர் அதற்கு முன்னர், யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாகவுமிருந்தவர்.

துறைமுக அதிகார சபையின் தலைவராக மற்றொரு முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க நியமனமாகியுள்ளார்.

அதிரடியாக இராணுவ சேவையிலிருந்த மூவர் ஜெனரல்களாகவும், 25 பேர் பிரிகேடியர்களாகவும், 34 பேர் லெப்டினன்ட் கேர்ணல்களாகவும் (மொத்தம் 63 பேர்) ஒரே சமயத்தில் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். இப்படி ஒரே வேளையில் இத்துணை பேருக்கு இவ்வாறு இராணுவத்தில் பதவியுயர்வு வழங்குவது வரலாற்றில் முதல் தடவையாகும்.

இத்தனையும் ஒரு மாதத்தில் இடம்பெற்ற – வெளியேயே தெரிய வந்தவை. தெரியாதவை இன்னமும் எவ்வளவோ இருக்கலாம்.

ரணில் விக்கிரமசிங்க அரசில் அமைச்சராகவிருந்த பாட்டாலி சம்பிக 2016ஆம் ஆண்டின் வாகன விபத்தொன்று தொடர்பாக நீதிமன்ற கட்டளை ஏதுமின்றி கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர்களான சரத் பொன்சேக, ராஜித சேனரத்ன ஆகியோரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதாக சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தமிழர்களே இலங்கையின் பூர்வீக குடிகள் என்று அடித்துக் கூறிய முன்னாள் முதலமைச்சர் சி.வீ. விக்னேஸ்வரனைக் கைது செய்யுமாறு பௌத்த மத அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

கடத்தப்பட்டு பாலியல் தொந்தரவுக்குள்ளாக்கப்பட்டார் என முறைப்பாடு செய்த சுவிஸ் தூதரக பெண் ஊழியரை பொய் முறைப்பாடு என்ற குற்றச்சாட்டில் சிறைக்குள் தள்ளியுள்ளனர்.

புலிகள் மீள்எழுச்சி என்ற பெயரில் வடக்கிலும் கிழக்கிலும் முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் சிலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரசியல் பீடங்களில் படைத்துறையினர் அமர்த்தப்படுவதும், அரசியல் பழிவாங்கலில் முன்னைய ஆட்சியாளர்கள் கைது செய்யப்படுவதும், மீண்டும் புலிகள் என்ற பெயரில் போராளிகள் சுற்றி வளைக்கப்படுவதும்



பகிரங்கமாக அரங்கேற்றப்படுகின்றன.

மெதுமெதுவாக ஆரம்பமாகும் அரச பயங்கரவாதம், அடுத்த ஏப்ரல் மாதமளவில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலுக்கு பின்னர் வேகமடையலாமென எதிர்வு கூறப்படுகிறது.

கோட்டாபய உருவாக்கிவரும் இராணுவ வலையாக்கம், இலங்கையில் இராணுவ 'நாயக' ஆட்சியை ஏற்படுத்துமா?



# பிரபாகரனிடம் கூறி நானேதான் கூட்டமைப்பை உருவாக்கினேன்

## இப்படிச் சொல்கிறார் கருணா



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்குவதற்கு ஆதரவு வழங்கியவர்கள் சிவராம், ஜெயானந்தமூர்த்தி போன்றவர்கள்எனதமிழர்ஜக்கியசுதந்திரமுன்னணியின் தலைவர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று ஆலயடிவேம்பு கலாசார மண்டபத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

புலம்பெயர் தேசங்களில் இருந்து பல இளைஞர்கள் என்னைத் தொடர்பு கொண்டு தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியைக் கட்டி எழுப்புங்கள்,நாங்கள்அவற்றுக்கானஅனைத்து உதவிகளையும் செய்கின்றோம் எனத் தெரிவிக்கின்றனர். அந்த அளவுக்கு ஒரு சக்தி அணி திரண்டு வருகின்றது. கூட்டமைப்பு ஒரு நாள் உடையும். அதற்கு மாற்று கட்சியாகத் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி வளரும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்குவதற்கு ஆதரவு வழங்கியவர்கள் சிவராம், ஜெயானந்தமூர்த்தி போன்றவர்கள்.

ஜெயானந்தமூர்த்தி நானும் சிறுவயது முதல் ஒன்றாகப் பழகியவர்கள். நான் யுத்தத்துக்காக ஆயுதம் தூக்கிச் சென்றவேளை ஜெயானந்தமூர்த்தி பேனையைத் தூக்கி எழுத்துக்களால் சமூகத்தைச் செதுக்கச் சென்றார். சிவராம், ஜெயானந்தமூர்த்தி போன்றவர்கள் துணிந்து தமிழ் சமூகத்திற்கு நடந்த அநீதிகளை எழுத்துக்கள் மூலம் வெளிப்படுத்தியவர்கள்.

தொப்பிகல காட்டுக்குள் என்னைச் சந்தித்து சிவராம் மற்றும் ஜெயானந்தமூர்த்தி எமது மக்களுக்கு நடக்கும் அநீதிகளை வெளியுலகுக்குக் கொண்டு வரவேண்டும், அதற்கு எமது நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் வேண்டும் எனக் கேட்டுக்கொண்டனர். அதன்பின்னரே ஒரு கட்சியை உருவாக்கி அவர்களின் பிரதிநிதித்துவத்தை அனுப்பி வைப்போம், அவர்கள் நமது பிரச்சினைகளை அங்கு எடுத்துரைப்பார்கள் என நினைத்தேன்.

இதேபோன்றுதான் ஜரிஸ் போட்ட போராட்டமும், அவர்களின் அரசியல் பிரதிநிதிகளும் நாடாளுமன்றத்தில் இருந்தமையால் உலகுக்கு வெளிக்கொணரப்பட்டது. அதன் பின்னர் விடுதலைப் புலிகளின் தலைவரிடம் நான் எடுத்துரைத்தேன். அதன் பின்னர் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது – என்றார்.

இந்தச் சந்திப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சே.ஜெயானந்தமூர்த்தி, அம்பாறை மாவட்ட தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி ஆதரவாளர்கள் உடனிருந்தனர். (ஐ)



5 ஆவது முறையாக

hp

விருது




தொடர்ந்து 5 வருடங்களாக hp இன் சிறந்த விற்பனை பங்காளர் விருதை வென்ற வட மாகாணத்தின் hp இன் ஒரே ஒரு உத்தியோகபூர்வ வர்த்தக பங்காளர் (Commercial Partner)

நாங்கள் தான் என்று சொல்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

எம்முடன் இணைந்து பயணித்த வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள், நலன்விரும்பிகள், அரச நிறுவனங்கள், அரசசார நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள், விநியோகஸ்தர்கள், எமது நிறுவன உத்தியோகத்தர்கள்

அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்

உங்களால் தான் எம்மால் இந்த இலக்கை அடைய முடிந்தது.

NALIN Information Technologies(Pvt)Ltd.
Computers of the North

# பிள்ளையானை விடுவிக்குமாறு மஹிந்தவிடம் கோரிய கருணா!



கொழும்பு, டிசெ. 22

கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் பிள்ளையானை விடுதலை செய்ய பிரதமர் மஹிந்தவிடம் கோரிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார் என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான கருணா அம்மான் என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று ஆலயடிவேம்பு கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மக்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட பின்னர் பொதுமகன் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

திருகோணமலையில் எங்கள் கட்சியின் கட்டமைப்பு முன்னெடுக்கப்படுகிறது. முன்னாள் முதல்வர் பிள்ளையானின் விடுதலைக்கு பல முயற்சிகளை மேற்கொள்பவன் நான். நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து பயணிப்பது தான் இலக்கு என கருணா அங்கு குறிப்பிட்டார்.

# ஹஜ் பயண விடயத்தை இம்முறை நேரில் கண்காணிக்கிறார் மஹிந்த

கொழும்பு, டிசெ. 22

இம்முறை ஹஜ் பயணங்களை மேற்கொள்ளும் யாத்திரிகர்கள் நலன்கருதி அந்த விடயத்தை நேரடியாகக் கையாளும் பொறுப்பை சவூதியில் உள்ள இலங்கைத் தூதுவரிடம் வழங்கப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் எனத் தெரிகிறது.

ஏற்கனவே கடந்த காலங்களில் ஹஜ் விவாகரத்துக்குப் பொறுப்பாக அரசியல்வாதிகளை நியமித்தயைாலும், எண்ணற்ற ஹஜ் முகவர்கள் எமுந்தமானமாகநியமிக்கப்பட்டமையாலும் சாதாரண மக்கள் ஹஜ் யாத்திரை மேற்கொள்ள முடியாமல் வசதி படைத்தவர்கள் மாத்திரம் செல்லக் கூடிய நிலைமை இருந்தது எனப் பல தரப்பிலும் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து பிரதமர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் என அறிய முடிந்தது.

இதன்படிஹஜ்ஏற்பாடுகளுக்கான பயணம் என்று ஆளுங்கட்சி முஸ்லிம் அரசியல்வாதிகள் எவரும் சவூதி செல்லமுடியாதெனவும் ஹஜ் கோட்டாக்களை வழங்குவது கூட ஒரு பொறிமுறையின் கீழ் மேற்கொள்ளப் படவுள்ளதாகவும் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் குறிப்பிட்டன. (ஐ)

# வீட்டுத்திட்ட நிதியை வழங்குமாறு அரசிடம் கோரும் செல்வம் எம்.பி.



வவுனியா, டிசெ. 22

வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக நாடு முழுவதும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள வீட்டுத்திட்டங்களுக்கான நிதியை வழங்குமாறு பிரதமரிடம் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செலவ்ம் அடைக்கலநாதன் கோரியுள்ளார்.

இது குறித்து அவர் பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு: –

வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டு மக்கள் தமது பங்களிப்புடன் அவற்றைக் கட்ட ஆரம்பிக்குமாறு கோரப்பட்டிருந்தனர். அவற்றுக்குரிய நிதி அரசினால் வழங்கப்படும் என உத்தரவாதம் வழங்கப்பட்டிருந்தது. அதனை நம்பி எமது மக்கள் தமது சொத்துக்களை அடகு வைத்தும் கடன் வாங்கியும் வீடுகளை கட்டத் தொடங்கியிருந்தனர். அரசால் அவற்றுக்குரிய நிதி இதுவரை வழங்கப்படவில்லை. இதனால் மக்கள் நிதி நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

மேலும், அநேகமான வீடுகள் நிதிப் பற்றாக்குறையினால் பாதி கட்டப்பட்ட நிலையில் உள்ளன. தற்போது ஏற்பட்ட கனமழை, வெள்ளம் காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்களைஎதிர்நோக்கியுள்ளனர். வாழ்விடம் இன்றி அல்லலுறுகின்றனர். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த மக்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். இது நாடு முழுவதும் உள்ள ஒரு பாரிய பிரச்சினையாகும்

எனவே வீடமைப்பு அமைச்சராக உள்ள தாங்கள் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான நிதியை வழங்கி பாதி கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை முழுமையாகக் கட்டுவதற்கும், கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்கள் நிதி நெருக்கடியில் இருந்து மீள்வதற்கும் விரைந்து நடவடிக்கை எடுத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன் – என்றுள்ளது. (ஐ – 100)

# நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் உயர்வு

கொழும்பு, டிசெ. 22

மொரகாகந்த நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் அதிகரித்திருப்பதன் காரணமாகஅம்பன்கங்கையைச்சுற்றியுள்ள மக்கள் அவதானமாக இருக்குமாறு இடர் முகாமைத்துவ நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்தோடு எலஹெர, பகமூண, தியபெதும, அதரகங்லேவ, கிரிஓய ஆகிய பிரதேச மக்களையும் எச்சரிக்கையாக இருக்குமாறு அந்த நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, சீரற்ற வானிலை காரணமாக வாகரை – பணிச்சங்கேணி பகுதியில்ஏற்பட்டுள்ளவெள்ளத்தின் 23 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.12.2019 இல் வெளியிடப்பெற்றது.